உ
சிவமயம்



# திருவெம்பாவை கதிர்மணி விளக்கம்

அமரர்

## திருமதி கந்தையா பரமஞானம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவுமலர்

௨௦௨௨

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கரம்பகம் எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும்,
பழைய கோரகன்கட்டு முரசுமோட்டையை
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்

# திருமதி கந்தையா பரமஞானம்

அவர்களின்

**சிவபதப்பேறு குறித்த**

**நினைவு மலர்**

**18.01.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் கடமைக்கோர் உதாரணமாய் எமது வாழ்வில் ஒளியேற்றி நேசத்துடனும், பாசத்துடனும் நித்தமும் எம்மை எல்லாம் வழி நடத்திய எம் அன்பான தாயார் மார்கழி மாதத்தின் திருவெம்பாவை ஒன்பதாவது நாள் நடராசப்பெருமானுக்கு ஆர்த்திராபிஷேகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனின் பாதாரவிந்தத்தை சென்றடைந்தமையால் மாணிக்க வாசக சுவாமியாரால் (திருவெண்ணா மலையில்) அருளிய “திருவெம்பாவை” என்னும் பதிகத்தை உரைநடையுடன் கூடிய இம் மலரை காணிக்கை யாக்குகின்றோம்.

**இங்ஙனம்,**

**மக்கள், மருமக்கள்**

**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



**உதயம்**
**18.07.1930**

**இதயம்**
**19.12.2021**

## அமரர்

# திருமதி கந்தையா பரமஞானம்

அவர்களின்
திதி நிர்ணய வெண்பா

**ஆண்டு பிலவ வருடம் அண்டி வரும் மார்கழியில்
பூண்டதோர் பூரணையில் - வேண்டியே
கொடை வள்ளல் பரமஞானம் தில்லைத்
திருவடியின் அரனடிசேர்ந்த நாள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டடு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிறந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்துசிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிருவாரூரின்
மழவிடையாற்கு வழிவழியாளாய் மணஞ்
செய்குடி பிறந்த
பழவடி யாரோடுங் கூடிய எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றான்

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்- புகழ் பாடி
முத்தனாமாறெனப் பெருவாழ்வின்
முந்தியே சேர்வதற்-கருள்வாயே
உத்தமா தானசற் குணர் நேசா
ஒப்பிலா மாமணிக்-கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப்- பெருமாளே.

## வாழ்த்து

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அல்கில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரையடி வீரகத்திப் பிள்ளையார் திருப்பாதம் வேண்டல்**

குவயல் சூழ் எம்பெருமான் திருவருளே
ஒளி வீசும் வீரகத்திப் பிள்ளையாரே
அயல் சூழ் மக்களுக்கு பெருஒளியை தருவாயே
பலமரங்கள் செழித்திரக்கும்
கயல் விழியாள் கையெடுத்த தெய்வமே
காலம் மெல்லாம் காத்தவரே
புயல் வரும் போதெல்லாம் எம்மை
காத்திட்ட கடவுளரே காப்பாய்.

**வேம்படி அம்மன் திருப்பாதம் வேண்டல்**

மதுரைமா நகரை தீக்கிரையாக்கிய
கண்ணகி பெருந்தாயே
சிட்டிவேரம் பதியில் உறைந்தருளி
அருள் கொடுக்கும் கண்ணகியே
வேம்படி பதியில் உறைந்தருளும்
கண்கண்ட தாயே
காலம் எல்லாம் எம்மைக் காத்த
வேம்படி அம்பாள் தாள் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை உரை

நினைவுப் பதிப்பு மலர்ந்த பிரார்த்தனை உரை எழுதுவதற்கு வாய்ப்புக் கிட்டியதை நினைத்து பெரும் உவகை அடைகின்றேன். திருமதி கந்தையா பரமஞானம் திருவெம்பாவை ஒன்பதாம் நாள் பூரணை திதியில் சிவபதம் அடைந்தார். தமிழ் நாட்டில் புண்ணிய பூமியாக விளங்குகின்ற சிதம்பரத்தில் வீற்றிருக்கின்ற தில்லைக் கூத்தனுக்கு சிறப்பாக அந்தணர்கள் பலர் சூழ ஆருத்திரா அபிஷேகம் இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்ற பொழுது அன்னை சிவபதம் அடைந்தார்.

திருமதி. கந்தையா பரமஞானத்தின் மருமகனாகிய சிதம்பரநாதர் ஏகம்பரநாதன் அவர்களின் வேண்டுதலுக்கமைய அமரர் கந்தையா பரமஞானத்தின் மறைவினை நினைவு கூறுமுகமாக மாணிக்கவாசகப் பெருமாள் சிவனருளால் அருளிய திருவெம்பாவை பாடலுக்கு விளக்கத்துடன் கூடிய உரை பதிப்பிக்கின்ற முயற்சி போற்றக் கூடியதொன்றாகும். இறை அருளால் இந்த பெரும் முயற்சி கைகூட வேண்டும் என இறைஞ்சுகின்றேன். சைவ சமய விழுமியங்கள் அருகிவருகின்ற கால கட்டத்தில் உரையுடன் கூடிய பதிப்பு போற்றுவதற்கு உரியதாகும். இறைவன் திருவருள் கைகூட வேண்டும் என மீண்டும் வேண்டுகின்றேன்.

**பொ.வல்லிபுரநாதன்**
ஆசிரியர் M.A
(யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகை துணை

மிருசுவிலூர்இளஞ்சைவப் புலவர், சிவநெறிச் செல்வர் கமலநாதன் கயிலைவாசன் அவர்களின் பிரார்த்தனை உரை

வையத்துள் வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட அமரர் திருமதி கந்தையா பரம ஞானம் அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளிவரும் திருவெம்பாவை கதிர்மணி விளக்கம் எனும் மலரிற்கு அமரரின் பாசமிகு மருமகனாகிய சைவ சீலர் சி.ஏகாம்பரநாதன் அவர்களின் விருப்பிற்கமைய பிரார்த்தனை யுரை வழங்குகின்றேன்.

திருவெம்பாவை காலத்தில் தில்லைக்கூத்தன் திருவடி சேர்ந்த அன்னார் சைவ நெறியின் உன்னதம் புலப்பட வாழ்ந்த உத்தமர் ஆவார். இவர் பொருட்டு வெளிவரும் திருவெம்பாவை வேண்டிய பொருள் விளக்கங்களுடன் அமையப்பெற்றுள்ளது. திருவெம்பாவைப் பாடல்களுக்கு அற்புதமானதொரு பேருரை செய்தவர் சைவ சித்தாந்த வித்தகர் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் அவர்கள் ஆவார். இத்தகைய பணிகள் ஏனையோருக்கும் தூண்டுதலாக அமையும்

வரணியூர் அமரர் கந்தையா பரம ஞானம் அவர்களின் நினைவாகத் திருவெம்பாவை கதிர்மணி விளக்கப் பேருரையைப் பதிப்பித்த இலவசமாக வெளியிடுவது அனைவரும் அதன்கண் வாழ வழி அமைப்பதற்கே கற்றோரும் மற்றோரும் படித்து பயன்பெறுவதுடன் அமரர் தில்லைக்கூத்தனின் பேரன்பில் நிறைந்திருக்கப் பிரார்த்திப்போமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்
# திருவெம்பாவை
## வரலாறு

தெய்வத்தன்மை வாய்ந்த எம்பாவாய்" என்னுந் தொடர்மொழியை யீற்றிலுடைமையால் இருபது திருப்பாட்டுக்கள் அமைந்த இப் பகுதி திருவெம்பாவை என்னும் பெயருடையதாயிற்று. திரு வென்பது தெய்வத் தன்மை யென்னும் பொருளுடைய மங்கல அடைமொழி யாகும். திருவம்மானை முதலிய மற்றைப் பகுதிகளுக்கும் இஃதொக் கும், மாணிக்கவாசக அடிகள், சிவபெருமான் திருக்கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் பல தலங்களுக்குச் சென்று திருவண்ணா மலையை யடைந்து அங்கே தங்கியிருக்குங்கால் முன்பனிப் பருவத் தொடக்கமாகிய மார்கழித் திங்கள் வந்தது. அப்பொழுது, மணஞ் செய்யப்படாத பெண்கள் பலர் திருவாதிரைக்கு முன் பத்து நாட்டொடங்கி அதிகாலையாகிய வைகறைப் பொழுதில் துயிலுணர்ந் தெழுந்து ஒருத்தியும் பலருமாக இல்லங்கடோறும் சென்று தம் தோழிகளையும் துயிலுணர்த்தி யெழுப்பியதையும், அவ்வெல்லோரும் ஒருங்குசேர்ந்து சிவபெருமான் திருப்புகழை வாயாரப் பாடிக்கொண்டு நீர் நிலைக்குச் சென்று நீராடியதையும் உலகன்னையாகிய பார்வதி தேவியின் திருவுருவைத் தூய ஈர நுண்மணலாற் சமைத்து வழிபட்டுப் பொதுவுஞ் சிறப்புமாகிய பயன் வேண்டியதையும் நேரிற் கண்டு, அப்பெண்கள் புகன்றதாகப் பாடியருளியது இத் திருவெம்பாவையாகும்.

இவ்வுண்மையை,

"மாதர்கொண் மாத ரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க ளெல்லாம்
மேதகு மனைக டோறும் அழைத்திருள் விடிவ தான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல் செய்வார்"

எனவும்,

1. திருவாதவூரடிகள் புராணம் - திருவம் பலச் சருக்கம் -செ.40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. "அன்னவ ரியல்பு கண்டார் ஆங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம் பாவை வாசகம் பேசி" எனவும்

திருவாதவூரடிகள் புராணங் கூறுமாற்றானறிக. இங்ஙனம், உலகியல் நிகழ்ச்சியாகிய மகளிர் விளையாட்டு முதலிய செயல்களில் வைத்து அவர்தங் கூற்றாக அடிகள் அருளிச்செய்த திருவாசகப் பகுதிகள் திரு வம்மானை முதலிய பலவாகும்.

இத் திருவெம்பாவை திருப்பெருந் துறையில் அருளிச்செய்யப்பட்ட தெனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும், திருவண்ணாமலையில் அருளிச் செய்யப்பட்ட தெனத் திருவாதவூரடிகள் புராணமுங் கூறுகின்றன. இவ் விரண்டனுள், பின்னதே வலிவுடைய தென்பதற்கு அகச்சான்று களுஞ் சிலவுள,

"அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும் விண்ணோர்"
"மாலறியா நான்முகனுங் காணா மலையினை"
என வெளிப்படையாகவும்,

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை"
"பாதாள மேழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
"போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிவே"

எனக் குறிப்பாகவும் புலப்பட ஓதியருளிய திருவாக்குக்களே சான்றாவனவாம்.

வாதவூரடிகள் புராணத்தில் நீராடிய துவரை கூறப்பட்டதே யன்றிப் பார்வதி வழிபாடு கூறப்பட்டிலதேயெனின், அதற்கு விடை பின்வருவனவற்றால் அறியலாம்.

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் சைவ வைணவக்கன்னிப் பெண்கள் மழைவளங் குறித்தும், சிறந்த கணவரைப் பெறுதற் பொருட்டும் மார்கழித் திங்களில் வைகறையில் நீராடிப் பராசக்தியா கிய கௌரியை வழிபட்டு, நோன்பு மேற் கொண்டொழுகின ரென்பது, அடிகளருளிய இத் திருவெம்பாவையாலும் திருமால் பத்தியிற் சிறந்த ஆண்டாளருளிய திருப்பாவையாலும் அறியத்தக்கது.

1. திருவாதவூரடிகள் புராணம் - திருவம்பலச் சருக்கம் செ.41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நோன்பிற்கு நூற் பிரமாணம் இன்றெனவும் ஆன்றோராசாரமே பிரமாணமெனவுங் கூறும். ஆயினும், பாகவத புராணத்தில் கண்ணனை மணவாளனகாப் பெற விரும் பிய ஆயர்குலக் கன்னியர், இந் நோன்பை மேற்கொண்டு மார்கழித் திங்களில் வைகறையில் நீராடிப் பார்வதிதேவியை வழிபட்டனரென்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. இதனை,

1. "இன்ன தண்பனிப் பருவநல் லிளநறா வொழுகும்
கன்னி யந்துழாய்க் கண்ணனெங் கணவனா கென்ன
அன்ன மென்னடை யாயர்தங் கன்னியர் நோற்றார்
மன்னு வெம்பனி மால்வரைக் கன்னியைத் தொழுதே"

எனவும்,

2. "பனிநிலாக்கதிர் பரப்பிய முத்தவெண்மணலால்
பனிவ ரைக்கொடி திருவுருப் பாற்பட வகுத்துப்
பனிம லர்த்தொடை சூடியும் பரவியு நோற்றுப்
பனியி றப்பினிற் படர்புன லாடுவான் படர்ந்தார்"

எனவுங் கூறிய செய்யுட்களாலறிக,

இச் செய்யுட்களில் "பனிமால் வரைக் கன்னி" யெனவும், "பனிவரைக் கொடி" யெனவும் கூறியது, பார்வதி தேவியை யென்பது வெளிப் படையாகும். நல்ல மணாளனையடைதற்குக் கௌரி நோன்பே சிறந்ததெனக் கொண்டு வைணவப் பெண்கள் நோற்றன ரென்றால், சைவப் பெண்கள் இந்நோன்பை மேற்கோடல் மிகவும் பொருத்தமா மென்பது நன்கு விளங்கும். இங்கே பாவை யென்றது, பார்வதி யுருவமாக மணலாற் சமைத்த தெய்வப் படிவத்தை யென்பது கருதத் தக்கது. அதனாலே இது பாவை நோன்பாயிற்றென்க, "சக்தியை வியந்தது" என இப் பகுதிக்கு உள்ளுறைப்பொருள் குறித்திருத்தலும் இதனை வலியுறுத்துவதாகும். சத்தி யென்றது, இங்கே பார்வதி தேவியையெனக் கொள்ளல் வேண்டும்,

இத் திருவெம்பாவையைப் போன்ற பிரபந்தங்களைப் "பாவைப் பாட்டு" என்று முன்னோர் வழங்கினரென்பது

1. ஆரியப்பப் புலவர் பாகவதம் - பத்தாங்கந்தம் 9ஆம் அத் - செ, 6
2. ஷை ஷை - செ. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. "சிறுபான்மை பாவைப் பாட்டும் அம்மனைப்பாட்டும் முதலாயின நான்கு அடியினிகந்து வருவனவாயின" 2. "சிற்றெல்லையாகிய பத்தடியளவும் பாவைப் பாடலும் அம்மனைப்பாடலும் போலும் தாவுகொச்சகம் வரும்" எனவும் பேராசிரியர் கூறுமாற்றானறியலாம். யாப்பருங்கல விருத்தி 93- ஆம் சூத்திர வுரையில்,

"கோழியுங் கூவின குக்கில் அழைத்தன
தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியுண் மன்னுவோ மென்றேலோ ரெம்பாவாய்"

என்னும் பாட்டொன்று அவிநயனார் காட்டிய பாட்டென்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

பண்டைக் காலத்துத் தமிழ் நாட்டில் கன்னிப் பெண்கள் தைந் நீராடலைப் பற்றிக் கலித்தொகை ஐங்குறு நூறு நற்றிணை பரிபாடல் முதலிய சங்கச் செய்யுட்களில் விளக்கமாகக் காணலாம். மார்கழித் திங்கள் திருவாதிரையில் தொடங்கும் நீராடல் பூர்ணிமாந்த முறைப் படி தைத் திங்களிலும் தொடர்ந்து நடைபெறுமாதலின், மார்கழி நீராடலும் தைந் நீராடலும் ஒன்றென்ப. 3. ஆயினும், திருவாதவூரடிகள் புராணத்துக் கூறப்பட்டபடி மார்கழி நீராடல் திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன் தொடங்கித் திருவாதிரையில் முடிவுபெறுமென்பதும், தைந் நீராடல் மார்கழித் திருவாதிரையில் தொடங்கி நடைபெறுமென்பதும் இங்கே கண்ட வேறுபாடாகும். நூற்பிரமாண முள்ளனவும் இல்லனவுமாய் மக்கள் வழக்க வொழுக்கங்களிற் காணப்படும் இன்னோரன்ன நிகழ்ச்சிகள், இங்ஙனம் காலாந்தரத்திற் சிறிது சிறிது வேறுபாடெய்தல் இயல்பே. இதற்கு மற்றொரு சான்றும் ஈண்டுக் கருதத் தக்கது. பிங்கலந்தையில் ஐந்து. முதல் ஒன்பது ஆண்டு வரையுள்ள சிறு கன்னிப் பெண் களே பனிநீர் தோய்தற்கும் பாவையாடற்கும் உரியர்

1. தொல் - பொருள் - செய்யுளியல் சூ. 149 உரை
2. ஷை " ஷை " 155 "
3. செந்தமிழ் - தொகுதி. 19 - பக்கம் 428 முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறப்பட்டுள்ளது. சங்ககாலத்துச் சான்றோர் பாடல்களிலும் இவ்விதி தழுவப்பட்டிருத்தல் அறியலாம். அங்ஙனமாகவும் திருவெம் பாவையிலும் திருப்பாவையிலும் முறையே

"கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்க"
"புற்றர வல்குற் புனமயிலே போதராய்"

முதலிய குறிப்புக்களுண்மையால், ஒன்பதாண்டுக்கு மேற்பட்ட கன்னிப் பெண்களும் இந் நீராடலிற் கலந்து கொண்டனரென்பது புலனாம்.

இனி, இம்மார்கழி நீராடலால் விரும்பப்பட்ட பயன் பொதுவும் சிறப்புமாக இருவகைப்படும் என்பர். பொதுப் பயன் நாடு செழிக்க மழை பெய்தல். இதனைப்பதினாறாம் திருப்பாட்டில் பராசத்தியைப் பாராட்டி மழையை முன்னிலைப்படுத்தி,

"முன்னி யவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்"

என்று கூறியிருத்தலானறியலாம். தைந் நீராடல் பற்றிக் கூறிய பரிபாடலில் 1"வெம்பாதாக வியனில வரைப்பென" (இப் பெருநிலம் மழையால் வெம்மை நீங்கப் பெற்றுக் குளிர்வதாக) என்று கூறியிருத்தலும் இதனை வலியுறுத்தும். சிறப்புப்பயன் கன்னியர் சிறந்த கணவரைப் பெறுதல், இதனை,

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவார்" எனவும்,

"எங்கொங்கை நின்னன்ப ரல்லார் தோள் சேரற்க"" எனவுங் கூறியிருத்தலான் அறியலாம். இங்ஙனம் உலகியலில் வைத்துச்சமய வுண்மைகள் பலவற்றையும் புலப்படுத்து அடிகளால் அருளிச் செய்யப்பட்டது இத் திருவெம்பாவை யென்பது தெளிவாம்.

1. பரிபாடல் 11- 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தியை வியந்தது

திருவெம்பாவையின் உள்ளுறைப் பொருளாகக் குறிக்கப்பட்டது. சத்தியை வியந்தது என்பது. சத்தி யென்றது பராசக்தியாகிய உமையம்மையை. அம்மையப்பனாகிய இறைவன் யடைதற்குரிய நெறிகள் பலவற்றுள்ளுஞ் சிறந்தது அன்பு நெறி. அந்நெறியொழுகத் தலைப்படுவாரெல்லோரும் முதலில் அம்மையை வழிபட்டு அவள் மூலம் அப்பனையடைதல் வேண்டுமென்பது பெரியோர் கண்டவுண்மை. கடவுட் பத்தியாகிய பேரன்புண்டாதற்கு. அருள் வடிவினளாகிய இறைவியின் வழிபாடு முதலில் வேண்டத்தக்க தென்ப. "ஆங்கவ னருளாற் பத்தி நன் குண்டாம்" என்பது வாயு சங்கிதை. ஈண்டு அருளென்றது சத்தியை. "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" என்பது சிவஞான சித்தி. இறைவியுடனாக இறைவனை உள்ளத் தமைத்து வழிபடும் சிவாநுபவப் பெருஞ் செல்வரே நம் அடிகள். இவ்வுண்மையை,

"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்"

என்று கூறிய அடிகள் திருவாக்கான் உணர்க. அருட்குண மிக்க இறைவனைத் தலைவனாகவும், அன்பு முதிர்ந்த உயிரைத் தலைவியாகவும் கொண்டு, உலகியலிற் காணப்படும் தலை மக்களுடைய காதல் ஒழுக்கத்தை யேறிட்டு ஞானானுபவப் பொருள் தோன்றச் சமயகுரவர் ஆழ்வார் முதலியோர் பாடலருளிச் செய்திருத்தலைப் பரக்கக் காணலாம். "முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்" என்னுந் தமிழ் மறைப் பாடலிறுதியில் "தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே" என்று கூறப்பட்டுள்ளது. இங்கே நங்கை என்பது பக்குவமுள்ள உயிரையும், தலைவன் என்பது இறைவனையுங் குறித்து நிற்றலறிக. இம் முறையில் அடிகள் தம்மை தலைமகளாகவும், இறைவனைத் தலைமகனாகவும் கொண்டு திருவாசகத்தில் பல திருப்பாட்டுக்கள் அருளிச் செய்துள்ளார். அம் முறையின் தொடக்கம் இத் திருவெம்பாவையேயாகும். இதன் பின்வரும் திருவம்மானை முதலிய பல பகுதிகளும் இக் குறிப்பினவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திருவெம்பாவையில், ஆன்ம நாயகனாகிய இறைவனைய டைவதற்குரிய பக்குவமுதிர்ந்த உயிர்களையே கன்னிப பெண்களாகவும், ஆணவமலவிருளிற் பிணிப்புண்டிருத்தலையே உறங்கிக் கிடத்தலாகவும் மலவாற்றால் ஒளியப்பெறும் நிலையே துயில் நீத்தெழும் நிலையாகவும் மலபரிபாகமுடையவுயிர்கள் அஃதில்லாத வுயிர்களை யுணர்த்தி அன்பு நெறிப்படுத்து இறையருளிற் றோய்வித்தக்கு அழைத்தலையே நீராட அழைத்ததாகவும் அமைத்துக்கொண்டு இஃது அருளிச் செய்யப்பட்டதென்க.
இந் நுண்பொருள்,

"மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகரருள்
செலமுழுக வருகவெனச் செப்பல் திரு வெம்பாவை"

என்னும் திருவாசக வுண்மையில் தெளிவிக்கப்பட்டி ருத்தல் அறிக. பரமான்மாவாகிய இறைவனைத் தலைமகனாகப் பெற்று மணந்து, பேரின்ப வாழ்க்கையிற் றலைப்படுதற்கு விரும்பும் கன்னிப் பெண்களும் தம்மையும் ஒருத்தியாக அடிகள் கொண்டு கூறியபடியாய்,
பராசத்தியாகிய அம்மையின் பெருமை இத் திருவெம்பாவையில்,
"எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடு" எனவும்

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் பாதத் திறம்பாடி" எனவும்,

"முன்னி யவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழை" எனவும், போந்த திருப்பாடற் பகுதிகளில் வெளிப்படையாகவும் மற்றைத் திருப்பாட்டுக்களிற் குறிப்பாகவும் பாராட்டப்பட்டிருத்தல் காண்க. இவ் உண்மை அவ்வப் பாடல்களின் இறுதியில் விளக்கிக் கூறப்படும்.

இனி, இத் திருவெம்பாவைக்குத் தத்துவப் பொருள் கூறும் ஒருசாரார் இத் திருவெம்பாவையில் முதல் எட்டுத் திருப்பாட்டுக்கள் வரை ஒவ்வொரு திருப்பாட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பெண்ணே யெழுப்பப்பட்டனராக, அவ்வெண்மபோடு முதலில் எழுப்பிய ஒருத்தியையுஞ் சேர்த்துக்கணக்கிட ஒன்பதின்ம ராதலின் அவ் வொன்பதின் மரும் நவசத்திகளாவரெனவும், மனோன்மணி, சருவபூததமனி, பலப்பிரமதனி பலவிகரணி, கலவிகரணி, காளி, இரௌத்திரி, சேட்டை, வாமையென்னும் அவ்வொன்பது சக்திகளும் உலகப் படைப்பு நிமித்தம் முறையே முன்னது பின்னதைப்பிரேரித்துணர்த்திய குறிப்பே முதல் எட்டுத் திருப்பாட்டுக்களில் உள்ள தெனவும், இச் சத்திகளின் இயக்கத்தால் மாயை காரியப்பட்டுப் பிருதிவி முடிவான பிரபஞ்சகாரியம் நடைபெறுதலேயே இத் திருவெம்பாவை குறிப்பிற் புலப்படுத்துமெனவும், இது குறித்தே சத்தியை வியந்தது என்னும் உள்ளுறை குறிக்கப்பட்ட தெனவும் கூறுவர். பிரபஞ்ச சிருட்டிக் குறிப்பை இங்கே புலப்படவைத்தற்கு உரிய காரணம் இன்னதென்று யாரும் விளக்கினாரல்லர். அங்ஙனமாயின் ஈண்டு இயைபுடைய வேறுகருத்து என்னை யெனிற் கூறுதும்.

தமிழ் நாட்டில் பெண்களுக்கு ஐந்து முதல் ஏழாண்டு வரை பேதைப் பருவமென்றும், எட்டு முதல் பதினோராண்டு வரை பெதும்பைப் பருவமென்றும், பன்னிரண்டாம் ஆண்டு மங்கைப் பருவத் தொடக்கம் என்றும் தமிழ் நூலார் கூறுவர். ஐந்தாண்டுக்கு முற்பட்ட காலம் குழந்தைப் பருவமாதலின் அது பெண்மைப் பருவத்துள் வைத்துக் கணக்கிடப்படவில்லை. ஆகவே ஐந்து முதல் பன்னீராண்டுத் தொடக் கம் வரை கன்னிமைக்குரிய காலமென்பது தெளிவாம். தமிழ் அகப்பொருணூலாரும் பதினோராண்டும் பத்துத் திங்களும் கழிந்த பின்றை மணப்பருவம் கொண்டமை ஈண்டுக்கருதத்தக்கது. ஆகவே ஐந்து முதல் பன்னிரண்டு வரை ஆண்டுகள் எட்டாகும். இதனாற் கன்னியர் ஐந்தாண்டு முதல் பன்னீராண்டுத் தொடக்கம் வரை ஆண்டுவகையால் எண் வகைப் படுவரென்பது விளங்கும், ஈண்டுப் பாவை மேற்கொண்டவர் இவ்வெண் வகையினரே, முதலில் பன்னீராண்டுத் தொடக்கமுடைய பெரிய கன்னிப்பெண்கள் சிலர் தாமே விடியுமுன் துயில் நீத்தெழுந்து உடல் தூய்மை செய்து கொண்டு இறைவன் புகழைப்பாடிக்கொண்டு தம்மோ டொத்த பருவத்தினளான பன்னீராண்டுத் தொடக்கப் பருவத்து ஒரு பெண்ணை யெழுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், பின்னர் முறையே பதினொன்று ,பத்து, ஒன்பது ,எட்டு, ஏழு, ஆறு ஆண்டுகளான பெதும்பைப் பருவத்தினரையும் பேதைப் பருவத்தினரையும் எழுப்பின ரெனவும் கொள்ளல் வேண்டும்.

ஆகவே ஒன்று முதல் எட்டுத் திருப்பாட்டுக்களிலும் ஒவ்வொரு பருவத்துப் பெண்கனே எழுப்பப்பட்டனர் எனக் கொள்ளுதல் பொருந்தும். ஆண்டில் மூத்த, பெரிய பெண்கள் விடிதற்குச் சில நாழிகை முன்னரே துயில் நீத்தெழுந்தனரென்பதும், ஆண்டில் இளைய, சிறு பெண்கள் நாழிகை ஆக ஆக எழுப்பப்பட்டன ரென்பதும் பொருத்தமாகும். மேலும், முதற்றிருப்பாட்டில் "ஈதேயெந் தோழி பரிசு" என்றமையால் அவள் எழுப்பியவர் பருவ தீதோ டொத்த பருவத்தினள் ஆவாளென்பதும், இரண்டு மூன்று நான்காம் திருப்பாட்டுக்களில் எழுப்பப்பட்டார் மாற்றங் கூறினர் என்று கூறப்பட்டிருத்தலானும், அத் திருப்பாட்டுக்களிலும் ஐந்தாந் திருப்பாட்டிலும் அன்னார் அறிவும் அறியாமையும் பொருந்தி யவராகப் புலப்படுத்தப்பட்டிருத்தலானும் அவர் பெதும்பைப் பருவத்தினர் ஆவரென்பதும்,ஆறு,ஏழு,எட்டாம் திருப்பாட்டுக்களில் எழுப்பப்பட்டவர் மாற்றங் கூறாமையானும், எழுப்பியவர் "மானே" யெனவும் "அன்னே" யெனவும் விளித்தலானும், ஏழாம் திருப்பாட்டில் பருவத்தாற் பேதையேயன்றி இறை புகழில் ஈடுபடாத "வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்" என்று கூறப்பட்டிருத்தலாலும் அவர் பேதைப் பருவத்தினராவர் என்பதும் குறிப்பிற் புலப்பட வைத்தவாறறிக. மேலும் எட்டாத் திருப்பாட்டில் எழுப்பப்பட்டவள் ஐந்தாண்டுச் சிறுமியாதலின் அவளை யெழுப்புங்கால் "கோழி சிலப்பச் சிலம்புங் குருகெங்கும்" என்று வைகறைப் பொழுதின் இறுதிப் பகுதி குறிக்கப்பட்டிருத்தலும் கருதத்தக்கது. ஈண்டு ஐந்து முதல் பன்னீராண்டுத் தொடக்கம் வரை எழுப்பப்பட்டவர் ஒவ்வொருவரெனக் கூறப்பட்டிருப்பினும் உபலக் கணத்தாற் பலராகக் கொள்ளல் வேண்டும். பின்னர் எல்லோரும் ஒருங்கே கூடி இறைவனை முன்னிலைப்படுத்திப் புரிந்தபாடி நீராடி னரென்பது கூறப்பட்டுள்ளது. இடையிடையே உமாதேவியைப் புகழ்ந்து பாராட்டியிருத்தல் காணப்படுதலின் சத்தி வழிபாடு செய்தமையும் பெறப்பட்டவாறறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து முதல் பன்னிரண்டு ஆண்டுப் பருவத்தினர் சிறுமியராக இருத்தலின், வைகறையில் அன்னார் எழுந்து நீர்த்துறை சென்று நீராடற்கு எங்ஙனந்துணிவர் என்று சிலர் ஐயுறக் கூடும். இவ்விளம் பெண்கள் நீராடச் செல்லுங்கால், தாய்மாரும் உடன் செல்லுவர் எனவும், தாயருகே நின்று நீராடுதலின் இஃது அம்பாவாடலாகு மெனவும் பரிபாடல் கூறும். "அம்பாவாடலின் ஆய்தொடிக்கன்னியர்" என்பது பரிபாடல் (11 - 81) ஆதலின், இந் நோன்பிக்குரியர் கன்னியராயினும், அவரைப் பாதுகாக்கும் நிமித்தம் அன்னார் தாய்மாரும் உடன் சென்று துணைபுரிவரென்பது வெளியாதலின் சிறுமியர் துணிவிற்குத் தடையின்றென்பது புலனாகும்.

திருச்சதகத்தில் பொதுவாகக் கூறப்பட்ட பத்தி வைராக்கிய விசித்திரங்களுள், வைராக்கியத்தின் சிறப்பியல்பு நீத்தல் விண்ணப்பத்தில் தெளிவிக்கப்பட்டது. ஏனைப்பத்தியின் சிறப்பியல்பு கூறத் தொடங்கி அப் பத்தியின் விளைவிற்குத் துணை புரியும் உமையம்மையின் பேருபகாரச் செயல் இதன்கட் பாராட்டப்படுகின்றது. இதனால் நீத்தல் விண்ணப்பத்திற்கும் இதற்கும் உள்ள இயைபு புலனாதல் அறிக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா,

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டதுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

**கருத்துரை:** இதன் முன்னர் கூறப்பட்ட நீத்தல் விண்ணப்பத்தின் இறுதித் திருப்பாட்டில் வைதல், வாழ்த்துதலாகிய இரு திறத்தானும் தாம் கூறும் பாராட்டுக்களால் நிகழுங் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று ஆண்டவனை நோக்கி விண்ணப்பஞ் செய்து கொண்ட அடிகள், திருவெம்பாவையின் தொடக்கத் திருப்பாட்டா கிய இதன் கண், முதலும் ஈறுமில்லாத அரிய பேரொளிப் பிழம் பாகவுள்ள இறைவனது இயல்பு வரையறை செய்து பாராட்டுதற்கு அரிய தொன்றென்பதும் அதனால் அக் குற்றம் பொறுக்கத்தக்க தென்பதும் இயன்றாங்குச் செய்யப்படும் வாழ்த்து, வாழ்த்துவோரை யும் கேட்போரையும் இறையன்பிலீடுபடுத்தும் இயல்பின தென்பதும் அதனால், அஃது உயிர்த்தொகுதிகளால் மேற்கொள்ளத் தக்கதென்பதும் ஆகிய இவை குறிப்பாகவும் வெளிப்படையாகவும் புலப்பட அருளிச் செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதவுரை:** வாள் தடம் கண் மாதே – ஒளி பொருந்திய அகன்ற கண்களையுடைய நங்காய், ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை – தொடக்கமும் இறுதியும் இல்லாத அரிய பெரிய ஒளிப்பிளம்பாகவுள்ள இறைவனை, யாம் பாடக் கேட்டேயும் - யாங்கள் புகழ்ந்து பாடக் கேட்டுக்கொண்டும், வளருதியோ - துயில்கின்றாயோ, நின்செவிதான் வன்செவியோ – அல்லது நின்செவிகள் தாம் செவிட்டுச் செவிகளோ, வீதிவாய் - தெருவில், மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய் - சிவபெருமானுடைய நெடிய சிலம்பணிந்த திருவடிகளை யாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்துப் பாடல்களின் ஒலி சென்று, கேட்டலுமே – கேட்கப்பட்ட அளவிலே, (சிவபக்தி மிக்க இவள்) போது ஆர் அமளியின் மேல் நின்றும் புரண்டு – மலர் நிறைந்த படுக்கையிடத்து நின்றும் புரண்டு எழுந்து, விம்மி விம்மி மெய்மறந்து – (பக்தி மிகுதியால்) தேம்பி தேம்பியழுது பின் தன்வயமிழந்து, ஏதேனும் ஆகாள் இங்ஙன் கிடந்தாள் - வேறு எச் செயற்கும் ஆளாகாமல் இவ்வாறு கிடந்தாள், (இவள் செயல் அவ்வாறாக) எந் தோழி பரிசு ஈதே – எங்கள் தோழியாகிய நின் தன்மை இத்தகையதாகவுள்ளது. என்னே என்னே - ஈதென்ன வியப்பு வியப்பு என்பது.

**விளக்கவுரை** – பாவை நோன்பு மேற்கொண்ட கன்னியருள், வைகறையில் தாமே துயிலுணர்ந்தெழுந்து உடற்றூய்மை செய்து கொண்டு நீராடப் போதுவார் சிலர். அந் நோன்பு மேற்கொண்டு நீராடுதற்கு உடன் வருவதாக முன்னைநாளிற்கூறி உரிய நேரத்தில் எழாமல் உறங்கும் ஒருத்தியைத் துயிலுணர்த்து முகமாக அருளிச் செய்யப்பட்டது இத் திருப்பாட்டு. “ வாட்டங்கண்” எனக் கண்ணுக்கு அடைமொழி கூறியது. வைகறைப் பொழுதில் ஒளியுடைமையும் அகற்சியும் இயல்பின் அமையுமாறு விழிக்கத் தக்க கண்கள் எதிர்மறையான இருளுடைமையும் சுருக்கமும் அமைய மூடப்பட்டுக் கிடத்தல் தக்கதன்று என்னுங் குறிப்புத் தோன்ற நின்றது. விழிப்பு நிலையில் ஒளியுடைமையும் அகன்றிருத்தலும், துயிலும் நிலையில் ஒளியின்மையும் சுருங்கியிருத்தலும் கண்களுக்கு உளவென்பது எளிதினறியத்தக்கது.

**ஆதி** – தொடக்கம் ஈண்டுத் தோற்றமென்னும் பொருட்டு மாயாகாரியமாகிய உலகமெல்லாம் தோன்றி யொடுங்குதற்குத் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்களனாதலின்றித் தனக்குத் தோற்றமும் இறுதியும் இல்லாதவன் இறைவன் என்பார். "ஆதியும் அந்தமும் இல்லா" என்றார்.
திருச்சதகத்தில்,

"போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற மாகிநீ தோற்ற மில்லாய் போற்றி யெல் லாவுயிர்க்கும் ஈறாயீ றின்மை யானாய்" என்று அடிகள் அருளிச் செய்திருத்தலும் காண்க. இங்ஙனம் ஆதியும் அர்த்தமில்லாப் பரம் பொருளை மெய்யுணர்வுடையார் பேரொளிப் பிழம்பாக வுணர்ந்து அனுபவித்தன ரென்ப. ஒளி நிலையைத் திருமூலர் அண்டவொளி, பிண்டவொளி, அகண்டவொளியென மூவகைப்படுத்திக் கூறுவர்.
1. அண்டவொளி ஞாயிறு, திங்கள், விண்மீன் முதலியனவற்றி னுள்ளது. பிண்டவொளி உடம் போடு கூடிய உயிரறிவிலுள்ளது. அகண்டவொளி ஞானமயமாகிய இறைவன்பாலுள்ளது. "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்று தாயுமானவர் கூறியதுங் காண்க. ஒற்றுமை நயத்தால் அகண்டவொளியாகவே இறைவனைக் குறிக்கொண்டு பரஞ்சோதி எனவும், பெருஞ்சோதி எனவும் பேரொ ளிப் பிழம்பு எனவும் பெரியோர் வழங்குவர். இங்ஙனம் இறைவன் பேரொளிப் பிழம்பாகத் திகழவும், மாயாகாரியமாகிய உலகப் பார்வை உடைய ஆன்மாக்கள் உணர்தற்கு அரியனாவான் என்பது தோன்ற, "அரும் பெருஞ் சோதியை" என்றார். அருமை – பாசஞான பசுஞானங்களாகிய வாக்கு மனங்களுக்கு எட்டாத தன்மை: பதிஞானமாகிய அநுபவ உணர்வுக்கே புலப்படும் இயல்பினன் என்பதாம். 2 "வாக்கு மனாதீத கோசரமாய் நின்ற அதுவே" என்னும் சிவ ஞானபோதக் கருத்தும் ஈண்டு அறியத்தக்கது. "மனவாக்கினிற் றட்டாமல் நின்றதெது" என்பதும் இக் குறிப்பினதே. அரும் பெருஞ் சோதியாகிய விளங்கும் இறையியல்பைக் குறித்துச் சிவானந்தலகரி என்னும் வடமொழி நூலில் சங்கராசாரிய சுவாமிகள் கூறிய ஒரு சுலோகக் கருத்து இங்கே ஒப்பு நோக்கி யின்புறத்தக்கது.
அதன் மொழி பெயர்ப்பு வருமாறு:-

**பசுபதியாகிய இறைவ! தாமரை நாயகனாகிய ஒரு சூரியன் விண் மண்**

1. **திருமந்திரம் - செ. 2086**
2. **சிவஞானபோதம் சூ. 6. அதிகரணம் 2**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதும் நிறைந்த பெரிய இருட் குழுவையொட்டிக் காண்பார் கண்களுக்கும் புலனாகின்றான். நீ கோடி சூரிய ஒளியுடையவனாக இருந்தும், கண்களுக்குப் புலனாகாமையோடு சிறிய என் அகவிருளையும் போக்குகின்றாயல்லை. என் அகவிருள் நின்னால் ஒழிக்க இயலாத அத்துணை வலியை எங்ஙனம் உடையதாகும்? ஆதலின், அஞ்ஞானம் முழுதையும் ஒழித்துக் காட்சி தந்தருளு வாயாக" என்பது.

இனி, திருமாலும் பிரமனும் அடியும் முடியும் தேடியறிய இயலா தபடி பேரொளிப் பிழம்பாக இறைவன் நின்ற வரலாறு திருவண்ணா மலையில் நிகழ்ந்ததெனப் புராணம் கூறுமாதலின், அவ் வுண்மையை "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி" என்னும் தொடர் குறிப்பிற் புலப்படுத்தி நிற்றலும் அறிக. யாம் என்றது, மனமொழிகளுக்கு எட்டாத இறைவன் திருப்புகழை உணர்ந்து பாடுவதற்குத் தகுதியற்ற மானுடச் சிறுமியராகிய யாங்கள் என்பது படநின்றது. பாடுதற்குத் தகுதியில்லேமாயினும், "பத்தி வலையிற் பாடுவோன்" என்பது கேட்டிருக்கின்றோ மாதலின், அன்பினாற் பாடலானே மென்பார், "யாம்பாட" எனவும், நீயும் வைகறையில் விழித்தெழுந்து எங்களுடன் கூடி இறைவன் திருப்புகழைப் பாட வேண்டியது கடமையாகவும், அதனைச் செய்யாமை யோடு, யாங்கள் நின்வாயில் வந்து பாடுதலைக் கேட்டுக் கொண்டும் விழித்தெழாது பொய்யுறக்கங் கொள்கின்றனையோ என்பார். "கேட்டேயும் வளருதியோ" எனவுங் கூறினரென்க. கேட்டேயும் என்புழி ஏகாரம் இசை நிறை. கேட்டும் என்றபடி. வளர்தல் - கண் வளர்தல், துயிலுதல் 1 "ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்தது" என் புழி அப்பொருட்டாதல் அறிக. இனி, "மாதே"யென விழித்து வாட்ட டங்கண் வளருதியோ வெனக் கோடலுமாம் வன்செவி – தனக்குரிய ஓசையாகிய புலனைப் பற்றுதற்குரிய உணர்ச்சியற்ற செவி. பொய் யுறக்க மின்றேல் கேட்டற்குரிய நின் செவிகள் தாம் செவிடோ வென்றாரென்பது. வளருதியோ, வன்செவியோ என்னும் ஈரிடத்தும் ஓகாரம் எதிர்மறை: உறக்கமுமன்று: செவிடுமன்று என்பதையு ணர்த்தி நின்றது. யாம்பாடக் கேட்டுத் துயிலுணர்ந்து விழித்தெழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்குக் காரணம் நீராட வருதலில் விருப்பமின்மையே யாமேன்று கருதினாரென்பது.

இனி, ஆண்டவனிடத்து அப்பெண்ணுக்குள்ள அன்பின் குறையை அவள் உணருமாறு அவளோடொத்த மற்றொரு பெண்ணின் பேரன்பையெடுத்துக்காட்டி யுணர்த்துவாராயினர். அப் பேரன்பி னளாகக் கருதப்படும் பெண்ணைக் குறிப்பிட்டு, "இவளைத் துயிலுணர்த்த முன்னர் சென்றோம். செல்லுங்கால் இவள் இல்லத்தை யணுகுதற்கு முன் தெருவில் யாம்கூடி அரும் பெருஞ் சோதியைப் பாடத்தொடங்குதற்குக் காப்பாக அப் பெருமான் திருவடிகளை வாழ்த்தத் தொடங்கினோம்" என்பார். "மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி" என்றார் என்க. மாதேவன் என்பதும் பேரொளிப் பிழம்பாகவுள்ளவன் என்னும் பொருளுடைய தாயினும், "ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதி" என்பது இறைவனுடைய சொருப லக்கனம் எனப்படும் சிறப்பு இயல்பு பற்றியும் மாதேவன் என்பது பொது வியல்பு பற்றியும் கூறப்பட்டன என்பது கருதத்தக்கது. 1. அரும்பெருஞ் சோதியைப் பாடுதற்கு அப் பெருமான் திருவடிகளே காப்பாகத் தக்கன வென்பது கருத்து. ஆன்றோர் நூன்முகத்துக் கூறப்படும் கடவுள் வாழ்த்தாகிய மங்கலவாழ்த்து, வாழ்த்தும் வணக்கமும் பொருளியல் புரைத்தலும் என மூவகைப்படுமென்ப. அதற்கிணங்க இப் பெண்கள் தாம்பாடத் தொடங்குதற்குக் காப்பாக கூறியதும் வாழ்த்தின் பாற்படுத லறியத்தக்கது. தெருவினின்று யாங்கள் மெல்ல வாழ்த்திய வாழ்த்தொலி சென்று கேட்கப்பட்ட அளவில் என்பார். "வீதிவாய் வாழ்த்திய வாழ்த்தொலி போய்க் கேட்டலும்" என்றார்.

1. பாசஞான பசுஞானங்களால் அறியப்படாமல் பதிஞானத்தால் அறியப்படும் சிவசத்தாதல் இறைவனுக்குச் சொருபலக்கண மெனப்படும் சிறப்பியல்பும், சக்தியுடன் கூடி உலகெலாமாகி வேறாயுட னுமாய் நின்று படைப்பு முதலிய அருட் செயல்களைப் புரியும் பதியாதல் தடத்த லக்கண மெனப்படும் பொதுவியல்பு மாகும். இவற்றை முறையே சிவஞானபோதம் ஆறாம் சூத்திரத்தாலும் இரண்டாம் சூத்திரத்தாலும் உணர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டல் - கேட்கப்படுதல், அமளி – படுக்கை, படுக்கை வன்மை யுடையதாக இருப்பின், அஃது உறக்கத்திற்கு இடையூறாக இடை யிடையே விழிப்புண்டாதற்கு ஏதுவாதலுங் கூடும். இவள் படுக்கை யன்னதன்று. மிக மெல்லிய பூவிதழ்களால் அமைந்ததென்பார், "போதாரமளி" யெனவும், அது நன்கு துயிலுதற்கு ஏற்றதாக இருந்தும் வாழ்த்தொலி கேட்டதும் துயிலுணர்ந்தெழுந்தது, இவள் பத்திமை யைப் புலப்படுத்து மென்பார். "அமளியின்மேல் நின்றும் புரண்டு" எனவும் கூறினர். புரளுதல் - விழிப்புண்டாதற்குத் தொடங்கும் முதற் செயல். அஃது ஈண்டு இலக்கணச் சொல்லாக நின்று எழுதலைக் குறிக்கும். எழுந்து, " முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்ற படி வாழ்த்தொலியை கேட்டதும், அன்பின் மிகுதியால் கண்ணீர் வடிய தேம்பி தேம்பியழலானாள் என்பார், " விம்மி விம்மி" எனவும், அந்நிலையின் முதிர்ச்சியில் தன்வய மிழந்தனள் என்பார், " மெய்ம் மறந்து" எனவும் , மெய்ம் மறந்த நிலையில் உலகியற் செயல்களுள் எதன்கண்ணும் தலைப்படாளாய் இறைவன் திருவடி களி லுறைத்துக் கிடந்தாள் என்பார், "ஏதேனுமாகாள் கிடந்தாள்" எனவுங் கூறினார், ஆகாள் என்பது முற்றெச்சம். இவ் அநுபவம்.

1. " முன்னம் அவனுடைய நாமங் கேட்டால்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்க்கும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடைத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே"

எனும் தமிழ்மறைக்கு இலக்காக வுள்ளதென்பது உணர்ந்தின் புறத்தக்கது. "இங்ஙன்" என்பது இவ்வாறு எனும் பொருட்டு, இப் பெண்ணை யெழுப்ப இவள் இல்லத்திற்குச் செல்லுதற்கு முன்னரே தெருவில் யாங்கூடிக் கடவுள் வாழ்த்தைக் கூறினேமாக, அம்மெல் லிய வொலியை இவள் கேட்டதும் துயில் நீத்தெழுந்து பத்தியால்

1. அப்பர் தேவாரம் 6 – 25 - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகி மெய்ம்மறந்து கிடந்தாள்: இவள் இயல்பு இங்ஙனமாக, எம் தோழியாகிய நின்தன்னை, யாங்கள் இல்லத்து வாயிற்படியில் வந்து உரத்த குரலில் பாடியதைக் கேட்டு எழாமல், பெய்யுறக்கங் கொள்ளுதலாகிய இத் தன்மையாக வுள்ளதே! ஈதென்ன பெருவியப்ப என்பார். "ஈதேயெந்தோழி பரிசு என்னேயென்ன" யென்றனர். பரிசு—தன்மை, இறைவன் திருவடியை வாழ்த்திக்கொண்டு சென்ற பெண்கள் வாழ்த்தொலி கேட்ட அளவில், பத்திவயப்பட்டு உருகி மெய்மறந்து கிடந்தாளை அவள் இல்லத்திற் கண்டு அவளையும் உடனழைத்துக் கொண்டு சென்றனராதலின், அவளைச் சுட்டி இவள் என்னாது " ஏதேனும் ஆகாள் இங்ஙன் கிடந்தாள்" என்று கூறி முடித்தனர். தம் குழுவிற் கூடியிருத்தலின், சுட்டுப் பெயராகிய எழுவாயின்றிச் சுட்டிக் கூறி பயனிலையளவில் அவள் செயல் கூறப்பட்டதென்க. இவள் என்னும் சுட்டுப் பெயர் ஈண்டுத் தோன்றா எழுவாயாகும்.

திருப்பாட்டுக்களின் ஈறுதோறும் வரும் "ஏலோரெம் பாவாய்" என்னுந் தொடர்க்கு எங்கள் பெண்ணே யாங் கூறுவதை ஏற்றுக் கொள்: ஆராய்ந்துபார் என்று பொருள் கூறி எழுப்பப் படுபவள் மேலேற்றி விளியாகவும் ஏவலாகவும் கூறுதல் ஈண்டும், இன்னுஞ் சில திருப்பாட்டுகளில் கன்னி ஒருத்தியை முன்னிலைப் படுத்தி கூறும் இடங்களிலும் பொருந்தும். ஆயினும், எல்லாத் திருப்பாட்டுக்களிலும் பொருள் முடிபோடு இயைவதன்று. கன்னிப் பெண்களைத் தனித்தனியாகவன்றிக் குழுவாக முன்னிலைப்படுத்தும், இறைவனையும் மழையையும் முன்னிலைப்படுத்தும் கூறப்பட்டிருத்தலின் பொருள் முடிவும் அவற்றோடியை ஆங்காங்கு வேறாகக் கொள்ளல் வேண்டும். ஆதலின், இறுதிதோறுமுள்ள "ஏலோரெம் பாவாய்" என்புழி ஏலும் ஓரும் அசை யெனவும், எம்பாவாய் என்பது நோன்பிற்கு அதிட்டான தெய்வமாகிய பார்வதி தேவியை அடிக்கடி நினைவு கூர்தற்குரிய நன் மொழியெனவுங் கொள்ளல் வேண்டும். சிலப்பதிகாரம் 29 ஆவது வாழ்த்துக் காதையில் "வீங்குநீர் வேலி" என்பது முதலியவற்றின் ஈற்றில் " பாடேலோர் அம்மானை" என்புழி "ஏலும் ஓரும் அசை" என்று அரும்பதவுரையாசிரியர் கூறியிருந்தலும் அறிக. மகளிர் மேற்கொண்ட நோன்பு முன்பு பாவை நோன்பு ஆதலில் அதற்கேற்ப அப்பெயராலே யொருவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொருவர் விளிகொள்ளலானாரென்பதும் ஆம். பெண்கள் விளையாட்டு நிகழ்ச்சியில் தம் இயற்பெயரை விட்டு விளையாட்டுக்குரிய பெயரை யிட்டு வழங்குதலை உலகியலிற் காணலாம். திருவம்மானை முதலியவற்றிலும் இவ்வாறு வழங்கப்பட்டிருத்தல் காண்க. ஆகவே ஏலோ ரெம்பாவாயென்பது, இனிய ஓசை உடையதாய் மேற்கொண்ட நோன்பிற்குரிய தெய்வ மந்திரமாக விளங்கும் அடிநிறைவென்பது புலனாகும். எல்லா திருப்பாட்டுக் களுக்கும் இஃதொக்கும். இத் திருப்பாட்டில் கூறப்பட்ட முத்திறத்துக் கன்னியருள், வாழ்த்தொலி கேட்ட துணையானே மெய்ம் மறந்து கிடந்தவள் தலையன் பினளென்பதும், இறைவனைப் பாடித் துயிலுணர்த்த முற்பட்டவர் இடையன் பின ரென்பதும், துயிலுணர்ச்சியும் படுக்கையினின்று எழாமல் கிடந்தவள் கடையன் பினள் என்பதும் புலப்படலால் தலையிடை கடையாய முத்திறத்துக் பக்குவ முடைய உயிர்களின் இயல்பு இதனால் தெளிவிக்கப்பட்ட படியாம்.

இதன்கண் "மாதேவன்வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து" என்றதனால் சக்தியை வியந்தது என்னும் உள்ளுறை குறிப்பிற் புலப்பட வைத்தவாறாம். என்னை? இறைவன் திருவடி இறையருளாகிய சிவசக்தியை குறிக்குமாதலின், திருவடி வாழ்த்துச் சத்தியை வாழ்த்தியதாகுமென்பது சிவசத்தி யாகிய பராசக்தியை அருளுருவினளெனச் சைவநூல் கூறும். 1. "அருளது சத்தியாகும் அரன்றனக்கு" என்பது சிவஞான சித்தி. இறைவன் திருவடியை இறையருளாகிய சிவசத்தியென்று சிவஞானபோத மாபாடியங் கூறும். இதனைச் சிவஞானபோதம் ஆறாம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில், "எண்ணிய சத்தன் றசத்தன்றாம்" எனும் திருவெண்பாவின் "அறிவறியா மெய்சிவன் தாழாம்" என்னும் ஈற்றடியானும், அதற்கு "அறிவினாலறியப்படாத மெய்ப் பொருள்........... அநுபவமாத்திரையில் கோசரிப்பதென்று ஓதப் படும். "சிவன்தாளாம்" எனவும், பெயர் நிலைக்கிளவியின் "ஆ அகுநவும்" என்றது. ஒத்தாகலின், சிவன் தால் எனச் சிவசத்தியின் மேல் வைத்து உயர்த்துக் கூறினர். 2. "இறைவனார் கமல பாதம்" என்பதும் அது

1. சிவஞானசித்தி -சூ 5. செ. 9 2. சிவஞான சித்தி — சுபக்கம் பாயிரம் 4.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபாடிய வுரையானும் உணர்க. வரும் திருப்பாட்டுக்களுள் இறைவன் திருவடி குறிப்பு பற்றி உள்ளுரை கூறப்படும் இடங் களுக்கும் இஃது ஒக்குமென்பது.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
யேசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். (2)

(க —ரை) :- முன்னைத் திருப்பாட்டில், மாற்ற மனங்கழிய நின்ற இறைவன் திருவடியை வரையறைப்படுத்திக் கூறல் இயலாததொன்றா யினும் - இயன்றாந்து வாழ்த்துதல் வாழ்த்துவோரையும் கேட்போ ரையும் இறையன்பி லீடுபடுத்தும் ஆதலின், அஃது உயிர்களால் மேற்கொள்ளத்தக்கது என்பது புலப்பட கூறியருளிய அடிகள், இத்திருப்பாட்டில் அதற்கு ஏதுவாக அத்திருவடியின் அருமைலெளிய அழகை யருளிச் செய்கின்றார். “விண்ணோர்க ளேத்துதற்குக் கூசுமலர்ப்பாதம்” என்றதனால் அருமையும். “தந்தருள வந்தருளும்” என்றதனால் எளிமையும் புலப்பட வைத்தவாறறிக.

(ப-ரை) :. - நேர் இழையாய் - தகுதியான அணிகலன்களையுடைய பெண்ணே, நாம் பேசும்போது எப்போதும் - நாம் உரையாடும் பொழுதெல்லாம், இரா பகல் பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் - இரவும் பகலும் என் அன்பு மேலான ஒளிப்பிழம்பாகவுள்ள இறைவன் பொறுத்தே நிகழும் என்று கூறுவாய், இப்போது ஆர் அமளிக்கு நேசமும் வைத்தனையோ - இப்பொழுது மலர் நிறைந்த இப் படுக்கையின் பொருட்டும் அன்பு வைத்தனையோ (என்று இவ்வாறு துயிலுணர்த்த வந்த பெண்கள் கூறக்கேட்ட அப்பெண் கூறுவாள்) -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிழையீர் -, சீசி இவையும் சிலவோ – சீச்சி நும் வாக்கில் இங்ஙனம் எள்ளிக் கூறும் சொற்களுள் சிலவுள்ளனவோ, விளையாடி ஏசும் இடம் ஈடோ – விளையாட்டு முகமாக பழித்துரைத்தற்கு உரிய கால மும் இதுவா? (என்று கூறக் கேட்ட அம் மகளே கூறுகின் றார்கள்) , விண்ணோர்கள் ஏத்துதற்குத் தந்தருளக் கூசு மலர்ப்பாதம் - தேவர்கள் புகழ்ந்து பாராட்டுதற்கு பொருட்டுத் தருதற்கு நாணும் மலர் போன்ற திருவடிகளை, தந்தருள வந்தருளும் தேசன் - எளியேம் பொருட்டுத் தருதற்கு இந்த நிலவுலகத்தில் எழுந்தருளி வந்த ஞானாசிரியனும், சிவலோகம் - சிவலோக நாயகனும், தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனார்க்கு – தில்லைத்தலத்தின் கண்ணுள்ள திருச் சிற்றம்பலத்தின் கண்ணே ஈசனும் ஆகிய பெருமான் பொருட்டு செய்யப்படும் அன்பு ஆர் யாம் ஆர் - அன்பு எத்தகையது : யாம் எத்தகையோம்? என்பது.

(வி –ரை) :- முன்னர்த் துயிலுணர்ந்து வந்தவரும், உணர்த்தப்பட்டு எழுந்தவளும் ஆகிய பெண்கள் எல்லோரும் ஒருங்கு கூடி மற்றொரு கன்னியின் இல்லத்தைச் சார்ந்து அவளியல்பு கூறியெழுப்புகின்றனர். இவ்வாறே எட்டாம் திருப்பாட்டுவரை எழுப்பப்பட்டவர் இறுதியில் எழுந்து எழுப்பியவரோடு கூடித் பிறிதோர் இல்லத்தைச் சார்ந்து மற்றொரு கன்னியை எழுப்பியதாகக் கொள்ள வேண்டும். நேரிழை – தகுதியான அணிகலன்கள். ஈண்டுத் தகுதி கன்னிமைக்குரியதாகும். இது நேரிழையீர் என்பதற்கும் ஒக்கும். பேசும்போது என்பது உரையாடும் ஒரு காலத்தையும், எப்போதும் என்பது எத்தனை முறை யுரையாட வாய்ப்பினும் அப்பொழுதெல்லாம் என அக்காலப் பன்மையையும் குறிப்பனவாம். எப்போதும் என்புழி உம்மை விகாரத்தாற் றெக்கது. பாசம் - பத்தி, உடலோம்புதற் பொருட்டு உறங்குதற்குரிய இரவிலும் உண்டல் முதலிய செயல்களுக்குரிய பகலிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் இறைவனை நினைந்து பக்தி செய்தலே கடமையாக மேற்கொள்ளப்பட்டது என்பது தோன்ற நாள் முழுது மென்னாது இராப்பகலென்றனர். இராப்பகல் என்புழி எண்ணும்மைகள் தொக்கு நின்றன. பகல் முழுவதும் உழைத்து இரவில் அவ் வுழைப்பினாலுண்டாகிய இளைப்பை யொழித்தற்குத் துயிலுதல் இயல்பாகவும் அவ் விரவிலும் இளைப்பாறுதலின்றி உழைக்கலானேன் என்னுங் கருத்துத் தோன்ற, இராப்பகலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுழைத்தேன் என்று உலகியற் கூறுதல் போல. அன்பு வழிபாடு செய்தற்குரிய பகலிலன்றி இளைப்பாறுதற்குரிய இரவிலும் பக்திமை உடையேன் என்று கூறுவாய் என்பார், பகலும் இரவும் என்னாது " இராப்பக" லின இரவை முற்கூறினர். அமளிக்கே யென்புழி ஏகரத்தைப்பிரித்துக் பரஞ்சோதிக்கு என்பதனோடு கூட்டுக; இறைவனுக்கன்றி வேறு எப்பொருளிலும் பற்றில்லை என்பது தோன்ற நிற்றலின்ண்டு ஏகாரம் தேற்றப்பொருட்டு. என்பாய் - என்று கூறுவாய் என்பாய் என்றதற்கு எலும்பாகக் கரையுமாறு எனப்பொருள் கூறுவாருமுளர். முன்னும் பின்னும் உள்ள சொற்களால் பொருட்டெக்டர்பு சிறவாமையின் அது பொருளன்று. இப் போதாரமளி என்புழி இகரச் சுட்டு அணிமையை யுணர்த்து மாதலின் துயிலெழுப்ப வந்தவர். எழுப்பப்படுபவரின் அருகில் நின்று கூறின என்பது புலனாகும். போது – மலர். போதார் அமளி என்றது. நேசம் வைத்ததற்கு ஏதுக் கூறியபடியாம். நேசமும் என்புழி உண்மையை பிரித்து அமளிக்கு என்பதோடு இயைக்க, இறைவனிடத்தன்றில் படுக்கைக்கும் பத்தி பூண்டனையோ என்பது பெறப்படுதலின் உண்மை ஈண்டு எச்சப் பொருட்டாம்.

பாசம் பரஞ்சோதிக்கு எனச் செல்லலிற் கூறிச் செயலளிவின் படுக்கைக் கண்ணே வெக்கப்பட்டது போலும் என்பார். "என்பாய்" எனவும் "வைத்தனையோ" எனவுங் கூறினரென்க. இஃது 1 " அறங்கூறுன் அல்ல செய்யினும்" என்பது போல நின்றது. "அறமென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்" என்பது அத்தொடரின் பொருள். வைத்தனையோ என்புழி ஓகாரம் வினாப்பொருட்டு. துயிலுணர்த்திய காலம் இரவின் இறுதியிலும் பகலின் தொடக்கமாகிய வைகறைப் பொழுதாகலாலும் அஃது இரவும் பகலுமாகிய காலக்கூறு இரண்டையும் பற்றி நிற்றலானும், இறைவனை நினைத்து பத்தி செய்தற்குரிய என்னேரத்தில் துயில் நீர்தெழாத நீ "இராப்பகல் பாசம் பரஞ்சோதிக்கு" என்று கூறியது இத்துணை உண்மையாகும் என்று கூறி நகையாடிய படியாம். " வைகறைப் துயிலெழு" என்பதற்கு மாறுபட்ட அக்காலத்து உறங்குதல் இரவும் பகலும் தூங்கிய தாகு என்பது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எழுப்பிய பெண்கள் கூறக்கேட்டுத் துயிலுணர்ந்து எழுந்தவன் கூறுகின்றாள். தோழிகாள்! நும் செயல் இகழத்தக்கது என்பாள். "சீசி" எனவும், இறைவன் திருப்புகழைப் பாடுதற்குரிய தூய்மையுள்ள நும் வாயில் இங்ஙனம் எள்ளிக் கூறுதலாகிய இழிசொற்களும் உள்ளனவோ வென்பாள் "இவையுஞ் சிலலோ" எனவும் கூறினள். இவையும் என்புழி உம்மை இழிவு சிறப்பு" அமளிக்கு நேசமும் வைத்தனையோ" என்னும் வினாவால் வைத் திருக்கமாட்டாயென்பது எம் உட்கோளாகும். ஆதலின் இவ்வாறு வினாவியது இகழ்ந்துரைத்தலாகாது. விளையாட்டாகக் கூறியதாகும் என்றர்க்கு விடையாக "விளையாடி யேசுமிடம் ஈதோ" என்றாளென்க. இடம் ஈண்டு காலத்தின் மேற்று. ஆண்டவன் திருப்புகழைப்பாடி உள்ள முருகவேண்டிய இவ்வமயத்தில் ஒருவரை யொருவர் இகழ்ந்து கூறி விளையாடுதல் தக்கதன்று என்பது கருத்து. இனி "நாம் பேசும் போது எப்போது" என்பதற்கு நாம் பாராட்டிப் பேசும் காலம் அதற்குரிய வைகறைப் பொழுதன்றி வேறு எப்பொழுதாகும் எனக் கூறினார் எனக் கொண்டு அதற்கு மாற்றமாக நீவீர் விளையாடி எள்ளிக் கூறும் காலம் இதுதானா என்றாளெனக் கூறினுமாம். இங்ஙனம் எழுப்பப்பட்டவள் கூறினாளாக, அதற்கு மாற்றமாக எழும் பிய கன்னியர் பின்னும் கூறுகின்றனர். "விண்ணோர்கள் ஏற்றுதற்கு தந்தருள கூசுமலர்ப்பாதம்" என தந்தருளவென்பதையீண்டும் இயைக்க. கூசுதல் - நாணுதல். அஃது ஈண்டுக் திருவுள்ளம் உடன்படா மையை குறிக்கும். "பொக்க மிக்கவர் பூவு நீரும் கண்டு, நக்கு நிற்பவன் அவர் தமை நாணியே" என்புழி நாணுதல் அப்பொருட்டாத லறிக. தேவர்கள் புண்ணியப் பயனுகர்வோர் ஆயினும் "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் " என்றபடி அவர் ஏற்றுதல் மேன்மேலும் தம் போக நுகர்ச்சி கருதி யென்பது வெளிப்படுத்துதலின் அவர்க்குத் தன் திருவடியை தந்தருள இறைவனுக்குத் திருவுள்ளம்மின்றென்பது கருத்து. நல்வினை பயனால் உயர்ந்த தேவர்கள் தன் அணிமையில் வந்து பல்கால் வேண்டவும் அவர்க்குச் தந்தருள உடன் படாததன் திருவடிகளை, நல்வினை தீவினைப் பயன் இரண்டினாலும் பிணிப் புண்ட மக்கட் பிறப்புடைய சிறுமியராகிய நம் பொருட்டு எளிமை யில் தந்தருள நாம் இருக்கும் இடத்தில் வந்து காட்சியளிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்மைக்குணமிக்க ஒளிப்பிழம்பாக வுள்ளவன் என்பார், "விண்ணோர்களேத்துதற்குக் கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளுந் தேசன்" என்றார். தேவர்கள் சென்று பாராட்டியும் பெறுதற்கரிய தன் திருவடிகளை மானுடப் பெண்கள் எளிதிற்பெற இறைவன் வந்தருளினான் என்னும் சிறந்த இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே இராமலிங்க அடிகள்,

"ஒருமுடி மேற்பிறை வைத்தோய் அயனரி யொன்மறைதம்
பெருமுடி மேலுற வேண்ட வாராதுனைப் பித்தனென்ற
மருமுடி யூரன் தலைமேன் மறுப்பவும் வந்தவன்
திருமுடி மேலென்ன ஆசைக்கண் டாய்நின் றிருவடிக்கே"

என்று விளக்கிக் கூறியுள்ளார்.

தேசன் என்பது ஒளிப்பிழம்பாகவுள்ளவன் எனும் பொருளுடைய தாகலின், இறைவனது சொரூபா இலக்கணம் பற்றியும், சிவலோகன் என்பது தடத்த இலக்கணம் பற்றியும் கூறப்பட்டனவாம். ஒளிமயமான நிலையும் சிவலோக நாதனாம் நிலையும் நாம் சென்று காண்டற்கு அரியனவா மென்று திருவுளங் கொண்டு இந்நிலவுலகில் தில்லை நகர்க்கண் திருச்சிற்றம்பலம் என்னுந் திருக்கோயிலில் எழுந்தருளிக் காட்சி தரும் பெருமான் என்பார். " தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்து ளீசன்" என்றார். இங்ஙனம் அருமையி லெளிய அழகு படைத்த சிவபெருமான் பொருட்டு மேற்கொள் ளத்தக்க அன்பு எத்துணை யுயர்ந்தது என்பார். "ஈசனார்க்கு அன்பு ஆர்" எனவும், அவ்வன்பை மேற்கொள்ளுதற்குரிய அடிமைகளாகிய நாம் எத்தகை யோம் (எள்ளி நகையாடும் இயல்பினம் அல்லேம்) என்பார். "யாம் ஆர்" எனவும் கூறின ரென்க. அன்பார் என்புழி ஆர் அஃறிணைக் கண் வந்தது. திணை வழுவமைதியாகும். இனி அன்பார் யாம் ஆர் என்பார்க்கு அன்பு நிறைந்த யாம் ஆர் எனக்கொண்டு பொருள் கூறலுமாம். எழுப்பப்பட்ட பெண் "சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி யேசுமிட மீதோ" என்றதற்கு விடையாக எழும்பிய கன்னியர் இவ்வாறு கூறினர் என்பது. வெறுக்கத்தக்க இழிமொழி களைக் கூறும் இயல்பு இறையன்பிலீடுபட்ட நம்மனோர்பால் இங்ஙனம் உண்டாம்? உண்டாகதென்பதாம். 1. " ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய, வழுக்கியும் வாயாற் சொலல்" எனும் பொருளுறையும் ஈண்டு நிலைக்கத் தக்கது.

1. திருக்குறள் - 139



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனிடத்து எனக்கு அன்புண்டு என்று ஒருவன் வாயளவில் கூறுதலினும் செயலளவில் மேற்கோடலே சிறந்த தென் பதும், இறைவன் வழிபாடு செய்தற்குரிய காலத்தை அது செய்யாமல் வேறு நிகழ்ச்சிகளால் கழித்தல் கூடாதென்பதும், தேவர்க்கும் அரிய இறைவன் அன்பிற்கு எளியனாவன் என்பதும், இறையன்பிலீடுபட்டு ஒழுகுவோர் நிலை என்றும் இழிந்ததாகா தென்பதும் பிறவும் இத் திருப்பாட்டால் புலப்படுத்தப்பட்ட படியாம்.

இதன் கண் " விண்ணோர்க ளேத்துதற்கு பூசுமலர்ப் பாதம்" என்றும் திருவடிச் சிறப்புக் கூறப்பட்டது, சத்தியை வியந்ததாகும். இது பற்றிய விளக்கத்தை முன்னைத் திருப்பாட்டிற் காண்க.

முத்தன்ன வெண்ணகையாய் முனுவந் தெதிரெழுந்தென்
          அத்தனா ளந்தன் அமுதென்ன றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
          பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
          எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
          இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய் *(3)*

*(க— ரை):* முன்னைத் திருப்பாட்டில் இறைவனது அருமையில் எளிய அழகிற் புலப்படுத்தருளிய அடிகள், இத் திருப்பாட்டில் அவ் வருமையில் எளிமை அன்பு செய்வார்க்குப் பயன் படுத்துமுறையைப் புலப்படுத்த தொடங்கி முதலில் மொழியால் பாராட்டுதற்குரிய எளிமையை அருள் செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப-ரை) : முத்து அன்ன வெண் நகையாய் - முத்தைப் போன்ற வெள்ளிய பற்களையுடைய பெண்ணே, முன் முன்னைக் காலத்தில், முன் எழுந்து எதிர் வந்து - எங்களுக்கு முன்னரே அமளியினின்றும் துயில் நீத்து எழுத்து எம் எதிரே வந்து, என் அத்தன் ஆனந்தன் அமுதன் என்று எனக்குத் தந்தை இன்பவடிவினன் அழிவற்ற கடவுள் என்று, அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் - வாயூறியினிக்கப் பாராட்டிப் பேசுவாய், வந்து உன் கடைதிறவாய் இப்போது எழுந்து வந்து உன் அமளியறையின் வாயிலையாதல் திறக்கின்றாயில்லை ஈதென்னை? (என்று இவ்வாறு எழுப்பவந்த பெண்கள் கூறக் கேட்ட அப்பெண் எழுந்து வந்து கூறுவாள்) பத்துடையீர் ஈசன் பழ அடி வீர் பாங்கு உடையீர் நீவீர் ஆண்டவனிடத்துப் பேரன்புடையீர், இறைவனுக்குப் பழமையான அடிமையுடையீர் எனக்குத் தோழமை யுடையீர் (அத்தகைய நீவிர்) புத்து அடியோ புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ - புதிய தொண்டுடையோம் ஆகிய எம் குற்றத்தை நீக்கி அடிமை கொண்டால் அது தீங்காகுமா? (என்றுன் இவ்வாறு எழுப்பப்பட்டவள் கூறக்கேட்ட எழுப்பிய பெண்கள் கூறுவார்கள்) நின் அன்புடைமை எதுஓ உனது அன்புடைமை வேறெவ்வகையினதோ, எல்லோம் அறியோமோ - அதனை யாமெல்லாம் அறியமாட்டேமா? நம் சிவனை சித்தம் அழகியார் பாடாரோ - நம் சிவபெருமானைத் தூய நன்னெஞ்சுடையார் புகழ்ந்து பாடாமலிருப்பரோ, எமக்கு இத்தனையும் வேண்டும் - நின்னையழைக்க வந்த எங்களுக்கு இவ்வளவும் வேண்டியதே என்பது.

(வி-ரை) :- எழுப்பப்படும் பெண் முன்னைக் காலங்களில் தன் இனப் பிறர் எழும்புதற்கு முன்னரே துயில் நீத்தெழுந்து பல் விளக்கி உடலைத் தூய்மை செய்து கொண்டு திருநீறணிந்து வெளிப்படுவாள் என்னும் குறிப்புத் தோன்ற "முத்தன்ன வெண்ணகையாய்" என்று மேவிளிக்கனர். நகை - பல், உவமையாகிய முத்துக்கு அடையின்றிப் பொருளாகிய நகைக்கு அடையாகப் பொதுத் தன்மையாகிய வெண்மை புணர்க்கப்பட்டது அறிக. பல்லின் தூய்மை கூறவே உபலக்கணத் தால் எனைய உடற் பகுதிகளின் தூய்மையும் திருநீறணித்தமையும் கொள்ளப்படுமென்பது. முன் என்பது காலத்தைக் குறிக்கும். அது கடந்த ஆண்டு மார்கழித் திங்களின் மேலது. அதனை மீண்டும் யெனவும் ஒரு முறை போதி யாம் எழுதற்கு முன்னரே யெனவுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளல் வேண்டும். வந்து எதிரெழுந்து என்பது எழுந்து எதிர் வந்ததென மாற்றியுரைக்கப்பட்டது. யாங்கள் இறைவன் கொண்டு நின் இல்லத்தின் வாயில் அடைதற்கு முன்னரே நீ வாயிலைக் கடந்து திருவீதிக்கண் வந்து எதிர்படுபவையென்பார் எதிர்வந்து என்றனரென்க. வரும்பொழுதே இறைவன் புகழையும் னினக்கு இனியனாதலையும் உளம் கனிந்த வாயில் நீர் ஊறக்கேட்போர் செவிக்கு இனிமையுண்டாகப் பாடிக்கொண்டு வருவாய் எமை தன் ஆனந்தன் அமுதன் என்றானத இந்திக்கப் போவான் தனர். எல்லா வுயிர்களுக்கும் தந்தையாகவுள்ள இறைவனைக் குறித்து அவன் அன்பர் பலர் ஒருங்கு கூடிப் பேசும்கால் நம் அத்தம் என்று உளப்படுத்துக் கூறுகலே இயைபுடையதாகும். இத்திருப்பாட்டில் எழுப்பிய பெண்கள் "நம் சிவ" என்று பின்னர் கூறும் உணர்க. அங்கனமாகவும். என் அத்தன் என்று எழுப்பப்பட்டவள் கூற்றாகக்' கொண்டு எழுப்பியவர் கூறியது. தம்மினும் சிறப்புரிமை அவளுக்கு உண்டென்பது புலப்பட வைத்தற்கென்க. சாத்தாக்கு அழிவிலாப் பேரின்பத்தை அருளும் இன்பவடிவின் னாதலின் இறைவனை "ஆனந்தன் என் முளென்பது. இறைவன் இன்பவடிவினதும் இருந்தே இன்பத்தை அருள்பவன் என்னும் உண்மையை 1. ஆனந்த தேன்சொரியுங் குவிப்புடையான் எனவும், 2 இன்பமா கடலே" எனவும் எழுந்த திருவாக்குக்களால் அறியலாம். தந்தையின் செல்லம் மக்கட்குரிய தென்பது உலகியலிற் கண்டது அவ்வாறே இறைவனது பேரானந்தப் பெருஞ்செல்வம் பேற்றுக்கு உரிமை தனக்கு உண்டென்பது புலப்பட அத்தன் என்பதற்குஅடுத்து "ஆனந்தன" என்றுளென்பது. "அமுதன் என்றது அழிவில்லாதவன் என்னும் பொருட்டு, உலகியற் பொருள்களால் எய்தும் இன்பம் அதில் டையதாகலின் அன்னவியல்பிற்றன்று இவ்வின்பம் என்றும் அறியா இயல்பிற்று என்பது தோன்ற அடுத்து - அமுதன் என்றும் என் 3. உலப்பிலா வானந்தமாய தேனினைச் சொரிந்து" என்றார் இவ்வுண்மை புலனாயவாறிக.

இங்ஙனம் "என் அத்தன் ஆனந்தன் அமுதன் என்ற கார் தொடங்கும் பொழுதே அச் சொற்களின் இனிமையால்

*1. திருக்கோத்தும்பி - 3* | 2. பிரார்த்தனைப்பத்து - 6

*3. பிடித்தபத்து -9*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில் நீரூறப் பொருளின் இனிமையால் உளம் இனிக்கப் பாராட்டுவாய் என்பார் "அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்' என்றனர். "அள்ளூறித் தித்திக்க" என்பதைக் கேட்போர் மேலும் எற்றியரைக்க. இனிய சுவைப்பொருளை நினைப்பினும் காண்பினும் கேட்பினும் வாயில் நீரூறி உள்ளம் இனிக்கும் என்பது உலகியலிலும் என் அது பேரின்பப் பொருளாகவுள்ள இறையனுபவத்தில் இன் னுஞ் சிறப்பாகத் தோன்றுமென்பது

1. 'நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறும்
எப்போதும் அனைத்தெலும் புண்ணெக வானந்தத்
தேன்சொரியுங் குனிப்புடையான்'

என்னுந் திருவாக்கான் உணரத்தக்கது. இங்ஙனம் முன்னைக் காவத்தில் மார்கழி நீராடுதற்கு யாங்கள் எழுதற்கு முன்னரே துயில் நீத்தெழுந்து உடற்றூய்மை செய்துகொண்டு எம் எதிரே வெளிப்போந்து இறைவன் திருப்புகழை வாயார உளம் இனிக்கப் பாடிக்கொண்டு வரும் இயல்புடைய நீ, இன்று யாம் எழுந்து நின் அமளியறையின் அணிமையில் வந்து எழுப்பவும் எழாமலும் வாயிற்கதவைத் திறவாமலும் இருக்கின்றாய் ஈதென்னை? என்பார் "தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்" என்றனர். இவ்வாறு தன் குறை கூறக்கேட்ட பெண் எழுந்து வந்து வாயிலைத் திறந்து எழுப்பிய பெண்களை நோக்கிக் கூறுகின்றாள். பத்துடையீர் என்பது முதலாகப் பொல்லாதோ என்பது வரை அவள் கூற்றம் என்பது. பத்து - பத்தி 2 "'பத்திலனேனும்" என்புழி அப்பொருட்டாதல் காண்க, இனித் தொண்டர்க்குரிய பத்துச் செயல்களும் உடையீர் என்பதுமாம். 3 "பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே" என்பது தமிழ்மறை. இறைவனுக்குத் தொண்டு பூண்டு ஒழுகும் பரம்பரைக் குடியிற் பிறந்தாரும் ஒரு பிறப்பில் நெடுநாள் தொண்டு செய்வாரும் பழையவடியாராவர். ஈசன் என்பது இடைநிலை விளக்காக நின்று ஈரிடத்தும் இயையும், பாங்குடையீர் என்பது எனக்குத் தோழமையுடையீர் என்பதாம். இம்மூன்று பின்வரும் வேண்டுகோட் பயனுக்கு ஏதுவாதல் உணர்க: நீ விரோ பழவடியீர் யானோ

1. திருக்கோத்தும்பி - 3 2. எண்ணப்பதிகம் - 4

3. திருநாவு 4-18-10 விளிசளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தடியேன். எனக்குத் தோழமையுடையீராதலின் பத்தியின்மையா கிய குற்றத்தை யொழித்தற்குக் கடமையுடையீர் என்பது தோன்ற 'புன்மை தீர்த்து" என்றாளென்க "அழிவி னவை நீக்கி யாறுய்த்தல்" என்றபடி நட்டார்க்குற்ற நவையொழித்தல் கடனாமென்பது. "பத்துடையீரீசன் பழவடியீர்'' என்பது ஆட்கொள்ளுதற்குரிய தகுதியைக் குறிக்கும். எனக்குத் தோழமை யுடை வீராதலின் என் புன்மை தீர்த்து, ஈசன் பழவடியீராகவும் பத்துடை யீராகவும் இருத்தலின் புத்தடியேனாகிய என்னை ஆட்கொள்ளுதற் தரியராகவும், அது செய்யாமை யென்னையோ? தகுதியைப் பயன்படுத்தல் தக்கதாகவும் என்னளவில் செய்தல் தீங்கு என்று ஒழிக்கப்பட்டதோ என்பாள் "பொல்லாதோ" என்றாள் என்பது. ஈண்டுப் புத்தடியோம் எனப் பன்மை கூறியது, தன்னைப்போன்றார் பலரையும் உளப்படுத்தற்கென்க.

இவ்வாறு எழுப்பப்பட்டவள் கூறக்கேட்ட எழுப்பிய பெண்கள் கூறுவர். தோழி! முன்னை நாளில் நின் பத்திமை எம்மினும் பன்மடங்கு முற்பட்டு நிகழ்வதுண்டு. இப்பொழுதோ பிற்பட்டதாக மேற்கொள்ளுகின்றாய் ஆதலின் நின் அன்புடைமையின் இயல்பு தான் யாதாங்கொல் என்பார் "எத்தோ நின் அன்புடைமை" எனவும், நின் மெய்யன்பின் பெருமையை யாமெல்லாம் அறிந்துளேமென்பது தோன்ற "எல்லோமறியோமோ" எனவுங் கூறினரென்பது. நெஞ்சிற்கு அழகு தூய்மையாதலின் தூய நெஞ்சுடையார் "சித்தமழகியார்" எனப்பட்டனர். மனந்தூயராய்ப் பத்தி நெறியிற் றலைப்பட்டார். உரிய காலத்தில் இறைவன் புகழைப் பாடாமலிரார். நின் அன் புடைமையோ சிறந்தது. இந் நிலையில் எம்மினு முற்பட்டு இறைவன் புகழ் பாட வேண்டிய நீ அது செய்யாமை குறித்தும், தோழமை யுரிமை கொண்டும் நின்னை மொழியளவில் குறை கூறலானோம் என்னுங் குறிப்புப் புலப்பட "சித்தமழகியார் பாடாரோ நஞ்சிவனை யென்றனரென்பது. பத்திமையில் எம்மினுஞ் சிறந்த நின்னைத் தோழமையுரிமை பற்றிக் கூறிய சிறு குறை காரணமாக 'பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்'' முதலிய சொற்களாற் குறிப்பில் பரிகசித்தனை அன்பு நெறியில் வழுவிய எமக்கு இப்பரிகாசச் சொற்கள் எல்லாம் பொருத்தமானவைகளே என்பார் 'இத்தனையும் வேண்டும் எமக்கு' என்றாரென்பது.

குறள் - 787



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. "ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்"

என்னும் பொருளுரைப்படி நல்லன மொழியும் நாநல முடையார் எக்காரணத்தாலும் தீயன மொழிதலாகாதென்பது இத் திருப்பாட்டாற் புலப்படுத்தப்பட்ட படியாம்.

இதன் கண் "அத்தன் ஆனந்தன் "என்புழி அன்னையுடையை அத்தன் என்பது பெறப்படும் 2. அன்னையுஅத்தனு மாவாயழல் வணா நீய லையோ" என்னும் தமிழ்மறையும் கருதத்தக்கது. இதனால் சத்தியை வியந்தது குறிப்பிற் பெறப்படும் தாயுமானார் என்னும் திருப்பெயரும் இக் குறிப்பினதே.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய் (4)

(க-ரை) : - முன்னைத் திருப்பாட்டில் இறைவனது அருமையில் எளிய அழகிலே மொழியாற் பாராட்டுதற்குரிய எளிமையைப் பெண் மக்கள் மொழிமூலம் புலப்பட அருளிச் செய்த அடிகள், இத் திருப்பாட்டில் நெஞ்சத்தால் நினைந்து உருகுதலாகிய எளிமையை அவ்வாறே அருளிச் செய்கின்றார்.

(ப-ரை): - ஒள் நித்திலம் நகையாய் - ஒளி பொருந்திய முத்துப்போன்ற பற்களையுடைய பெண்ணே.

1. திருக்குறள் -139, 2. திருநாவுக் 4-119-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் விடியவில்லையா, (எழுப்பலந்த பெண்கள்இவ்வாறு கூறக்கேட்டு எழுப்பப்பட்டவள் படுக்கையிற் கிடந்தவாறே மாற்றம் உரைக்கின் நாள்) வண்ணம் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ - அழகிய கிளியினது மொழிபோன்ற மொழியினையுடைய பெண்கள் எல்லாரும் இங்கு வந்தனரா? (என்று இவ்வாறு கூறக்கேட்டு எழுப்ப வந்தவர் பின்வருமாறு கூறுவராயினர்) உள்ளவா எண்ணிக்கொடு சொல்லுவோம் வந்தாரைக் கணக்கிட்டு உள்ளவாறு எண்ணித் தெரிவிப்போம், அவ் அளவும் தெரிவிக்கும் அத்துணை நேரமளவும், கண்ணைத் துயின்றுகத் துயில்வித்து. காலத்தை அவமே போக்காது இறைவன் புகழைப் பாடுதற்குரிய காலத்தை வீணாகக்கழியாமல், விண்ணுக்கு ஒரு மருந்தை - தேவர்களுக்கு ஒப்பற்ற அமிழ்தமாக உள்ளவனும் வேத விழுப்பொருளை மறையாகமங்களின் சிறந்த பொருளாக உள்ளவனும், கண்ணுக்கு இனியாளை - கான்பார்கள் கண்களுக்கு இனிய காட்சியளிப்பவனும் ஆகிய சிவபெருமானை, பாடி புகழ்ந்து பாடி. உள்ளம் நின்று உள் நெக்கு கசிந்து உருக நெஞ்சம் அசைவற்று நிற்ப உள்ளே நெகிழ்ந்து கசிந்து உருகுவாயாக (என்று இவ்வாறு எழுப்பிய பெண்கள் கூறக்கேட்டும் எழுப்பப்பட்டவள் படுக்கையினின்றும் எழாமல் துயிலும் நிலையில் கிடத்தலைக் கண்டு பின்னருங் கூறுவர்) யாம் மாட்டோம் வந்தாரைக் கணக்கிட்டு எண்ணிக் கூறுதற்கு யாம் இசையோம், நீயே வந்து - நீயே எழுந்து வந்து, எண்ணிக்குறையில் துயில் - கணக்கிட்டெண்ணிக் குறைவு காணப்படுமாயின் மீண்டும் துயில்வாயாக என்பது.

(வி-ரை) :- மிக்க தூக்கமுடையாளாய்த் தன்னை மறந்து படுக்கை யிற் கிடக்கும் ஒருத்தியை, எழுப்பவந்த பெண்கள் பார்க்குங்கால், அவள் வாயைச் சிறிது திறந்து பற்கள் வெளிப்படக்கிடந்த நிலையைக் கண்டு "ஒண்ணித் தியதகையா என்று விளித்தனர் என்க. இதன் முன்னைத் இருப்பாட்டில் கூறப்பட்ட பெண்ணே விளிக்குங்கால், பண்டை நிகழ்ச்சியைக் குறிக்கொண்டு, பல் விளக்கி நீராடி உடற்றூய் மையுடை யனாம் இயல்பு குறித்து உவமைக்கு அடையின்றிப் பொருளுக்கு புணர்த்து "முத்தன்ன வெண்ணகையாய்" என்று விளித்தனர். இதன்கள் பல்லின் இயற்கை நிறம் காணப் பட்டமையால பல் விளக்குதல் முதலிய தூய்மை யின்மை தோன்ற உவமைக்கு ஒளியுடைமையாகிய அடையைக் கூறிப் பொருளுக்கு எதும் அடை புணாக்காமற் கூறி விழிீத்தனர் என்றர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலர்தல்-விடிதல் இன்னும் விடியவில்லையோ என்ற குறிப்பு இருணீங்கி விடியும் நிலைலும் அவள் மிக்க உறக்கத்திற் கிடத்த கப் புலப்படுப்பதாகும். புலர்ந்ததின்று என்பது விகாரத்தால் புலந்தின்று என்றாயிற்று. ஓகாரம் வினாப்பொருட்டு, எதிர் மறையுமாம். இவ்வாறு கூறிய அளவில் படுக்கையில் கிடந்தவள் எழாமல் கிடந்த நேவந்தவர்கள் தோக்கி என்னை எழுப்ப இத்துணைப்பேர் வருவோ என்று சொன்னீர்களே அத்தனைப் பெண்களும் வந்துவிட்டார்களோ என்பாள் எல்லாரும் வந்தாரோ" என்றாள் என்க. இவ்வினா மீண்டும் துயிலுதலின் விருப்பத்தைப் புலப்படுத்துவதாகும். எழுப்பியவர் பேச்சு எழுப் பப்பட்டவழுக்குக் கடுமொழியாக இருந்தமையால் அவள் என் தோழிமாராகிய நும்முள் இனிமையாகப் பேசுவாருமுளரே அன்னர் இக்குழுவில் இலரோ' என்பாள்"வண்ணக் கிளி மொழியார் என்றாள் என்பது, வண்ணம் மகளிர்க்கும் பொருந்துவதாகும். அழகுடையவர் என்றது. - இலங்கெழிலவு குணமெனவுரைப்பர்" என்ற படி நற்குணங்களையும் புலப்படுத்துங் குறிப்பாகும். ஆகவே நற் குணங்க ளும் இனியன் மொழித்தமுடையார் இக்கூட்டத்திற் கலந்திலர் என்பது வினாவின் குறிப்பாகும். இவ்வாறு வினவிய பெண்ணின் இயல்பு வர்த்து அவருக்குத் தக்கவாறு எழுப்பியவர் விடை அறுவா ராயினர். யாம் முதலில் எண்ணிக் கணக்கிட்டு கொண்டு பின் சாதிக்கும் தெரிவிப்போம் என்பார் "எண்ணிக் கொடுள்ளவா சொல்லும்கோ என்றனர். கொண்டு என்னும் அனைவினை கொடு என்றயிற்று. வரவேண்டியவரெல்லோரும் குறைவற வந் கன அமிறும் வரையறுத்து விளவும் நினக்கு விடையிறுக்க எண்விகொண்டு தொப்பதே தலம் என்று அவர் கருதினர் என்பது வந்தவா காரை என கணக்கிட்டாலும் சொல்லு தலில் தவதின் முமோ என்றும் சயம் தோன்றுமாதலின், அதனைப் பரிகரிக்க உள்ளவா சொத்துகோக என்றனர் என்க. "உள்ளவாறு" என்பது

1. நைடதம், அன்னத்தைத் தூதுவிட்ட படலம் செய்யுள் 31,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரத்தால் உள்ளவா என்றாயிற்று. எண்ணிக் கணக்கிட்டுச் சொல் அத்துணைக் காலம் வரையும் நீ பொய்யுறக்கங் கொண்டு இறைவன் புகழ்பாடுதற்குரிய இவ் அருமைக் காலத்தை அழித்தல் ஆகாதென்பார், 'அவ்வளவுக் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது என்றனர் என்பது. கண்ணைத் துயின்று என்புழி துயில்வித்து எனப் பிறவினையாகக் கோடல் வேண்டும். பொய்யுறக்கம் கொண்டு என்பது கருத்து. அவம் - விண் போக்காதே 'என்புழி ஏகாரம் அசை. போக்காது என்னும் எச்சம்" கசிந்துருக என்பதைக் கொண்டு முடியும். அக்காலத்தை வீணாக்கால் செய்யத்தக்கன என்னை என்பதற்கு விடையாக இறைவனைப் பாடியுருக வேண்டுமென்றனர்.

விண் ஆகுபெயர். பாற்கடலில் தோன்றிய அமுதம் தாம் உண்டார்க்குச் சிற்றின்பத்தை விளைவிப்பதோடு இறப்பைத் தடை செய்யும் ஆற்றலின்மையும் உடையது. இறைவனாகிய அமிர்தம் பேரிழன்பம் விளைத்தலோடு மரணமிலாப் பெருவாழ்வில் வாழச் செய்யும் இயல்புடையது. அதனால் 'விண்ணுக்கு ஒரு மருந்து' என்றார் மேலும் பாற்கடலில் தோன்றிய அமிழ்தம் நஞ்சுடன் தோன்றிற்றுக அத் தஞ்சை அதன் குணம் வெளிப்படாவாறு தன்னுளடக்கி இன்பம் செய்யும் அமிழ்தமாக இறைவன் விளங்குதலின் "ஒரு மருந்து' எனறார் எனினுமாம். 1. 'அடியாராம் இமையவர்தங் கூட்டமுய்யன் கடல்வாய் நஞ்கண்ட அமுதே" என்பர் சேக்கிழார். மறைகளின் இதயத் தானத்தில் விளங்கும் மந்திரப் பொருளாவான் இறைவன் பென்பது புலப்பட வேத விழுப்பொருளை" யென்றார்.

"மும்மறையுள் நடுமறையின் முனிவிலெழு காண்டத்தில்
செம்மை தரு நடுக்காண்டஞ் சேர்ந்தவெழு சங்கிதையில்
அம்மடுச் சங்கிதையின் ஆதியி றொழித்துநடுப்
பொம்மலுற அமர்மனுவின் பொருளாவான் எவன்மைந்த.

என்பதனாலும் இவ்வுண்மை தெளிக. இச்செய்யுளில் சிவாயநம என்பது ஈண்டு வேதமென்றது சிவாகமங்களையும் குறிக்கும். 2 " யாம் வேத சிவாகமங்களுக்கு வேறுபாடு கண்டிலம்: வேதமே சிவாகமம்" என்னும் பெரியார் உரையானு முணர்க. வேதங்களில் சிறப்பிடங்களிலும் சிவாகமங்களில் யாண்டும் சிவபரத்துவம் கூறியிருத்தல் தெளிவாம்.

1. பெரிய பு- திருஞான – செ 476
2. சிவஞான பாடியம் - சிறப்புப்பாயிரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிலம்: வேதமே சிவாகமம் என்னும் பெரியார் உரை யானு முணர்க. வேதங்களில் சிறப்பிடங்களிலும் சிவாகமங்களில் மாண்டும் சிவபரத்துவம் கூறியிருத்தல் தெளிவாம்.

விண்ணுக்கு ஒரு மருந்தாகவுள்ள இறைவன் மண்ணுலகத்த வர்க்கு அபரஞானமாகிய நூலறிவானும் பரமஞானமாகிய அனுபவ அறிவானும் உணரத்தக்கவன் என்பது புலப்பட வேத விழுப்பொருளை' என்பதை அடுத்து கண்ணுக்கினி யானை' என்றனர் என்க கண் அகக்கண்ணும் புறக்கண்ணுமாகும். இறைவன் திருவுருவத்தைப் புறக் கண்ணாகிய முகக் கண்ணாற காண்டலினும் அகள் கண்ணு காண்டல் சிறந்தது என்ப. 1. முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள், அகத்திற் கண்கொண்டு காண்பதேயானந்தம் என்பது திருமந்திரம். அகப்புறக் காட்சிகளுக்கு இனியனாதல் அன்பானினை வாராது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு தோன்றுதலானும் மக்களுருவில் ஞானாசிரியனாக எழுந்தருளிக் காட்சியளிக்க லானுமாம். வேத விழுப்பொருள் என்பது அபரஞானத்தால் உண ரத்தக்கவன் என்பதையும் கண்ணுக்கினியான் என்பது பரஞானத்தால் உணரத்தக்கவன் என்பதையும் புலப்படுப் பனவாம். வேத விழுப்பொருளை என்பதற்கேற்ப அப்பெருமானை மறை முதலிய புகழ்ப் பாடல்களால் பாடவேண்டுமெனவும், கண்ணுக்கினியானை என்றதற்கேற்ப, கசிந் துள்ளம் உள்நெக்கு நின்றுருக வேண்டுமெனவும் கூறப்பட்டன உள்ளம் நின்று உள்நெக்கு கசிந்து உருகவென்று இயைத்துப் பொருள் கொள்க. உள்ளம் அலையாமல் நிற்ப இறைவனை நினைந்து உள்ளே நெகிழ்ந்து கசிந்து உருகவேண்டும் என்பது கருத்து. நிற்பவென்பது நின்று எனத் திரிந்து நின்றது. முதலில் உள்ளம் புறச்செயல்களைப் பற்றாமல் அசைவற்று நிற்றல் வேண்டுமென்பதும், பின் இறையுரு வில் ஈடுபட்டு உட்கசிவுண்டாக நெகிழ்ந்து உருகவேண்டும் என்பதும் புலனாய வாறு அறிக. உருகுக என்பது உருக என்முயிற்று. உருகு என்னும் பகுதியில் வியங்கோளீகிய அகரம் தனக்குப் பற்றுக்கோடாகிய மெய்யைவிட்டு இயைந்து உருக வென்முயிற்றென்பது. அகரம் வியங்கோளிராக வரும் என்பதைத் தொல்காப்பியச் திகாரத்து வினையியல் 29 – ஆம் சூத்திர உரையில்

1. திருமந்திரம் 2944



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுத்தோத்தினுள் 'ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்' (எழு 210) என அகரவீற்றுள் எடுத்தலாற் பொருந்திய மெய்யூர்ந்து அகர வீறாக வருதலும்" என்று சேனாவரையர் கூறிய வுரையானும், தொல்காப்பியப் பொருளதிகாரத்து, "அவளறிவுறுத்துப் பின்வர வென்ற லும்" (தொல் - பொருள் சூ. 114) என்னும் சூத்திரப் பகுதியிலுள்ள "பின்வர" என்றதற்குப் பின்னர் வருக" என்று நச்சினார்க் கினியர் கூறியவுரையானும் அறிக.

இவ்வாறு எழுப்பிய பெண்கள் கூறக் கேட்டும் எழுப்பப் பட்ட படுக்கையினின்றும் எழாமல் கிடத்தலைக் கண்டு, முன்னர்க் கூறியபடி வந்தவர்களை யெண்ணிக் கணக்கிடும் வேலையை யாங்கள் செய்ய மாட்டோம் என்பார் "யாமாட்டோம்" என்றனர். இறைவன் புகழ் பாடும் இக்காலத்தில் யாம் கணக்கிடும் வேலையில் தலைப் படுங்கால் அத்துணை நேரமும் வீணாகாமல் நீ உறக்கத்தினின்று எழுந்து இறைவன் புகழைப் பாடி உருகவேண்டும் என்று கூறினாராக, கிடந்தவள் அவ்வாறு செய்யாமல் மீண்டும் உறங்கும் நிலையிற் கிடத்தலை அறிந்து இந் நற்காலத்தை யாமும் வீணாக்குதல் கூடாதென்று கருதி யாம் எண்ணும் வேலையைச் செய்யமாட்டோம், நீ இறை புகழ் பாடா விட்டாலும் எண்ணிக் கணக்கிடும் வேலை யையாவது செய்யவேண்டும் என்பார் "யா மாட்டோம் நீயேவந்து எண்ணி' யெனவும் எண்ணுங் கால் வரவேண்டிய பெண்களுள் குறைவு நேருமாயின் பின் நீ விரும் பியபடியே உறங்கலா மென்பார், 'குறையில் துயில்' எனவுங் கூறினர். குறை நேர்ந்தால் மீண்டும் உறங்குவாயாக வென்று கூறிய நயம் உணர்ந்து இன்புறத் தக்கது. இனி இத் திருப்பாட்டிற்கு எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அத்துணைக் காலம் வரை சிவபெருமானைப் பாடி உள்ளம் கசிந்துருக எமக்கு இயலாதாகும். ஆதலின் கண்ணைத் துயின்று அவமே காலத் தைப் போக்காமல் நீயே எழுந்து வந்து எண்ணிக் குறையில் துயில், என இயைத்துப் பொருள் கோடலும் ஒன்று. இவ்வாறு கொள்ளும் கால் உருக என்பது எச்சமாய் நின்று யாம்மாட்டோம் என்பதைக் கொண்டு முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்கண் "கண்ணுக் கினியானை" என்றதனால் இறைவனுக்குத் திருமேனி யுண்டென்பது புலப்படுக்கப் படுதலின், அத்திருவுக்கு இடனாகிய சத்தியை வியந்தது பெறப்படும். 1. 'காயமோ மாயையன்று காண்பது சத்தி தன்னால்" என்பது சிவஞான சித்தி.

மாலறியா நான் முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளே பேசும்
பாலூறு தேன் வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினும் உணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

(க-ரை) - முன்னைத் திருப்பாட்டில் இறைவனது அருமையில் எளிய அழகில், நெஞ்சத்தால் நினைந்து உருகு தலாகிய எளிமையைப் பெண்மக்கள் வாயிலாகப் புலப்படுத்தருளிய அடிகள், இத் திருப்பாட்டில் அப் பெருமான் திருமேனியில் தம் கண்கள் ஈடுபட்டு இன்புறும் எளிமையை அவ்வாறே அருளிச் செய்கின்றார்.

(ப-ரை) :- மால் அறியா நான்முகனும் காணா மலையினை – திருமாலால் அறியப்படாத அடியினையும் பிரமனால் காணப்படாத முடியினையுமுடைய மலையுருவாய் நின்ற இறைவனை, நாம் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே - நாம் உணர்வோம் என்று இவ்வாறு உளவாகிய பொய்களையே, ஊறு பால் தேன் போல் பேசும் வாய படிறீ - சுரக்கின்ற பாலையும் தேனையும் போல் இனிமை தோன்றப் பேசும் வாயினையுடைய வஞ்சகி, கடைதிறவாய் - கடைவாயிலைத் திறப்பாயாக, ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான் நிலவுலகத்துள்ளார் வானுலகத்துள்ளார் பிறவுலகத்துள் ளார் ஆகிய யாரானும் அறிதற்கரிய அப்பெருமானுடைய, கோலமும் திருவுருவத்தையும், நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சீலமும்

1.சூ 1 – செ - 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடி - எளியேமாகிய நம்மையும் ஆளாகக் கொண்டருளிச் சீராட்டு அருட் குணத்தையும் புகழ்ந்து பாடி,சிவனே சிவனே என்று ஓலம் இடினும் - சிவபெருமானே சிவபெருமானே யென்று ஓலமிட்டுக் கூவியும் உணராய் உணராய் அறிந்திலை துயில் நீத்தெழுந்தாயும் இல்லை ஏலம் குழலி பரிசு - மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய நின் தன்மை என்னே! என்பது.

(விரை) -"பர் தாள மேழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிவே"

என்னும்படி ஒளிமலையாக வெளிப்பட்ட இறைவனுடைய அடியையும் முடியையும் முறையே திருமால் விலங்குருக்கொண்டு நிலம் அகழ்ந்தும் நான்முகன் பறவை யுருக்கொண்டு விண்ணிற் பறந்து சென்றும் அறிய வியலாமல் வலியிழந்து நின்றன ரென்பது புராணகதை. இந் நிகழ்ச்சி இஃது இறைவனது பரம் திருவண்ணா மலையைப் பற்றிய தென்ப. பொருட்டன்மையைப் புலப்படுப்பதா கும். இனி மயக்க வுணர்வுடையோரால் அறியப்படாதவன் என்பதும், மனத்தை ஒருமுகப் படுத்தாமல் பல முகமாகச் செலவிடுவோரால் காணப்படாதவன் என்பதும் ஆகியகுறிப்புப் பொருள் தோன்ற, மாலறியா நான்முகனுங் கான மலையினை யென்றாரெனினுமாம். மலையாக வெளிப்பட்டும் அறிந்திலர் என்பது ஒரு நயம். தேவருட் சிறந்த திருமால் பிரமன் இவர்களால் அறிய இயலாத இறைவனை நாம் அறிவோமென்று எழுப்பப்பட்டவள் கூறியது. விளை யாட்டாகக் கூறிய பொய்யுரையாகும். இன்னோரன்ன பொய்யுரை களை அவள் பேசும்போது சொற்கள் இனியனவாக இருந்தன வென்பார், " பாலூறு தேன்வாய்" என்றனர். ஊறு தலைப்பாலுக்கு ஏற்றுக. "போலறிவோம்' என்புழியுள்ள 'போல்" என்பதை "பாலூறு தேன்" என்பதனோடு இயைத்துத் தேன்போல் பேசும் வாய் எனக்கொண்டு பொருள் கொள்க் அன்றி ஆண்டுப் போல் என்பதை அசையாக்கி, ஈண்டுப் போல் என்னும் உவமவுருபை விரித்துக கோடலுமாம். சொல்லில் இனிமையும் பொருளில் பொய்மையுந் தோன்றக் கூறுதல் வஞ்சகர் இயல்பாதலின், " படிறீ" என விளிக்கப் பட்டாள் என்பது. இறைவனை நாம் அறிவோம் என்று வாயளவில் பொய்யுரை கூறி விட்டு இறைவன் புகழ் பாடுதற்குரிய இக்காலத்தில் நாம் வந்து அழைக்கவும் எழாமல் துயில்கின்றனை இனியாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கட்கடையைத் திறந்து பார்த்து வாயிற்கடையினையாவது திறப்பாயாக வென்பார் "கடை திறவாய்" என்றனர்.
அவனருளே கண்ணாகக் காணினல்லால் இந் நிலவுலகத்தவராயி னும் விண்ணுலகத்தவராயினும் ஏனையுலகங்களில் உள்ளவராயினும் யாம் காண்போம் என்று தம் வன்மையால் முயலின் காண்டற்கு அரியனாவான் என்பது தோன்ற "ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான் என்றனர். ஏகாரங்கள் எண்ணுப் பொருளன. அப் பெருமான் மாட்டு அன்பு செய்தற்கு உரிய சாதனம் அவன் திருமேனி யைக் கண்டு இன்புறுதலும் அவன் அளப்பரும் அருட்குணத்தில் ஈடுபடுதலுமாம் என்பார். "கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ் சீலமும் பாடி" என்றார். இறைவனுக்குத் திருமேனி உருவம் அருவம் அருவுருவம் என முத்திறப்படும் என்ப. இதனை

1 " உருமேனி தரித்து கொண்ட தென்றலும் உருவி றந்த
அருமேனி யதுவுங் கண்டோம் அருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்று நந்தங்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு தானே" .

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாலும் உணர்க. இம் மூன்றனுள் உருவ வழிபாடே நமக்கு இயைந்ததென்பார். "கோலமும்" எனவும் அப் பெருமானுடைய அளப்பரும் அருட்குணங்களுள் பெண் மக்களாகிய நம்மை அடிமைகொண்டு நம் குற்றத்தை யொழித்துச் சீராட்டுங் குணமே நம் அநுபவத்தால் அறியத்தக்க தென்பார் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டுஞ் சீலமும்" எனவும் கூறினர் என்க. முதலில் கண்களுக்கு இனிய திருமேனியின் பொலிவில் இன்புறுதலும், பின் கரணங்களுக்கு இனிய திருமேனியின் பொலிவில் இன்புறுதலும் பின் கரணங்களுக்கு இனிய அருட் குணங்களில் ஈடுபடுதலும் இறைவனது அருமையில் எளிய அழகின் பயனாக நிகழும் என்பது கருத்து.

இவ்வாறு அப்பெருமானுடைய திருக் கோலத்தையும் அருட் செயலாகிய சீலத்தையும் புகழ்ந்து பாடிச் சிவபெருமானே எம்மைக் காத்தருள்க என்று அபயம் வேண்டுங் குறிப்பு மொழியாற் கூவி அழைத்தும் என்பார், "சிவனே சிவனேயென் றேலமிடினும்" என்றனர். ஓலம் - அபயம் வேண்டிக் கூவும் குறிப்பு மொழி, யாம்
1. சிவஞானசித்தி - சூ 1. செ. 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயம் வேண்டிக் கூவும் குறிப்பு மொழி, சிவபெருமானை வேண்டி ஓலமிட்டுக் கூவியும் அறிந்திலை யென்பார் எனவும், இறைவன் திருப்பெயர்ப் பெருமையை யுணராமையாகிய அவ்வளவினன்றி எங்கள் பேரொலி கேட்டும் துயில் நீத்தனையோ வெனின் அதுமின்றென்பார் பின்னும் உணராய்காண் கூறினர். காண் - முன்னிலையசை. ஏலம் - மயிர்ச்சாந்து கூந்தற்கிடும் வாசனைச் சாந்து. இஃது அவள் தன்னை அலங்கரித்துக் கொண்டு கிடத்தற்கு உபலக்கணம். கூந்தற்கு மயிர்ச்சாந்து பூசுதல் முதலிய வற்றால் தன்னை அலங்கரித்துக் கொண்டு தூங்குகின்ற நின் தன்மை யிருந்தவாறு என்னே யென்பார் "ஏலக்குழலி பரிசு யாரானும் காண்டற்கரிய இறைவன் நமக்கு இரங்கி எழுந்தருளி யிருக்கும் திருமேனியை அலங்கரித்துக் கண்குளிர மனங்குளிரக்கண்டு இன்புறாமல் புழுக்கூடாகிய இவ்வுடலை யலங்கரித்து இன்புறும் நின் நிலை இரங்கத் தக்கது என்னுங் கருத்தால் "ஏலக்குழலி" எனச் சுட்டுவாராயினர். என்றனர்.

இதன்கண் "ஞாலமே விண்ணே பிறவே யறிவரி யான்" என்ற தனால் இறைவனது சொரூப நிலையும் 'கோலம்'' என்றதனால் தடத்த நிலையம் பெறப்படுதலின், அக்கோலங் கோடற்கு இடனாகிய சத்தியை வியந்தது குறிப்பிற் புலனாதல் அறிக. சிவன் உருக்கோடற்குச் சத்தி என்பதை 1 'காயமோ மாயையன்று கான்பது சத்தி தன்னால்" என்னுஞ் சிவநெறிப் பனுவலானுந் தெளிக.

மானே நீ நென்னலை நாளை வந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலுமே நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார்
கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகாய் உனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

1. சிவஞான சித்தி - சூ 1- செ — 41



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க —ரை): முன்னைத் திருப்பாட்டுக்களில் இறைவனது அருமையில் அழகில் முறையே மொழி மனம் செயல்களுக்கு எளியனா தலைப் பட்டுத்தருளிய அடிகள், இத்திருப்பாட்டில் அப்பெருமான் முக் கரணங்களாலும் தன்னை எளிமையில் வழிபாடு செய்யும் மெய்யன்பரைவலிய வந்து அடிமை கொண்டு அன்னார்க்குத் தலையளிபுரியன் என்பதைப் புலப்படுத்தருளுகின்றார்.

(ப - ரை):- மானே நீ நென்னல் - மருண்ட நோக்கத்தால் மான் போன்றவனே நேற்று, நாளை நானே வந்து உங்களை எழுப்புவன் - நாளை நீயிர் எழுதற்கு முன்னரே யானே எழுந்து வந்து உம்மை எழுப்புவேன், என்றனுமே - என்று சொன்ன அளவிலே போய் விட்டாய்). நாணமே போன திசை பகராய் - அவ்வாறு நாணமின்றிப் போன இசையைச் சொல்வாயாக, இன்னம் புலர்ந்தின்றே - இன்னும் இதன் விடியவில்லையா? வானே நிலனே பிறவே அறிவரியான் வானுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் பிறவுலகத்தினரும் ஆகிய எவராலும் அறிதற்கு அரியவனாகிய சிவபெருமான், தானே வந்து- தானே வலிய நம்பால் வந்து, தலையளித்து எம்மை ஆட்கொண்டரு ளும். தலையளிசெய்து நம்மை அடிமைகொண்டருளுதற்குரிய, வான்வார்கழல் பாடி வந்தோர்க்கு - அழகிய நெடிய வீரக் கழலணிந்த திருவடிகளைப் புகழ்ந்து பாடி வந்தவர்களாகிய எம்பொருட்டு, உன் வாய் திறவாய் உன்வாயைத் திறக்கின்றயல்லை. ஊன் உருகாய்- உடல் உருகப் பெறுகின்றாயுமல்லை உனக்கே கூறும் - இந்திலை உனக்கே பொருந்துவதாகும். எமக்கும் ஏனோர்க்கும் தம் கோனைப்பாடு - எங்களுக்கும் மற்றெல்வோர்க்கும் தலைவனாகிய அப்பெருமானைப் பாடுவாயாக என்பது.

(வி-ரை:- மான்- உவமை ஆகு பெயர், பெண்ணையுணர்த்துகிறது. கன்னியரெல்லோரும் முன்னை நாளிலில் ஒருங்கே கூடிப் நோன்பு குறித்து விடியுமுன் நீராடப் போதல் பற்றிச் சூழ்ந்த பொழுது இப்பொழுது எழுப்பப்படும் பெண் யானே விடியுமுன் எழுந்து வந்து நும் எல்லோரையும் எழுப்புவேன் என்று சொல்லி விட்டுப் போய்ப் பின் அதனை மறந்து மற்றெல்லோரும் தன் கடை வாயிலில் வந்து இறைவன் புகழ்பாடுதலைப் படுக்கையிற் கிடந்தவாறே அறிந்து நாணத்தால் அஞ்சி நோக்கினதாதலின், அக் குறிப்பறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் மருட்சி நோக்குக் குறித்து, "மானே" யென்று அழைப்பாராயினர். சமணர் வஞ்சகச் சூழ்ச்சியினால் மனம் வருந்தியிருந்த மங் கையர்க்கரசியாரை நோக்கி அக்குறிப்பையுணர்ந்த திருஞானசம் பந்தர் 1"மானி நேர்வீழி மாதராய்" என்று அழைத்ததும் ஈண்டு கருதத்தக்கது. நென்னல் நேற்று. அஃது. "என்றலுமே',என்ப தனதோடு இயையும். ஐ - சாரியை. நாளை நானே வந்து எனக் கூட்டுக. எழுப்புபவன் என்று சொல்லிய பின், அச்சொல்லும் நீயும் போனதிசை எம்மால் அறிய முடியவில்லை யென்றது, சொன்னபின் இந்நிகழ்ச்சியிற் சிறிதும் ஈடுபட்டிலை யென்பது பற்றி. இறைவன் புகழ்பாடி இறைவியின் நோன்பிற் கலந்து கொள்ள முதலில் வருவ தாகச் சொல்லியபடி நடந்து கொள்வது இன்றியமையாததாகவும், அதனைப் புறக்கணித்து மறந்துவிட்டனையென்பார் "நாணாமே போன திசை பகராய் என்றனர் " என்றலும் நாணாமே" என்பதும் பாடம். இப் பொழுது நின்பக்கலில் வந்து இறைவன் புகழைப் பாடியும் எழவில்லை இந் நிகழ்ச்சியில் இத்துணைப் புறக்கணிப்பிருப்பினும், இயல்பாகத் துயில் நீத்தெழ வேண்டிய காலம் வந்தும் உ ணர்ந்திலையென்பார் " இன்னம் புலர்ந்தின்றோ" என்றனர்.

இதன் முன்னைத் திருப்பாட்டில் ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்' எனவும், இத் திருப்பாட்டில் வானே நிலனே பிறவே யறிவரியான்" எனவும் கூறியவற்றின் பொருளொன்றே யாயினும், அத் திருப்பாட்டில் இறைவன் திருமேனி தரித்துக்கொண்டு எழுந்த ருளிக் காட்சியளித்து இன்புறுத்தியதற்கு இடனாதல் பற்றி ஞாலத்தை முதற்கண்ணும், இத்திருப்பாட்டில் வானுலகத்துக்கும் அப்பாலுள்ள சிவலோகத்திலிருந்து வானுலகத்துள்ள தேவர்க்கும் அரியனாய் ஏழை களாகிய தம்மை யாட்கொள்ள வருதற்கு வான்வழி இடனாதல் பற்றி வானை முதற்கண்ணும் கூறினரென்பது, எங்கும் நிறை பொரு ளாகிய இறைவனுக்கு ஓரிடமும் அவ்விடம் பெயர்ந்து பிறிதோ ரிடத்தை அடைதலுமாகிய நிகழ்ச்சிகள் புராண முதலியவற்றில் கேட்கப்பட்டமையாலும், பத்திமை மிகுதியாலும் அக்கன்னியரால் மேற்கொள்ளப்பட்டன வென்பது. அரிய தவம் புரிந்து அறிதற்கரிய இறைவனை அடைதற்குரிய தவ வன்மை இல்லாத தம் மாட்டுப்

1. திருஞானசம்பந்தர் தேவாரம் 3-39-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரருள் காரணமாகத் தானே வந்ததோடு சிறெந்த கருணைக்கு நம்மை இடனாக்கி ஆளாக ஏற்றுக் கொண்டருளினன் என்பார் 'தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்" எனவும், அங்ஙனம் தமை ஆட்கொண்டருளுதற்குரிய சிறந்த கருவி அப்பெருமான் திரு -வடியே யென்பார் - ஆட்கொண்டருளும்.... கழல் - எனவுங் கூறினர். அவ்விறைவன் திருவடி தம் நெஞ்சத்தைக் கவர்ந்தது பற்றியும் தமக்குகேடு வாராது பாதுகாப்பது பற்றியும் முறையே அழகும் விரமும் அமைந்தன வென்பது தோன்ற வான்வார் கழல். என்றனர் வான்-அழகு.கழல்- ஆகுபெயர் உலகியற் செய்தி குறித்து நின்னோடு பேச வந்தேமாயின், நீ பொருட்படுத்தாமல் ஏதும் பேசா திருக்கலாம். எல்லாம் வல்ல ஆண்டவன் எளியேமாகிய தம்பொருட்டு இரக்கமற்ற வலியவந்து ஆட்கொண்ட திறத்தைக் குறித்து அப் பெருமான் புகழை மனங்குளிர்ந்து மாடிவந்த எம்மோடு பேசுதற்கு வாய்திறவாம விருத்தல் தக்கதோ என்பார், கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய் என்றனர். திறவாய் என்பது திறவாமலிருக்கின் றாய் என்னும் பொருட்டு, ஒருவாறு இறை புகழைக் கேட்டு மௌன நிலையில் நினைந்து மனம் உருகுதலால் பேச நாவெழாமலிருக்கின்றனையோ வென்றால் பத்தியால் நெஞ்சுருகப் பெற்றார்க்கு உடலுருகிக் கண்ணிரும் வெளிப்படுமாதலின், அவ்வாறில்லாமையால் அதுவுமில்லை வென்பார் -ஊனே உருகாய்" என்றனர். இறைவனை நெஞ்சம் நினைந்துருகுங்கால் உடலுங் குழைந்துருகு மெண்பதை 1. "புன்புலால் யாக்கை புரை புரை கனியப் பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென், என்பெலா முருக்கி" யென அடிகள் பிறிதோரிடத்துத் தம் அநுபவ நிலை கூறியதனால் அறிக.

இவ்வாறு நாளைவந்துங்களை நானே எழுப்புவன் என்ற சொல்லைக் கடிதின் மறத்தலும், இறைவன் புகழ்பாடி வந்த எம்மைப் புறக் கணித்து வாய்திறந்து பேசாமலிருத்தலும், நெஞ்சம் உருகி உடல் தரையாமலிருத்தலும் ஆகிய இந்நிலைஅன்புடையார் பிறரிடத்துக் காண்டறகரியது, நினக்கே பொருந்துவதாகும் என்பார் உனக்கே யுறும் என்றனர். ஏகாரம் பிரிநிலை தோற்றமுமாம். இனியாவது படுக்கையினின்றும் எழுந்து நமக்கும் பிறர்க்குத் தலைவனாகிய இறைவனை எம்மோடு சேர்ந்து பாடுவாயாக என்பார்.

*1.திருவா -பிடித்த பத்து-10*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கும் ஏனோர்க்கும் தங்கோனைப்பாடு என்றனர். தங்கோன் என்பது தலைவன் என்னும் பொருட்டு, பாடுக என் புழி வியங்கோள் விகுதி தொக்கது. பின்வருவனவற்றிற்கும் ஒக்கும்.

இதன் கண் வான்வார்கழல்பாடி"என்றதனால் திருவடியாக குறிக்கப்படும் சக்தியை வியந்தது பெறப்படும். ஆதியும் அந்தமும் என்னும் திருப்பாட்டின் இறுதியில் இதனைப் பற்றிய குறிப்பை காண்க.

அன்னே இவையுஞ் சிலவோ பலவமார்
        உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
        தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேரு யின்னந் துயிலு தியோ
        வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

(க-ரை) - முன்னை திருப்பாட்டில் மெய்யன்புடையார் செய்யும் எளிய வழிபாட்டிற்கிரங்கி வலியவந்து தலையளி புரியும் இறைவன் இயல்பைப் புலப்படுத்தருளிய அடிகள், இத் திருப்பாட்டில் அப் பொமான்மாட்டுச் செய்யப்படும் தலையன்பில் திறத்தை வெளிப்படும் அருளுகின்றார்.

(ப - ரை) : - அன்னே தாயே, இவையும் சிலவோ செயல்களுள் இவைகளும் சிலவளவோ, பல அமரர் உன்னற்கு யான் -பல தேவர்களாலும் நினைத்தற்கும் அரியவனும், ஒருவன் ஒப்பற்றவனும், இரும் சிரான் -மிக்க பெருமையுடையவனும் ஆகிய இறைவனைப் பற்றிய, சின்னங்கள் கேட்ட சிவன் என்றே வாய்திறப்பாய் - எக்காளம் சங்கு முதலியவற்றின் ஒலிகளை க் கேட்ட அளவில் சிவசிவ வென்றே சொல்லி வாயைத் திறப்பாய், தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய் - தென்னவனே என்று பிறர் சொல்லுமுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனலிடைப் பட்ட மெழுகு போல் உருகுவாய், (இப்பொழுதே) என்னானை என் அரையன் இன் அமுது என்று எல்லோரும் வெவ்வேறாய்ச் சொன்னோம் கேள் - எனக்குத் தந்தை எனக்கு அசுரன் இனிய அமிழ் தம் என்று யாமெல்லோரும் தனித் தனியாகவும் கூறினுனோம் அவற் றைக் கேட்பாய், இன்னம் அது துயிலுதியோ - கேட்டும் இன்னும் உறங்குகின்றாயோ?, வல் நெஞ்சம் பேதையர்போல் வாழா கிடத்தி இறைவன் பொருட்டுக் குழை தலில்லாத நெஞ்சம் படைத்த அறிவிலார் போலச் சும்மா இடக்கின்றாய் துயிலின் பரிசு என்னே உறக்கத்தின் தன்மைதான் எத்தகையது என்பது.

(வி-ரை) - எழுப்பியவர் ஆண்டால் மூத்தவராகவும் எழுப்பப்பட் டவள் இளையவளாகவும் குறிக்கப்படுதலின் "அன்னே" எனச் செல்வ மொழியால் அழைப்பார் ஆயினர். "இவையுஞ் சிலவோ" என்புழி "இவை" யென்பது அன்பினால் இறைவனிடத்து ஈடுபடுத்தும் அன்பி லள்போலக் கிடத்தலுமாகிய ஒன்றுக்கு ஒன்று முரணான செயல்'களைச்சுட்டும். இப்படியும் சில செயல்கள் நின்பாலுள்ளனவோ என்பது குறிப்பு. "பல அமரரும்' என்புழி முற்றும்மையும் உன்னற்கும் என் புழி எச்சவும்மையும் செய்யுள் விகாரத்தாற்றெக்கன. நினைப்பிற்கு அரியனாங்கால் சார்தற்கு அரியன் என்பது கூறாமலே தெளியப்படும் "ஒப்புடைய னல்லன் ஒருவமனில்லி" யாதலின் ஒருவன் என்றார். நல்வினப்பயனே துய்க்கும் தேவர் பலர்க்கும் நினைத்தற்கு அரியனா தலும், ஈடும் எடுப்புமில்லாமையும் பெருமைக்குரிய குணங்களாயி னும் அத்துணைப் பெரியோன் நம்மைப் போன்ற எளியவர்க்கிரங்கி யாட்கொள்ளும் அருஞ்செய லுடைமையால், மிக்க பெருமையுடை யான் என்பது தோன்ற "இருஞ்சீரான்" என்றார். பிறராற் செய்தல் கரிய செயலைச் செய்தல் பெருமைக் குணத்தின் இயல்பென்பது உணரத்தக்கது. சின்னங்கள் என்ற பன்மையால் இறைவன் எழுச்சியை நினைப்பூட்டும் எக்காளத்தோடு சங்கு முதலியனவும் கொள் ளப்படும். இம் மங்கல வொலியைக் கேட்ட அளவில் சிவ சிவ எனும் மகாமந்திரத்தைச் சொல்லிக் கொண்டே வாய் திறக்கும் இயல்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்பார், 'சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்" என்றனர். இனி சின்னங்கள் - அடையாளப் பொருள்களெனவும், கேட்டல் இலக்கணையாற் காண்டலை யுணர்த்து மெனவும் கொண்டு திருநீறு கண்மணி புனைந்த சிவனடியாரைக் கண்ட அளவில் சிவனெனவே கூறுவாயெனக் கோடலுமாம்.

தென்னன்-பாண்டியன் வழுதி மருமகனாகி மீன நோக்கின் மடவரலை மணத்துலக முழுதாண்டசுந்தரனாதலின்இறைவனை தென்னன் என பலவிடத்தும் கூறவர். எந் நாட்டவர்க்கும் இறைவனாயினும் நேரில் ஆட்சி புரிந்த சிறப்புரிமை தோன்றத் தென்னாடுடைய சிவன் எனக்கூறியதும் ஈண்டு உணரத்தக்கது. இறைவன் இறைவி முருகன் இம்மூவரும் அரசு புரிந்த பெருமை இப்பாண்டிநாட்டிற்கேயுரியது என்பதை,

"உலகம் யாவையும் ஈன்றவள் உம்பரு ளுயர்ந்த
திலக நாயகி பரஞ்சுடர் சேயென மூன்று
தலைவ ரான்முறை செய்தநாடிஃ தன்றிச் சலதி
கலவு பாரினுண்டாகுமோ துறக்கத்து மஃதே

என்பதனாலும் அறிக. எக்காரணத்தை முன்னிட்டாவது தென்னன் பிறர் கூறக் கேட்ட ளெவில் அச்சொல் முடிதற்குமுன் தீயிடைப்பட்ட மெழுகு போல உருகும் இயல்பினை யென்பார். "தென்னாவென்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்" என்றனர். வாக்கிய ஒலிகேட்ட துணை யானே சிவநாமங் கூறுதலும், சிவநாமங் கேட்ட துணையானே நெஞ்சம் உருகுதலும் உடைய நீ இப்பொழுது யாம் உளங்கனிந்து அன்புரைகள் பல பகர்ந்தும், துயில் நீத்தெழாமலிருப்பது என்னையோ என்றனரென்பது, யாங்கள் ஒருங்கே சோந்தும் இறைபு கழைப் பாடினோம். கூட்டொலி நின் செவிக்குத் தெளிவாகக் கேட்கப்படாமலிருத்தல் கூடுமோ என்னும் ஐயத்தால் பின்னர்த் தனித் தனியாகவும் "என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும் வெவ்வேறாய்ப் பாடலானோம் எனவும் வந்தவர்களாகிய நாங்கள் கூறிய இந்நல்லுரைகளைக் கேட்பாயாக என்பார். சொன்னேங்கேள் எனவும் கூறினர் என்க. என்னானை என் தந்தை "என்" என்பதன் பின் "ஆன்" சாரியை, ஐ-தந்தை. எனக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புரிமைப் பாதுகாப்பு நோக்கத் தந்தையாவானெனவும், பொதுவாட்சி நோக்க எனக்கு அரசனாவானெனவும், இன்புறுத்தலின் அமுதாவானெனவும் கூறினரென்பது. தனித்தனிக் கூற்றாதல். பற்றி என் தந்தை என் அரையன் என ஒருமையாகக் கூறப்பட்டன வென்க. இவ்வினிய மொழிகளை நின்

வென்க. இவ்வினிய மொழிகளை நின் அருகில் வந்து கூறக்கேட்டும் இன்னும் உறங்குகிறாயோ என்பார் "இன்னந் துயிலுதியோ' என்றனர்.1.நீ பருவத்தாற் பேதையே யல்லது அறிவின்மையாற் பேதை யல்லை அங்ஙனமிருந்தும் மனமுருக்கத்தக்க இறைபுகழைப் பாடக் கேட்டும் வலிய நெஞ்சு படைத்த அறிவிலிகளைப் போல வாய் பேசா மற் கிடக்கின்றாயே ஈதென்னை யென்பார் "வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்" என்றனர். இறைவன் புகழுரை கேட்ட அளவிலே ஈடுபட்டுக் குழையும் உள்ளமுடைய நீ இங்ஙனம் உருக்கம் சிறிதுமின்றி உறக்கத்தில் ஆழ்ந்து கிடத்தலை நினையுங்கால் உறக்கத் தின் இயல்பு மிக வலியது போலும் என்பார் என்னே துயிலின் பரிசு" என்றனர். "யோசிக்கும் வேளையிற் பசி தீர உண்பதும் உறங் குவதுமாக முடியும்" என்று பெரியோர் கூறியது உலகியலில் உயிர் போகு பொது நெறி பற்றியதாகலின், நின்னைப்போன்ற இறையன்பி லீடுபட்டாரைப் பற்றியதன்று என்பதாம்.

இதன் கண் தென்னா வென்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்' என்றதனால் சிறந்த பத்திக்கு ஏதுவாகிய தென்னன் என்னுஞ் சொல் மீன நோக்கின் மடவாலை மணந்து பெற்றது என்பது பெறப்படுதலின், சத்திபை வியந்தது புலனாயவாறறிக.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில், பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய் (8)

1. எழுப்பப்பட்ட இவள் பேதைப் பருவத்தினள் என்பது முக வரை. 9ம் பக்கத்திற் காண்க. 25 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க -ரை) :- முன்னைத் திருப்பாட்டில் இறைவன்பாற் செய்யப்படும் தலையன் பின் திறத்தைப் புலப்படுத்தருளிய அடிகள், இத் திருப்பாட்டில் அங்ஙனம் தலையன்பு செய்தற்கேற்ற அவ் இறைவனது நிகரற்ற பெருமையையும் தலைமையையும் அருளிச் செய்கின்றார் .

(ப-ரை) :- கோழி சிலம்ப எங்கும் குருகு சிலம்பும் கோழி கூவ எங்கும் பறவைகள் ஒலி செய்யும். ஏழில் இயம்ப வெண்மை சங்கு எங்கும் இயம்பும் நாகசுரம் வாசிக்குமாறு வெள்ளிய சங் கங்கள் யாண்டும் ஒலிக்கும், கேழ் இல் பரம்சோதி - ஒப்பற்ற பரம் பொருளாகிய ஒளியுருவினனுடைய, கேழ் இல் பரம் கருணை பற்ற மேலான கருணை முதலிய, கேழ் இல் விழுப்பொருள்கள் ஒப்பற்ற சிறந்த பொருள்கள் அமைந்த புகழ்ப் பாடல்களை, பாடி னோம் , கேட்டிலையோ நீ கேட்டாயல்லையோ, வாழி வாழ் வாயாக, ஈது என்ன உறக்கமோ ஈது எத்தகைய தூக்கமோ, வாய்திறவாய் நின் வாயைத் திறக்கின்றாயல்லை, ஆழியான் அன் புடைமை ஆம் ஆறும் இவ்வாறோ அருட்கடலாகிய சிவபெருமான் மாட்டு அன்பு செய்யும் நெறியும் இம் முறைதானோ, (இனியாவது) ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை பேரூழியின் இறுதியில் தலைவ னாய்த் தான் ஒருவனே அழிவில்லாமல் நின்றவனும், ஏழை பங்காள னையே அம்மையை ஒரு கூற்றிலுடையவனும் ஆகிய பெருமா னையே, பாடு பாடுவாயாக என்பது.

(வி-ரை) :- கோழி சேவல், இருள்புலர் காலத்தையறிவிப்பது சேவல் கூவுதல். சிலம்புதல் ஒலித்தல், கோழி கூவியவுடன் காக்கை முதலிய பறவைகள் விழித்தெழுந்து ஒலிப்பனவாம். குருகு பறவைப் பொது. ஏழில் எழிசைகளுக்கும் இடனாயது நாக சுரம் என்னும் துளைக்கருவி. திருக்கோயில்களில் அதிகாலையில் முத லிற் சங்கு முழக்கஞ் செய்யப்படும். அவ்வொலி கேட்ட துணையானே நாகசுரம் வாசித்தல் முறையாதலின் ''ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கு எங்கும் " என்றனர். "ஏழிலியம்ப' என்புழி இயம்ப வென்பது காரியப் பொருளில் வந்த வினையெச்சம். எங்கும் என்பது ஈரிடத்தும் முறையே நானா பக்கங்களையும் திருக்கோயில்களையும் உணர்த்தும், சிலம்புதலும் இயம்புதலும் விடியலைக் குறிப்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேழ் -ஒப்பு. கேழில் என்றது ஈடும் எடுப்பும் இல்லாத என்றபடி. இது பின் வருவனவற்றிற்கும் ஒக்கும். மாயாகாரியமாகிய ஒளி யீனீக்குதற்கு,, "பரஞ்சோதி" எனப்பட்டது. இறைவனை ஒளியுருவ மாகப் பெரியோர் கூறுதலைப் பலவிடத்துங் காணலாம். இறைவனது அளப்பெரும் பேரருட் குணத்தைக் "கேழில் பரங்கருணை" யென்றனர். விழுப்பொருள்கள் என்றது சிறந்த பொருளமைந்த புகழ்ப் பாடல்களை யுணர்த்தும். இறைவன் புகழே பொருள் சேர் புகழ் எனப்படும். ஏனையோரைப் பற்றின வெல்லாம் அன்னவாகா என்பது. இதனை 1 "இருள்சே ரிரு வினையுஞ் சேரா விறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்புழி "இறைமைக் குணங்கள் இலராயி னாரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றுமுடைய இறைவன் புகழே பொருள் சேர் புகழெனப்பட்டது" என்று பரிமேலளகர் கூறிய வுரையானு முணர்க. ஒப்பற்ற இறைவனது சிறந்த கருணை முதலிய பொருளமைந்த புகழ்ப்பாடலை யாம்பாட நீ கேட்டனை யென்பார். "யாம் பாடக் கேட்டிலையோ" என்றனர். கேட்டிலையோ என்புழி ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. அங்ஙனம் கேட்டும் வாளாவிருக்கும் நீ எத் தகைய தீங்கும் நேராமல் வாழக்கடவையென வாழ்த்துவார் "வாழி', யென்றனர். இவள் பேதைப் பருவத்துச் சிறுமி யாதலின் அவள்பா லுள்ள அன்பினால் ஆண்டின் முதிர்ந்த பெண்கள் இவ்வாறு கூறுவா ராயினர் என்பது கருத்து.

யாம்பாடிய பாடலோ இறைவன் பொருள்சேர் புகழமைந்த படல் - பாடின காலமோ இருள் புலர் காலை இடமோ நின்பக்கல் அப்பாடலைக் கேட்டும் கண் திறந்தாயே யன்றி வாயைத் திறந்து எம்மோடு சேர்ந்து பாடினாயல்லை இங்ஙனம் கண் திறந்தும் வாய் திறவாமலிருக்கும் இந் நிலையும் நின் தூக்கத்தின் ஒருவகை கொலோ என்பார் "ஈதென்ன வுறக்கமோ வாய் திறவாய்' ' என்றனரென்பது' வாய்திறவா யென்றதனாலும் என்ன வுறக்கமோ என்றதனாலும் கண் திறத்தல் பெறப்பட்டது. மேலும், அருட்பெருங் கடலாகிய இறை வன்பால் நினக்குள்ள அன்பு நெறியும் இங்கனம் யாம் இறை புகழ் பாடுதலாகிய இந் நிலையிலும் நீ வாய்திறவாம லிருத்தலாகிய இம் முறைதானோ வென்பார்" ஆழியா னன்புடைமை யாமாறு மிவ் வாறோ" என்றனர். அடியார்.

1. திருக்குறள் (அடியார் 5. 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனிடத்து வைக்கும் காதல் அன்பும். ஆண்டவன் எல்லா வுயிர்கள் மாட்டுஞ் செலுத்தும் கருணை அருளுமாகும். இங்கே ஆழியானன் புடைமை" என்புழி அடிமையின் அன்பு குறிக்கப்பட்டமையின் அதற்கேற்ப ஆண்டவன் திருவருளை யியைத்து அருளாழி யெனக் கொள்ளுதல் பொருத்தமாகும். 1 பரங்கருணைக் தடங்கடலை" என்பது அடிகள் திருவாக்கு அருட்பெரும் கடலாகிய இறைவன்பால் வைக்கும் அன்பு தலையன்பாதல் வேண்டும் என்பது கருத்து. இனி, ஆழியான- கொண்டு, திருமால் இறைவனிடத்து அன்பு செய்யும் நெறியும் இவ் வாறு கொல் எனப் பொருள் கூறி, அறிதுயில் மேற்கொண்டு நீயும் அன்பு செய்கின்றனை போலும் என்பது கருத்தாகக் கோடலும் ஒன்று, மகா சங்கார காலமாகிய பேரூளியின் இறுதியில் மாயாகாரியமாகிய எல்லாம் அழிந்து ஒடுங்கியபின், சிவபெருமான் ஒருவனே முதல்வனாக அழியாப்பொருளாக நிலைபெற்றுப் பின்னரும் படைப்பாகி தொழில் செய்தற்கு நாத தத்துவத்தை யெழுப்பி நிற்பன் என்னும் உண்மை தோன்ற, ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை" என்றார்.

2. "ஓதத் தொலி மடங்கி யூருண் டேறி
யொத்துலக மெல்லாம் ஒடுங்கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே"

என்னும் தமிழ் மறையானும் இவ்வுண்மை தெளிக. இத்துணை உயரிய பரம் பொருளாகவுள்ள பெருமான் ஏழையேமாகிய நம்பொருட்டு அம்மை யொரு கூறனாகத் திருமேனி கொண்டெழுந்தருளிப் பாதுகாக்கும் இயல்பினன் என்னும் பொருடோன்ற ஏழை பங்காளன்" என்று கூறினர். ஏழை பெண்: உமையம்மை. ஏகாரம் பிரிநிலை. நம் மாற் பாடப்படுபவர் மற்றைத் தேவரல்லர் என்னும் பொருள் தோன்ற நிற்றலின் தேற்றமுமாம்.

இதன் கண் " ஏழை பங்காளனையே பாடு" என்றமையால் சத்தியை வியந்தது கூறப்பட்டமை பறிக.

1. திருவா. திருத்தெள்ளேணம் - 15, 2, அப்பர் தேவாரம் - 6-35-2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்கா வோம்
அன்னவரே யெங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய் (9)

(க-ரை) - முன்னைத் திருப்பாட்டில் அடியார் தலையன்பு செய் தற்கு ஏற்ற இறைவனுடைய அளப்பரும் பெருமையையும், தலைமை யையும் அருளிச் செய்த அடிகள், அவற்றுள் எல்லாவற்றையும் தன் னுளடக்கி நிற்கும் காலத்தாலும் இடத்தாலும் அளப்பரிய பெருமை யின் இயல்பைக் கூறுவான் தொடங்கி இத் திருப்பாட்டில் காலத் தால் அளவிடற்கரிய முதன்மையைப் புலப்படுத்தருளுகின்றார்.

(ப-ரை) :- முன்னை பழம் பொருட்கும் முன்னே பழம் பொருளே முற்பட்டனவாகிய பழைய பொருள்கள் எல்லாவற்றிற்கும் முற்பட்ட பழைய பொருளாகவுள்ளவனே, பின்னை புதுமைக்கும் பேர்த் தும் அப் பெற்றியனே பிற்பட்டனவாகிய புதிய பொருள்கள் எல் லாவற்றிற்கும் மீண்டும் அப் புதுப் பொருட்டன்மை யுடையவனே. உன்னை பிரான் ஆகப் பெற்ற உன் சீர் அடியோம்- உன்னை ஆண்டவனாக கிடைக்கப் பெற்றமையால் உன் சிறப்புமிக்க அடிமைகளாகிய யாங்கள், உன் அடியார் தாள் பணிவோம் நின் அடியாரு டைய திருவடிகளை வணங்குவோம், ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம் அங்கனமே நின் அடியார்க்கே உரிமை யுடையவர்கள் ஆவோம். அன்னவரே எம் கணவர் ஆவார் - அவ்வடியார்களே எங்களுக்குக் கணவ ராவார். அவர் உகந்து சொன்ன பரிசே அவ்வடியார் மனமுவந்து இட்ட கட்டளைப்படியே, தொழும்பாய் பணி செய்வோம்- அவர்க்கு அடிமையாய் நின்று ஏவல் கேட்போம். எங்கோன் எமக்கு இன்ன வகையே நல்குதியேல் - எங்கள் பிரானாகிய நீ எங்களுக்கு இங்ஙனமே அருள் புரிவையாயின்,
என்ன குறையும் இலோம்- எத்தகைய குறைபாடும் இல்லாதவரா வோம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி.வ) இதன் கண் எழுப்பியவரும் எழுப்பப்பட்டாரும் ஆகிய கன்னி பெண்கள் எல்லோரும் ஒருங்கே கூடி இறைவனை முன்னிலைபபடுத்திப் புகழ்ந்து பாடிப் பயன் வேண்டுதல் கூறப்படுகின்றது. முன் பின் பழமை புதுமை என்னும் இவ் வழக்குக்கள் கால தத்துவத்தில் பின் தோன்றியவை. இறைவன் அக்கால தத்துவத்திற்கும் அப்பாற் பட்ட பொருள், ஆயினும், கால தத்துவத்தின் பிற்பட்ட பொருள் களில் வைத்தே முதலில் மக்களாராய்ச்சி நிகழ்வது இயல்பாதலில முன்னைப்பழம்பொருள் என்பது கால தத்துவத்துளடங்கிய முற்பட்ட பழைய பொருள்களைக் குறிக்கும். இதுகாறும் வெளிப்பட்ட மாயாகாரியவாகிய விசித்திரப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் முற்பட்ட பழைய பொருளாவானும் அவ்விறைவனே: இதுகாறும் வெளிப்படாதபுதிய பொருள்கனெ வற்றிற்கும் புதிய பொருளாக ஒன்று தோன்றுமாயின், அப்பொருளில் அமைந்துள்ள புதுமைத் தன்மையுடையானும் அப்பெருமானே யென்பார்,

> "முன்னேப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
> பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'

என்றார், பெற்றியன் - புதுமைத் தன்மையுடையவன். 1. "உலகெலாமாகி வேறா யுடனுமாய் நின்ற இறையிலக்கணத்துள் உலகெலா மால் நின்ற நிலைபற்றியே சிற்றறிவினராகிய மக்களுக்கு ஆராய்ச்சி நிகழ்வது இயல்பாதலின் அம் முறைபற்றிக் கூறப்பட்டது இது வென்க, பழமையென ஒன்று துணியப்படுமாயின் அதற்கும் பழமை யாய், புதுமையென ஒன்று தோன்றுமாயின் அதற்கும் புதுமையாயுள்ள பொருள் இறைவளே என்பது கருத்து.

2. "வேதம் காட்சிக்கும் உபநிடத்துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணவன் புதியரிற் புதியன்
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதிய யுயிர்க்குயி ராய்நின்ற வமலன்"

என்று கூறியதும் இக்கருத்துப் பற்றியே யென்க.

1. சிவஞான சித்தியார் - சுபக்பக்கம்-செ-91
2. கத்தபு - சூரனமைச்சு - செ.127



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி இறைவன் தனக்குப் பின்றோன்றிய யாக்கையுடையாரனை வரும் மூப்பவும், தான் நிலைபெற்ற இளமைத் தன்மை யுடையனாயிருத் தலின் புதுமைத் தன்மையுடையன் எனவும், எல்லா யாக்கைக்கு முன்னே தனது இச்சையாற் கொள்ளப்பட்ட திரு மேனியை யுடைய னாதலின் பழம்பொருளாதலும் உடையான் எனக் கருத்துக்கோடலும் ஒன்று. பழமையைப் பெருமையென்று கருது வார்க்குப் பழமையாற் பரம் பொருளாதலும், பழமையிற் குறைகருதிப் புதுமையை விரும்பு வாரக்குப் புதுமையிற் புதுப் பொருளாதலும் உடைய நின்னை ஆண் டவனாய்ப் பெற்றமையால் அறிவிற் சிறியேமாயினும் நின் அடிமை யிற் சிறந்தவராயினே மென்பார் "உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்" என்றனர். 'பெற்ற" என்னும் எச்சம் காரணப்பொ ருட்டு. இறைவ! நினக்கு அன்பு செய்து நின் அடிமைப்பேறு பெற்ற தன் பயனாக நின் அடியவராகிய மெய்யன்பர்களின் திருவடியை வணங்கப்பெற்றே மென்பார், "உன் சீரடியோம் உன்னடியார் தாள் பணிவோம்" என்றனரென்க. சிறந்த மெய்யடியாரை வணங்கும் பேறு இறை வணக்கத்தின் பயனாக நிக ழக் கூடுமென்பதைத் திருஞானசம் பந்தர் திருக்காளத்தி இறைவனை வணங்கியபின் அதன் பயன் கைவரப் பெற்றது போலக் கண்ணப்ப நாயனார் திருவுருவைக் கண்டு வணங்கப் பெற்றனர் என்பதனாலறி யலாம். இதனை,

1. "வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண் பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்"
எனவும், அதற்கு ஏதுவாக,

2. "உள்ளத்திற் றெளிகின்ற அன்பின் மெய்ம்மை
யுருவினையும் அவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையு முடன் கண்ட விருப்பம்"
எனவும் சேக்கிழார் கூறியவற்றானுணர்க.

சிவனடியாரை வணங்குதலேயன்றி எம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அவர்க்கே யுரிமைப்படுத்தலும் செய்வோ மென்பார் "ஆங்கவர்க்கே பாங்காவோம்" என்றனர். தாள் பணிதல் சாத னமும் பாங்காதல் சாத்தியமுமாம். ஈண்டுச் சாதனம்

1. பெரியபு- திருஞான- 1022 2. ஷெ ஷெ - 1023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுமையிலும் சாத்தியம் ஒற்றுமையிலும் வைத்து உணரத்தக்கன ஞானானுபவ நிலையில் உடல் பொருளாவிகளை ஆசிரியன் பால் ஒப்புவித்து ஞானானுபவ இன்பம் பெற விளையும் மாணவர் போல உலகியல் நிலையில் தம் உடல் பொருள்ளாவிகளை சிவனடியார் பால் ஒப்புவித்து இன்பம் பெற விளையும் கன்னிப்பெண்கள் அதற்கேதுவாக அவ்வடியாரையே தமக்குச் கணவராக வேண்டுவாராய் "அன்னவரே யெங்கண வராவார்" என்றனர். தலைவர் அடிமைக்குக் கட்டளையிடுதல் அதி கார முறையிலும் விருப்பின்றியும் நிகழ்தல் கூடும் அங்கனம் இல்லாமல் உள்ள மகிழ்ந்து இடும் கட்டளையாதல் வேண்டு மென்பார் "அவரு கந்து சொன்ன பரிசே" எனவும், பொருண் முதலிய காரணம் பற்றியும் பணிசெய்தல் கூடுமாதலின், அதனை விலக்குதற்குத் "தொழும் பாய்ப் பணி செய்வோம்" எனவும் கூறினர். "பரிசே" என்புழி ஏகாரம் தேற்றப் பொருட்டு, தொழும்பு என்பது கடமையாக வேற் கொள்ளும் அடிமைத்தன்மை அங்ஙனமாயின், கணவராகப் பெற்றும் பணிசெய்த லால் பெறும்பயன் இன்னதென வேண்டப்பட்டிலதே யெனின்.

1. "என் கடன் பணி செய்து கிடப்பதே
தன் கடன் அடியேனையுத் தாங்குதல்"

என்னும் தமிழ்மறைப்படி அது செய்தல் இறைவன் கடமையா தலின் கூறப்பட்டில தென்க. மேலும்,

2. அன்பர்பணி செய்யவென்னை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும்"

என்று பெரியார் கூறியதும் ஈண்டு நினைக்கத்தக்கது. எங்கள் ஆண்ட வனகிய நீ இங்கே யாம் தெரிவித்துக் கொண்ட முறைப்படி எமக்கு அருள் செய்வையாயின், யாங்கள் ஏதும் குறையிலராய் இனிது வாழ் வோம் என்று கூறினாரென்பது.

இதன் கட் கூறப்பட்டபடி இறைவன் முன்னைப் பழம் பொருட்கு முகன்னைப் பழம்பொருளாகவும், பின்னைப் புதுப் பொருளாகவும் வெளிப்படுதல் சக்தியோடு கூடியவழியல்லாது நிழாமையின் சக்தியை வியந்து புலப்படுக்கப்பட்டவாறிக.

1. திருநாவு - தேவா -5-19-9 2. தாயுமா - பராபரக்-15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை - பாதாளம் ஏழினுங்கீழ்

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப் பொருண் முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளை காள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். (11)

(க-ரை) :- முன்னைத் திருப்பாட்டில் காலத்தாலும் இடத்தாலும் அளவிடற்கரிய இறைவன் பெருமையுள் காலத்தால் அளவிடற்கரிய முதன்மையைப் புலப்படுத்தருளிய அடிகள், இத் திருப்பாட்டில் இடத் தால் அளவிடற்கரிய தலைமையை அருளிச் செய்கின்றார்.

(ப-ரை) - பாதமலர் இறைவன் திருவடிமலர், பாதாளம் ஏழி னும் கீழ் சொல்கழிவு கீழுலகம் ஏழிற்கும் கீழாகச் சொல்லில் அடங்காத நிலையினது, போது ஆர் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே - மலர்கள் நிறைந்து அணி செய்யப்பட்ட திருமுடியும் எல்லாப் பொருள்களின் முடிவாகவுள்ளது, பேதை ஒருபால் - பெண் ஒரு கூற்றிலுள்ளான், திருமேனி ஒன்று அல்லன் - ஒரு வகைப்பட்ட திருமேனியை யுடையானல்லன், தொண்டர் - தன் அடியார்க்கு, வேதம் முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும் மறை முதலாக விண்ணுலகத்தினரும் மண்ணுலகத்தினரும் புகழ்ந்து பாராட்டினாலும், ஓத உலவா ஒரு தோழன் உளன் - புகழ்ச்சி முற்றுப் பெறாத ஒப்பற்ற தோழனாகவுள்ளான், அரன் தன் கோயில் - அத்தகைய சிவபெருமா னுடைய திருக்கோயிலிலுள்ள, கோது இல் குலத்து பிணாப்பிள்ளை காள் - குற்றமற்ற நலத்தினையுடைய பெண்மக்களே, அவன் ஊர் ஏது அவன் பெயர் ஏது? - அப்பெருமானுக்கு ஊர் யாது? அவன் பெயர் யாது?, உற்றார் ஆர் அயலார் ஆர் - அவனுக்கு உற வினர் ஆவார் யாவர்? அயலார் யாவர்?, அவனைப் பாடும் பரிசு ஏது அவ்விறைவனைப் புகழ்ந்தாடும் தன்மையாது? என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை):- ஒருங்கு சேரந்த கன்னிப் பெண்களனைவரும், அதிகாகவில் சிவபிரானுடைய திருக்கோறி பணி புரிந்து கொண்டிருக்கும் பெண் மக்களை வழித்து இறைவன் பால் தம்மினும் அவர்க்குள்ள அனுக்கம் கருதிப் பாடுதற்குரிய சிலசெய்திகளை வினவுகின்றனர்.

திருமாலும் பிரமனும் தனித்தனியே யாம் பிரமம் என்று செருக் குற்றஞான் று, மலேயுருக்கொண்டு வளர்ந்த சிவபெருமானுடைய அடிமுடிகளை முடிகளை காணுமாறு பணிக்கப்பட்டனராக் அவ்விருவரும் முறையே பன்றியுருவையும் அன்னப்பறவையுருவையும் கொண்டு அகழ்ந்தும் பறந்தும் அடிமுடிகளைக் காண முடியாமல் செருக்கடங்கின ரென்னும் புராண கதையை யுட்கொண்டு கூறுகின்றார். இறைவன் திருவடிமலர் பாதாளத்தின் கீழ் உள்ளது என்று கூறுதலே யமைவு டையதாகவும் பாதாளம் ஏழினுங்கீழ்" என்றது இவ்வண்டத்தின் கீழுலகம் ஏழென்று கூறப்பட்டிருத்தலின். அத்துணையும் சொல்லால் அளவிடுதற்கு உரியதென்னும் கருத்துப் பற்றியாம். கீழேழுலகங்கட்கும் கீழ் என்றால் கீழ் யாண்டுளது எனின், அந்நிலை சொற்களாள் அளவிடுதற்கு இயலாதென்னும் பொருடோன்ற "சொற்கழிவு" என்றனர்.

இறைவன் திருமுடி மிக மேலோங்கிய நிலையினதாயினும் மெய்யன்பர் சாத்தும் மலர்க்கு எளிவரும் இயல்பிற்று என்னும் குறிப்புப் புலப்பட "போதார் புனைமுடியும்" என்று கூறப்பட்டது. அஃது எல்லாப் பொருள்களில் முடிவாக வுள்ளது என்றது. சொற்களாலறிதற் குரிய பொருள்களின் எல்லையைக் கடந்த நிலையிலுள்ளது என்பது குறித்து சொல்வளவைக் கடந்தது திருவடியெனவும் பொருளளவைக் கடந்தது திருமுடியெனவும் கூறியது. சொல் ஆதாரமாகக் கீழ் நின்று தாங்குவதும், பொருள் ஆதேயமாக மேல் நின்று தாங்கப்படுவதுமாகிய இயைவு பற்றியென்க, திருமேனியின் ஒரு கூற்றில் அம்மையுள்ளாள் ஆதலின் போதையொருபால்" எனவும், அதனால் இறைவன் திருமேனி ஆணுரு அல்லது பெண்ணுருவென்னும் இரண்டனுள் ஒன்றாக அமையாமையால் "திருமேனியொன்றல்லன்" எனவும் கூறப்பட்டன.

1. அம்மையை யொரு கூற்றிலுடைய பரம்பொருளை எருவனென்றாதல் ஒருத்தியென்றாதல் கூறுதற்கு இயலாமையாற்போலும் ஒருவர் என் னும்சொல் வழங்கலாயிற்றென்பர் பெரியார்.

1. சிதம்பரச்செய்யுட்கோவை -செ-54.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டான் மறைபுகழும்' என்றபடி மறை. உண்மையுருவாய இறைவன் புகழ்மாலையாக அமைந்தது. அப் புகழ் மாலையாகிய மறைப் பாடல்களைப் பாடி இன்புறவார் தேவரும் மக்களுமேயாவர். அங்ஙனம் மறைகளும் அவற்றை எடுத்தியம்பிப் பொருள் விளக்கும்தேவரும் மக்களும் எத்துணைக் காலம் புகழினும் அப்புகழுரைகளால்அளவிட்டு உரைக்க முடியாத பெருமை வாய்ந்தவன் இறைவன்.அத்துணைப் பெரியோன் தன் தொண்டர்க்குச் சிறந்த நண்பனாவான் எனபார்"ஒதவுலவாஒரு தோழன் தொண்டருளன் என்றார். கொண்டருளன்' என்புழி நான்கனுருபை விரித்து. தொண் டர்க்கு எனக்கொண்டு ஒரு தோழன் என்பதனை அதனோடியைத் துரைத்துக்கொள்க.வைத் துரைத்தக்கொள்க. இனி "ஒரு தோழந் தொண்டருளன். எனப் பாடங்கொண்டு, ஒப்பற்ற மிகுதியான தொண்டரையுடை யான் எனக் கோடலும் ஒன்று தோழம் - பேரெண். 1"ஒருதோழர் தேவர் விண்ணிற் பொலிய என்பது தமிழ் மறை சிவபெருமான் திருக்கோயிலிற் பணிபுரியும் பேறு பெற்ற பெண்மக்களைநோக்கி அரன்றன் கோயிற் பிணாப்பிள்ளை காள்" என்றனர். பிணா-பெண் பிள்ளை, மக்கள் என்னும் பொருட்டு, அப் பெண்மக்கள் ஊனடைந்த உடம்பின் பிறவி தானடைந்த வுறுதியைத் திருக்கோயிவிலே தொண்டு செய்யும் பேற்றினால் பெற்றமை குறித்து கோதில் குலத்து' என்றனர். குலம் - நன்மை. சிவத்தொண்டு ஒன்றே குற்றமற்ற நலம் பயப்பது. அந் நலத்தை யெளிமையிற் பெற்றிருத்தல் குறித்து அவ்வாறு கூறப்பட்ட னர். அப்பணிப் பெண்களுக்கு இறை வன் பாலுள்ள அணுக்கள் குறித்து அவரை வினவலாயினர். திருக்கோயிற் பணிபுரி வார் ஆண் பெண் இருபாலாருமுளர். அவருள் பெண்மக்களை விளித்து வினாவமுற்பட்டதற்குக் காரணம் தம் பெண்மைக்கு ஒத்த தோழமை குறித்தென்க, ஊர் என்பது பூகோளத்தின் ஒரு சிறுகூற்றிலமைந்த சிறு கிராமமாகும். இறைவன் அடியும் முடியும் கீழ் மேல் எல்லைகளைக் கடந்துள்ளன. அத்துணைப் பெரிய பொருளில் அடங்கிய ஒரு சிறு கூறாகிய இடத்தில் அவன் எவ்வாறு அடங்குவன் என்பார் -ஏதவனூர்" என்றனர். பெயர் திருமேனி குறித்து இடப்படுவது. அவன் திரு மேனியோ ஆணுமல்ல பெண்ணுமல்ல. அங்வளமாயின் எப்பெயரால் குறிப்பிடலாமென்பார் "ஏதவன்பேர்"

திருஞான -தேவா -1-71-7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 "ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க் காயிரம்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ'
என்று அடிகள் பிறிதோரிடத்துக் கூறியிருத்தலும் உணர்க.

உலகப்பொருணு கர்ச்சியில் ஈடுபடாமல் இறைபணி புரிதலே கடமையென உணரந்து ஒழுகும் தொண்டர்க்குச் சிறந்த நண்பனாதலேயன்றி வேறு உறவு பகை நொதுமல் இல்லாதவன் என்பார் 'ஆருற்றார் ஆரயலார் என்றனர். வேதங்களும் விண்ணவரும் மக்களும் எத்துணைக்காலம் புகழ்ந்து பாடினாலும் ஓதவுலவாப் பெருமையுடையானைப் பெண் மக்களாகிய யாம் பாடுதல் எவ்வாறு என்பார் "ஏதவனைப் பாடும் பரிக" என்றனர். இங்ஙனம் இப்பாடலின் மூன்றடிகளாலும் கூறப் பட்ட இறைவன் பெருமைகளை ஏதுவாக்கி ஈற்றடிக்குப் பொருள் கூறுதலே சிறப்புடைத்து என்பது.

இதன்கண் 'பேதை யொருபால் திருமேனி யொன்றல்லன்'' என்பதனால் அம்மையின் பெருமை வெளிப்படுதலின் சத்தியை வியந்ததுபெறப்பட்டவாறறிக.

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யா வெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய் (12)

(க-ரை): - முன்னைத் திருப்பாட்டுக்களில் காலத்தாலும் இடத்தாலும் இம் அளவிடக்கரிய இறைவன் பெருமையை அருளிச் செய்த அடிகள், இத்திருப்பாட்டில் அத்துணைப் பெரியோன் காலம் இடங்களினுட் பட்ட சிறியனவாகிய (மக்கள்) உயிர்களை யாட்கொண்டருளுதல் காரணமாக உண்டாகிய அவன் விளையாட்டாகும் என்பதை அருளிச் செய்கின்றார்.

திருவாசகம் - திருத்தெள்ளேணம் - 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப -ரை) :- ஆர் அழல் போல் செய்யா - செறிந்த தீயையொத்த செம்மை நிறம் உடையவனே, வெண்மை நீறாடி - வெள்ளிய திரு நீற்றை நிறைய அணிந்தவனே, செல்வா - வீட்டுத் திருவினையுடை யாய், சிறு மருங்குல் மை ஆர் தடம் கண் மடந்தை மணவாளா சிறிய இடையையும் மை தீட்டப்பெற்ற அகன்ற கண்களையும் உடைய உமையம்மையின் கணவனே, ஐயா - எங்கள் தலைவனே. மொய் ஆர் தடம் பொய்கைபுக்கு - வண்டுகள் நிறைந்த அகன்ற திருக்குளத்தில் புகுந்து, முகேர் எனக் கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி முகேர் என்று ஒலியுண்டாம்படி கையினால் இறைத்து முழுகி நின் திருவடிகளைப் புகழ்ந்து பாடி, வழி அடியோம் வாழ்ந்தோம் -வழி வழி அடிமைகளாகிய யாங்கள் நல்வாழ்வு எய்தினோம், ஐ ஆம் நீ ஆட் கொண்டு அருளும் விளையாட்டின் - ஆண்டவனாகிய நீ உயிர்களை அடிமைகொண்டு காத்தருளும் திருவிளையாட்டினால், உய்வார் கள்உய்யும் வகையெல்லாம் உய்ந்தொளிந்தோம் உய்தி பெறுவார் உய்யும் வகைகள் எல்லாவற்றானும் பிழைத்துவிட்டோம், எய்யாமல் எமை காப்பாய் - இனியாம் இளைத்துவிடாதபடி எம்மைக் காத்தருள் வாயாக என்பது.

(வி – ரை) :- இனி அக்கன்னிப்பெண்களெல்லோரும் ஒருங்கு சேர்ந்து நீரா டத் தொடங்கி இவைனை முன்னிலைப்படுத்துத் தமக்குக் காப்பு வேண்டுகின்றனர்.

செம்மை வெண்மையிரண்டும் முறையே இராசதம் சாத்துவிகம் என் னும் குணங்களைக் குறிப்பாலுணர்த்துவன வாதலின், அக் குணங்க ளில் நின்று படைத்தல் காத்தல்களைச் செய்பவனும் நீறுடைமை யால் ஒடுக்கத்திற்குரிய தலைவனும் சிவபெருமானே யென்பார் 'ஆரழல்போற் செய்யா வெண்ணீ றாடி" என்றனர். 1 'முக்குணங்களின் மூவரைத் தோற்றி மூவருக்கு முத்தொ ழில் வகுத்தருளி, அக்குணங்க ளுக் கதீதமாய் நிறைவாய்...... நின் றனை" என்று சிவஞான முனிவர் கூறிய கருத்தும் ஈண்டு நோக்கத்தக்கது. செல்வம்வீட்டித்திரு மோக்ஷ ஐசுவரியம் என்பர் வடநூலார். இஃது யோகி யாயிருந் துயிர்க்கு யோகத்தைப் புரிபவன் என்னும் குறிப்பையும் "மையார் தடங்கண் மடந்தை மணவாளா என்றது போகி யாயிருந் துயிர்க்குப் போகத் தைப் புரிபவன் என்னும்

1. கலைசைப் பதிற்றுப்பத்து - செ 34.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பையும் புலப்படுத்து நிற்பன. இங்ஙனம் படைப்பு முதலிய தொழிற்றலைவனும் போக மோக்க காரகனும் ஆகிய பெருந்தலைவ ஐய நீயே எளியேமாகிய எமக்கும் தலைவனாயினை யென்னும் உவகை பற்றி "ஐயா" என்றனர். மொய்- வண்டு. மொய்தற்றொலழில் பற்றி வணடு மொய்யென்னும் பெயருடைத்தாயிற்று. பொய்கை அகன்று என்றும் நீரறா வளமுடைமையால் தாமரை குவளை முதலி யன செழித்துப் படர்ந்து பூத்திருந்தமையின் அம் மலர்களிலுள்ள தேனை நுகரும்பொருட்டு வண்டுகள் நிறைந்திருத்தல் பற்றி 'மொய் யார் தடம் பொய்கை" என்றனர். பனிப்பருவத் தொடக்கமாதலின் மலர்கள் வாட்டம் அடைந்தில வென்பது கருத்து. முகேர்" என்பது கையால் நீரைக் குடை யுங்கால் உண்டாம் ஒலிக்குறிப்பு. மொய் வார் தடம் பொய்கையாத லின் மலரிதழ் வண்டுகள் முழுகும் இடத் தைவிட்டு ஒதுங்குதற் பொருட்டும், நீர் விளையாட்டு நிகழ்ச்சி பற்றி யும் முழுகுதற்கு முன் கையினால் நீரைத்தட்டி இறைத்தல் பற்றி "கையாற்குடைந்து" எனவும், பின் முழுகி நீராடினேம் என்பது குறித்து குடைந்து" என வும் கூறினர். வாழையடி வாழையெனச் சிவத் தொண்டு செய்துவந்த மரபில் தோன்றிய அடிமைகளாகிய யாம் என்பார் வழியடியோம்" என்றனர். நீராடுங்கால் எல்லோரும் சேர்ந்து இறைவன் திருவடிக ளைப் புகழ்ந்து பாடிக்கொண்டே ஆடின ரென்பது. " வாழ்ந்தோம்' என்றது கருதியபடி மார்கழி நீராடற்கு உரிய நேரத்தில் எழுந்து வாயார இறைபுகழ்பாடி நீராடக்கிடைத்த பேறுபற்றிய உவகை மொழியாகும். தொடங்கிய காரியத்தின் பயன் பின் விளைவாயினும் அக்காரியம் கைகூடுதலும் மக்களுக்கு மகிழ்ச்சி விளைக்கு மென்பது உலகியலிற் காணப்படுவது. காண் - முன்னிலை யசை.

பொதுவாக மக்கள் தேவர் முதலிய பல்லுயிர்களையும் பக்குவம் நோக்கி அடிமைகொண்டு அருள்புரியும் நின் திரு விளையாட்டில் என் பார் "நீ யாட்கொண்டருளும் விளையாட்டின்" என்றார். உயிர்களைப் படைத்தும் காத்தும் ஒடுக்கியும் மறைத்தும் அருளுதல் இறைவனுக்கு ஒரு விளையாட்டுப் போலும் எளிமையிற் செய்யப்படுஞ் செயல் என் பார் "விளையாட்டின்" என்றாரென்பது. இக் கருத்தை 1. "ஒரு சாரார், 'ஐயா நீ யாட்கொண்டருளும் விளையாட்டின் என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி விளையாட்டென்றது,

1. சிவஞானசித்தி - சூ - செ – 36 – உரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கலப் பதுபோல பராஞ்சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பதுபோல் அத்துணை யெளிதிற் செய்யப்படு தலை நோக்கியேயா கலின் அக்கருத்தும், உயிர்கட்குப் பெத்த காலத்துச் சுவர்க்காதி போகமும் பத முத்திகளும் முத்தி காலத்து வீடு பேறும் கொடுத்தற் பயத்த தென்பார்" என்னும் சிவஞானசித்தி யுரையானும் தெளிக. இடையறவின்றிப் பெய்யும் மழைநீரை மேட்டு நிலம் வறிதே கழிப்பப் பள்ள நிலம் தாங்கிப் பயன் விளைத்தல் போல ஆண்டவன் திருவிளை யாட்டாற் பெய்யும் அருளமுதத்தைத் தூய்மைபெறாத உள்ளத்தினர் விட்டொழிக்க மெய்யன்பினால் தூய்மைபெற்ற நன்னெஞ்சினோர் பெற் றுப் பயன் பெறுவர் ஆதலின், அம் முறையில் இறையருளை வேட்டு நிற்போரே உய்வார்களாவர். உய்யும் வகை பாசப்பிணிப்பை யொழித்துத் திருவருட்பேற்றைப் பெறுதற்குரிய சிவத்தொண்டு முதலிய தவநெறி களாம். அந்நெறிகளையே சாதனமாக மேற்கொண்டு உய்திபெற்றுள் ளோம் என்பார் "உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" என்றனர். உய்தொழிதல் என்புழி ஒழிதல் துணை வினையாகும் துணி தற்பொருட்டு "வழியடியோம் வாழ்ந்தோம்" என்று முன்னர்க் கூறி யது நீராடத் தொடங்கியது நிறைவேறியமையால் உண்டாம் உவகை பற்றி, உய்ந்தொழிந்தோம் என்று பின்னர்க் கூறியது இறைவன் திரு வருட்பேற்றிற்கு இலக்காயது பற்றி.

ஆண்டவனே! இதுகாறும் எல்லாவகையாலும் நின்தொண்டில் நழுவாமல் ஈடுபட்டுப் பிழைத்தோம். இனி நின் திருவருட் பேற்றினா லாம் பயனையெய்துதற்கு யாம் சலித்தொழியாமல் கடைபோக எம்மைக் காத்தருள வேண்டுமென்பார் "எய்யாமற் காப்பாயெமை என்று கூறினரென்பதாம்.

இதன் கண் "சிறு மருங்குன் மையார்தடங்கண் மடந்தை மண வாளா" என்றதனால் சத்தியை வியந்தது பெறப்பட்டவாற்றிக.

ஆர்த்த பிறவித் துயர் கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ்செய்ய அணிகுழன்மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீர்ஆடேலோ ரெம்பாவாய் (12)

(க-ரை) :- முன்னைத் திருப்பாட்டில் மக்களை ஆட்கொண்டருளுதல் இறைவனுக்குத் திருவிளையாட்டாகும் என்பதை அருளிச் செய்த அடிகள், இத் திருப்பாட்டில் மக்களேயன்றி விண்ணுலகம் மண்ணுலகம் முதலிய எல்லாவகையும் படைத்தல் முதலிய தொழிற்படுத்தலும் இறையருள் விளையாட்டே யென்பதைப் புலப்படுத்தருளுகின்றார்.

(ப-ரை): - ஆர்த்த பிறவித் துயர்கெட - நம்மை அநாதியே கட்டிய பிறவித்துன்பம் ஒழியும்படி, நாம் ஆர்த்து ஆடும் தீர்த்தன் நாம் உவகையால் ஆரவாரித்து முழுகும் தூய நீரைபுடையவ னும் நல் தில்லைச்சிற்றம்பலத்தே தீ ஆடும் கூத்தன நல்ல தில்லை நகரின்கண் உள்ள ஞானவெளியில் அனலையேந்தி ஆடுகின்ற அருட் கூத்தடையவனும், இக்குவலயமும் வானும், எல்லோமும் -இந் நிலவுலகத்தையும் விண்ணுகைத்தையும் நம் எல்லோரையும், படைத்தும் காத்தும் விளையாடிஆக்கியம் அளித்தும் ஓடுக்கியும் வியைாடுகின்றவனும் ஆகிய சிவபெருமானது. வார்த்தையும் பேசி திருப்புகழையும் பாடிக்கொண்டு, வளை சிலம்ப -கை வளையல் ஒலக்கவும் வார்கலைகள் ஆர்ப்பரவம்செய்ய - நீண்டமேகலை முதலிய அணிகலன்கள் ஆரவாரித் தொளிசெய்யவும். அணிகுழல்மேல் வண்டு அர்ப்ப அழகிய கூந்தலின் மேல வண்டுகள் எழுந்து முழங்கவும்,பூ திகழும் பொய்கை குடைந்து மலர்கள் விளங்குகின்ற திருக்கு ளத்தில் முழுகி. உடையான் பொன்பாதம் எத்தி - எல்லா முடைய இறைவனதுபொன் போன்ற திருவடிகளைப் புகழ்ந்து பாராட்டி, இரும்கனை நீர் ஆடு – பெரிய கனை நீரிலும் முழுகுவோமாக என்பது

(வி-ரை) :- இது நீராடும் நிகழ்ச்சியில் இறைவன் புகழைப்பாடி யாடுதல் கூறுகின்றது. உயிர் இருவினைப் பாசங்களாலும் மும்மலக் கல்லொடு பிணிக்கப்பட்டுப் பிறவிப் பெருங்கடலுள் வீழ்த்தப்படுத லின் "ஆர்த்த பிறவி" எனவும், பிறவி, வினைப்பயனை நுகர்ந்த கழிப்பதற்கு ஏதுவாக பற்றி நலம் பயப்பதாயினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவினைப்பயனை நுகருங்கால் உயிர் பிறவித்துயர்" எனவும், அத்துன்ப மாகிய வெப்பம் ஒழிய முழுகுதற் குரிய தூய தண்ணிய நீரையுடையான் இறைவனென்பார் துயர் கெட நாம் ஆர்த்தாடுந் தீர்த்தன்" எனவுங் கூறினர். ஆர்த்தல், பிற வித் துயரொழிவிற்குரிய சாதனப்பேறு குறித்துண்டாகிய உவகையா யைது. கடலொடு காவிரி கலக்குமிடத்தில் அவ்விருவகை நீரிலும் தோய்வாரைக்குறித்து 1 "தீதுநீங்கக் கடலாடியும், மாசுபோகப் புனல் படிந்தும்" என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறியதும் ஈண்டு நினைக்கத் தக்கது. அகக் குற்றம் நீங்கக் கடலாடினவர்.கடலாடு தலாலுண்டாம் புறக்குற்றமும் நீக்கக் காவிரிப்புனலிலும் தோய்ந்தன ரென்னும் அது. வினையொழியப் பிறவிப் பெருங்கடலுள் முழ்கினார் அப்பிறவித் துயரும் ஒழிய நல்ல தூய நீரிலும் ஆடினர் என்னும் இக் கருத்தைக் குறிப்பிற் புலப்படுத்து நிற்றலறிக. இனி - ஆர்த்தா டுந் தீர்த்தன்" என்பதற்கு ஆரவாரித்து இன்பக் கூத்தாடுதற்கு ஏதுவாகிய கடவுள் எனப்பொருள்கோடலும் ஆம். ஞானவளியை யுடைமையால் "நற்றில்லை யென்னப்பட்டது. திருச்சிற்றம்பலம் நுண்ணிய ஞானப் பரவெளி. தூலவுடலுடைய மக்களுக்கேற்பத் தூல வெளியில் இனிது நீராடுதற்குத் தண்ணிய நறுநீரையுதவிய அருளாளன், தான் சூக்கும் வெளியில் வெய்ய தீயை யேந்தி ஆடினன் என்னும் இதனால், வார்ந்த நஞ்சயின்று வானோர்ககமுதமீந்த அப் பெருமானது வண்மைக் குணம் ஈண்டும் புலனாயவாற்றிக. தீஞானத்தைக் குறிப்பது. அதனை யேந்திக் கூத்தாடியது ஞானத்தால் தன்னைக் காண விழைவார்க் குக் காட்சியளிப்பவன் என்பதைக் குறிப்பதாகும் . கூத்து அருட்செயல் ஐந்தையும் புலப்படுத்து நிகழ்வது.

இவ்வானும், என்புழிச் சுட்டை அணிமையிலுள்ள குவவயத்திற் கேற்றுக. நுண்ணிய ஞானப் பர வெளியில் நெருப்பை யேந்திக் கூத் தாடுதலே யன்றி இந் நிலவுல கத்தினரையும் வானுலகத்தவரையும் தம்மெல்லோரையும் ஆக்கியும் அளித்தும் மறைத்தும் விளையாடுபவன் என்பார் 'இவ்வானுங் குவலயமுமெல்லோமும் காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" என்றார். காணப்படாத பொருள்களைப் படைத் துக்காட்டலும், காட்டியவற்றைச் சிலநேரம் நிலைபெறச் செய்தலும்,

பட்டினப்பாலை - அடி -99-100.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் மறையச் செய்தலும் இந்திரசாலவித்தை யென்ப. அவ்வித்தை காட்டி விளையாடுதல் போல, மருட்கேவல நிலையிலுள்ளவுயிர் களை உடல் முதலியன படைத்து வெளிப்படச் செய்தலும், வினை யளவு வரையறுக்கப்பட்ட காலம் வரை அவற்றை நிலைபெறுத்த லும், பின் ஒடுக்கி மறைத்தலும் ஆகிய உலக முத்தொழிற்படுத்தல் இறைவ னுக்கு விளையாட்டாம் என்பது கருத்து. படைத்தும் காத்தும் எனற் பாலது செய்யுள் நோக்கி மாறிநின்றது. விளையாடி யென்பது பெயர் 1"மதி மயங்கி'' என்பது போல இவ்வானுங் குவலயமும்' 'என் புழிக் கூறுகின்ற பெண்கள் குவலயத்து ளடங்கின ராகவும், ''எல்லோ மும்'' என்று தம்மைப் பிரித்துக் கூறியது தம்மாற் சுட்டி யுணரப் படும் பிரபஞ்சத்தினின்று தாம் வேறல்லர் என்பது குறித்து. விளையாடி வார்த்தையும் என்புழி ஆறனுருபு தொக்கது. நீராடுதற்கு முன்னும் பின்னுமன்றி நீராடுதல் நிகழுங்காலும் இறைபுகழ் பாடப்பட்டதென்பார் 'வார்த்தையும் பேசி" என்றார். நீராடுங்கால் கையால்நீரைத்தட்டியிறைத்தலும், நீர் நிலையில் அங் கும் இங்கும் சேறலும், முழுகுதலும் ஆகிய செயல்கள் நிகழுமாதலின், அம் மூன்றும் புலப்பட முறையே 'வளை சிலம்ப, வார்கலைக ளார்ப்பரவஞ் செய்ய,அணிகுழன்மேல் வண்டார்ப்ப' என்றார். கலைகள் மேகலை முதலியஅணிகள். கூந்தலின் மேலணிந்த மலர்களிலுள்ள தேனை நுகரும் வண்டுகள் தலைமுழுகுங்கால் எழுந்து ஆர்த்தன வென்பது கருத்து. பூத்திகழும் பொய்கை யென்றது அம் மலர் விளக்கத்தில் ஈடுபட்ட மகளிர் அட் பொய்கையினின்றும் பிறிதொரு நீர்நிலைக்கு மாறுதலின் அருமை புலப்படுக்கப்பட்ட படியாம். பொய்கை நீராடியதும் அடுத் துள்ள சுனை நீராடுதற்குத் தொடங்கும் பெண்கள் சுனையாடுதற்கண் இடையூறணுகாமைப் பொருட்டு இறைவன் திருவடியை மீண்டும்வேண்டினரென்பார் "பொய்கை குடைந்துடையான் பொற்பாத மேத்தி" என்றனர். பெண்கள் பலர் ஆடுதற்கு அகன்ற சுனையே பொருந்துமாதலின் "இருஞ்சுனைநீர்'' என்றனர். 'ஆடுக'' என்புழி வியங்கோளீறு தொக்கது. ஆடுவேமாக என்றவாறு பேசி, சிலம்ப, அரவஞ்செய்ய, ஆர்ப்ப, குடைந்து, ஏத்தி, ஆடுக என வினைமுடிபுகொள்க.

1. திருக்கோத்தும்பி - செ - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்கண் "உடையான் பொற்பாதம் ஏத்தி" யென்றதனால் இருவடியாற் குறிக்கப்படும் சத்தியை வியந்தது புலனாப்பலாற்றிக.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய், *(13)*

*(க-ரை)* - முன்னைத் திருப்பாட்டில் எல்லாவுலகங்களையும் முத்தொழிற்படுத்தலும் இறையருள் விளையாட்டேயென அருளிய அடிகள், இத் திருப்பாட்டில் அப்பெருமானை யடைதற்குத் தூய அன்பு நெறியால் தகுதிவாய்ந்த உயிர்கள் தாமும் விளையாட்டுப் போன்ற செயல்களால் இறையருட்கு இலக்காகி இன்புறலாம் என்னும் உண்மையைக் குறிப்பிற் புலப்படுத்தருளிச் செய்கின்றார். பாசப்பிணிப்பை யொழித்தற்குரிய நயன தீக்கை முதலிய சாதனங் களே இங்கு நுண்ணிதின் அறியப்படுங் குறிப்புக்களாம்.

*(ப-ரை)*: - பசுமை குவளைக் கருமை மலரால் - குளிர்ந்த குவளை களின் கரிய மலர்களை யுடைமையாலும், செம்மை கமலம் பசுமை போதால் - செந்தாமரையின் அழகிய மலர்களையுடைமையாலும், அம் கம் குருகு இனத்தால் - அழகிய நீர்வாழ் பறவைகளையுடைமை யாலும், பின்னும் அரவத்தால் - பின்னியெழும் அலையொலிகளை யுடைமை யாலும், தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால் - (மடுநீராகிய) தம்மிடத்து அழுக்கைக் கழுவக் கருதுவார் வந்தடை தலினாலும், எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்று இசைந்த பொங்கும் மடுவில் - எங்கள் இறைவியையும் எம் இறைவனையும் ஒத்துப் பொருந்திய நீர் நிறைந்த பொய்கையில், பாய்ந்து பாய்ந்து புக- தாவித் தாவிப்புகுதலால், நம் சங்கம் சிலம்ப -நம் கைவளையல் ஒலிக்கவும், சிலம்பு கலந்து ஆர்ப்ப சிலம்புகள் அவ்வொலியோடு கொங்கைகள் பொங்க - நகில்கள் குலுங்கவும், குடையும் புனல் பொங்க - நீராடுதற்குரிய நீர் மேலெளவும், பங்கயப் பூ புனல் பாய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு - தாமரை மலர்களால் பொலிந்து வியங்கும் பொய்கையில் குறித்து நீராடுவோமாக என்பது.-

(வி-ரை):- இதுவும் அது. (நீராடும் நிகழ்ச்சியில் இறைவன் மாண்பு கூறியாடுதலைக் கூறுகின்றது) பொய்கை இறைவியும் இறைவனும் இயைந்து விளங்குதல் போல விளங்குதற்கு ஏது பைங்குவளைக் கார் மலர் முதலியனவாம். கார் மலா செம்போது என்புழிக் கருமையும் செம்மையும் இனம் விலக்கு தற்கு வந்த அடைமொழிகளாம். குளிர்ந்த கருங்குவளை மலர் அருணிறைந்த நீலமேனியளாகிய அம்மையையும் செந்தாமரை மலர் தீவண்ணனாகிய அப்பனையுங் குறிப்பன. குவளையின் முதலுக்கும் தாமரையின் சினைக்கும் பசுமையடை புணர்த்தது "அருளது சத்தியாகும்" என்றபடி இறைவி அருள் வடிவினள் என்பதையும், இறைவன் அதனையுடையவ னென்பதையும் குறிப்பிற் புலப்படுத்தற் கென்க அங்கம் உறுப்ப் குருகு வளையல். அங்கம் குருக இனம் என்பது, கையில் வளையல் குழுவையுடைய இறைவியையும், பின்னும் அரவம் என்பது, பின்னிக் கிடக்கின்ற பாம்பணிகளையுடைய இறைவனையும் குறிப்பனவாம். வடமொழி மதம் பற்றித் தம் என நீர் பன்மையாகக் கூறப்பட்டது. ஈண்டுத் தங்கண் அம்மையப்பராகிய தம்மிடத்து என்றபடி. இனி, தங்கள் மலங்கழுவுவார் எனப் பதப் பிரிவு கொண்டு தம்முடைய அழுக்கைப் போக்குவார் எனப்பொருள் கோடலுமாம். மலம் - ஆணவ முதலியன. மலங்கழுவுவார் வந்து சார்தல் - பாசப்பிணிப்பைப் போக்குவார் வந்து அடைதல் . இஃது இருவர்க்குமாம். இவ்வேதுக்களால் இறைவியும் இறைவனும் இயைத் ததுபோற் காணப்படும் பொய்கை என்றபடி. இனி இவ்வேதுக்கள் சைவசித்தாந்த முறைப்படி ஆணவ முதலிய பாசங்களை யொழிப்ப தற்கு இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளிப் பக்குவமுள்ள உயிரக ளுக்குச் செய்யும் தீக்கைக்கிரியைகளயும் குறிப்பனவாம். சிவநெறித் தீக் கைகள் பலதிறப்படும். அவற்றுள் உபலக்கணமாகச் சில தீக்கைக் குறிப்புக்கள் ஈண்டுள்ளன. பைங்குவளைக் கார்மலர் என்பது நயனதீக்கையைக் குறிக்கும். நயன தீக்கையாவது மாந்திரிகன் பாம்பினாற் அடிக்கப்பட்டவனைக் கருடபாவனையாலே பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சை யொழித்தல் போல ஆசிரியன் திருநோக்கத்தால் பாசத்தை யொழித்தலாகும். கண்ணப்பநாயனாரை ஆண்டவன் ஆட்கொண்டதும் இந்நெறியே. இவ்வுண்மையை, 1 கண்ணால் நோக்கிக் கண்ணப்பர் பணியுங்கொள் கபாலியாரே" என்னும் அரு கரையானும், 2 அங்கணர் கருணைகூர்ந்த அருட்டிரு நோக்கமெய்தி" எனவும், 3 "முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள் நோக்கின்" எனவும் சேக்கிழார் கூறுமாற்றனும் தெளிக செங்கமலப் பைம்போது என்றது. மானசிக தீக்கையைக் குறிக்கும். மானசிக தீக்கையாவது பாவனையினால் ஆசிரியன் மாணவனது இதயகமலத்தில் புகுந்து அவன் அறிவை வாங்கித் தன் இதயகமலத்தில் கலந்ததாகக் கொண்டு பின் அவன்பால் நிலைப்படுத்தலாம். இஃது ஆமை தன் சினையை நினைத்த மாவிற் காப்பது போலப் பாவனையினாற் காப்பதாம். ஈண்டுத் தாம ரைமலர் ஆசிரியனுடைய இதயக்கமலத்தைக் குறித்தல் அறிக. அங் கங்குருகினம் என்பது பரிச தீக்கையைக் குறிப்பதாகும். பரிச தீக்கை யாவது பறவை தனது சினையைச் சிறகால் தழுவிக் காத்தல் போல ஆசிரியன் தன் கையினால் மாணவனது தலை முதல் எங்கும் பரிசித்துப் பாசத்தை யொழித்துக் காத்தலாம். இதனைச் சிவஹஸ்த மஸ்தகசை யோகம் என்ப. குருகு கோழி முதலிய பறவையைக் குறிக்கும் சிறகு. இனம் குஞ்சு. ஆகவே பறவைகள் சிறகாற் பார்ப் பைத் தழுவுதல் போல்வதென்பது குறிப்பு. அரவம் - ஒலி: இது வாசிகதீக்கையைக் குறிக்கும். வாசிகமாவது திருவைந்தெழுத்தை உப கேசித்து நலம்புரிதல், இங்கனம் மனம் வாக்குக் காயம் கண் முதலி யவற்றாலாம் தீக்கையால் பாசத்தை யொழிப்பவராகிய பக்குவமுள்ளவுயிர்கள் அம்மையப்பராகிய தம்மிடத்து வந்து சேர்தலினால் என உமையொருபாகற்குக் கொள்ளல் வேண்டும். இவ்வேதுக்களால் எங் கள் பெருமாட்டியாகிய அம்மையையும் எங்கள் பெருமானாகிய அப் பனயும் போல் இயைந்த பொய்கை யென்றார். ஈண்டு

1. திருநாவுக்கரசர் . 6-96-1
2. பெரியபு - கண்ணப்பர் -செ- 104
3. பெரியபு - கண்ணப்பர் .செ-154



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையை முற்கூறியது. மெய்யருளாம் தாயுடன் சென்று தந்தையை படையவேண்டுமென்னும் நுண்பொருள் புலப்பட வென்க, பொங்குதல் நீர்மிகுதல். " புகப் பாய்ந்து பாய்ந்து என்பதை பாய்ந்து பாய்ந்து எனக் கொள்ளல் வேண்டும். புக வென்னும் என்சம் காரணம் பொருட்டு. சங்கம் ஆகுபெயரால் வளையலையுணர்த்தும் சிலம் பொலி வளையல்களின் ஒலியோடு கலந்தொலிக்க வென்பது, பொய்கைக்கரையாகிய நிலத்தினின்றும் தாவிப் புகுதலால் கைவளை யல்களோடு காம் சிலம்புகள் ஒலி செய்தன வென்பது கருத்து. "கொங்கைகள் பொங்க "என்புழிப் பொங்குதல் இலக்கணையால் குலுங்கு தலை யுணர்த்தும். "குடையும் புனல் பொய்க " என்றதனால் மகளிர் நெருங்கிப் பாய்ந்தாடநீர் அளவின்மிக்கு மேலெழுந்த தென்பது போதரும். தாமரை மலர்களாற் பொலிவுபெற்று விளங்கும் என்றது. இருள்புலர் காலத்தைக் குறிப்பது. பாய்ந்து பாய்ந்து புக சிலம்ப ஆர்ப்ப பொங்க பொங்க பாய்ந்து ஆடுக என வினை முடிவு கொள்க.

இதன்கண் ''எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றி னைந்த பொங்குமடு" என்றதனால் சத்தியை வியந்தது புலப்படுக்கப்பட்ட படியாம்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள் பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய் **(14)**

(க-ரை) :- முன்னைத் திருப்பாட்டில் அன்புளதேல் விளையாட்டுப் போன்ற செயல்களும் இறைவனையடைதற்கு எதுவாம் என்னும் நுண்பொருளைக் குறிப்பிற் புலப்படுத்த அடிகள், திருப்பாட்டில் அச்செயல்களும் இறைவனுடைய பெருமைக்குணங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபடாமலிருக்கவேண்டும் என்னும் குறிக்கோளைப் புலப்படுத்து அருளிச் செய்கின்றார்.

(ப-ரை):- காது ஆர்குழை ஆட காதிலணிந்த தோடு அசைய, பூண் பசுமை கலன் ஆட - உடம்பிலணிந்த பிற அழகிய அணிகலன்கள் அசைய, குழல் கோதை ஆட - கூந்தலில் அணிந்த மாலைகள் அசைய வண்டின் குழாம் ஆட வண்டுக்கூட்டம் எழுந்து சுழல, சீதம் புனல் 842 குளிர்ந்த நீரில் முழுகி, சிற்றம்பலம் பாடி பையைப் புகழ்ந்து பாடி, வேதப்பொருள் பாடி மறைப்பொருளமைந்த புகழ்ப்பாடலைப்பாடி, அப்பொருள் ஆமா(று) பாடி - இறைவன் அப் பொருளாக விளக்கு தலைப் பாடி, சோதி திறம்பாடி ஒளிவடி வாகவுள்ள அப்பெருமான் பெருமையைப் பாராட்டிப் பாடி, கொன்றைத் தார்பாடி சுற்றி யணிந்த கொன்றைமலர் மாலையைப் புகழ்ந்து பாடி, திறம் பாடி அப்பெருமான் எப்பொருட்கும் முதலானமுறையைப் பாடி, அந்தம் ஆமா (று) பாடி எவற்றிற்கும் ஈறான தன்மையையும் பாடி, பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை தன் பாதத்திறம் பாடி ஆடு வேறுபடுத்து நம்மைப் பாதுகாத்து ஆட்கொண்ட வளையலை யணிந்த கைகளையுடைய உமை யம்மையின் திருவடி மாண்பைப் பாடி நீராடுவோமாக என்பது.

(வி-ரை) :- இதுவும் அது. (நீராடுங்கால் இறைபுகழ் பாடுதலையும் நிகழும் செயல்களையும் கூறுகின்றது.) மகளிர் நிலத்தினின்றும் நீர்நிலையிற்புகுந்து நீராடுமுறையில் நிகழ்வனவற்றை முறையே குறிப்பிடுகிறார். முதலில் நீராடுதற்கு ஏற்ற முறையில் எழுந்து நின்று நீரிற் பாயத் தொடங்கியவுடன் காதுகளில் அணிந்த தோடுகள் அசைந்தன வென்பார்.

"காதார் குழையாட" எனவும், நிலத்தினின்று நீர் நிலைக்கு விரைந்து செல்லுங்கால் உடம்பில் அணிந்த ஏனை அணிகலன்கள் ஒலித்தன வென் பார் "பைம்பூண் கலனாட" எனவும். நீருட் புகுந்து நீராடத் தொடங்குங் கால் கூந்தவணிந்த மலர் மாவைகள் அசைந்தன வென்பார் "கோதை குழலாட 'எனவும், நீருள் மூழ்கத் தொடங்குங் கால் கூந் தலணிந்த மலர்மாலைகளில் உள்ள தேனை நுகரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டினகள் எழு ந்து ஆரவாரித்வனவென்பார் "வண்டின் குழாமாட" எனவும், முறைப்படுத்திக் கூறினர். இங்ஙனம் நிகழாநிற்க, குளிர்ந்த நீர் நிலையில் நீராடினர் என்பார் "சீதப்புனலாடி"என்றனர். பொய்கை நீர் இயல்பாகவே களிர்ந்ததாயினும் சீதப்புனல் என்றது. பனிப்பரு வத்து வைகறைப்பொழுதில் மிக்ககுளிர்ச்சியுடைமைபற்றி. சீதப் புன லாடிப் பாடியாடுக என்றமையால் நீர் விளையாட்டு நிகழ்ச்சியில் இறை வனையும் இறைவியையும் புகழ்ந்து பாராட்டிப் பாடினரென்பது. அங்ஙனம் புகழ்ந்து பாடத்தொடங்குங்கால் முதலில் "சிற்றம்பலம் பாடி" என்றனர். சிற்றம்பலம் நுண்ணிய ஞானப் பரவெளி, ஆவின் உடல் முழுதும் நிறைந்த பால், கன்றின்பொருட்டுச் சுரந்து வெளிப்ப டுதற்குச் சுரக்கும் உறுப்பு இடனாயவாறு போல, எங்கும் நிறைந்த இறை விளக்கம் அன்பர் பொருட்டுப் புலப்படுதற்கு இடங்கூறியபடி யாம்.

"வேதப்பொருள்பாடி" என்றது மறைப்பொருளை இசைத் தமிழாக இயைத்துப்பாடியமைபற்றி. இசையின் தோற்றத்திற்குச் சாமவேதம் இடனென்ப வடமொழிவாணர். அப்பொருள் ஆமா என்புழி ஆமாறு என்பதன் ஈறுதொக்கது. சாமவேத சம்பந்தமான கேநோபநிடதத்தில், பிரமப்பொருள் தாம் தாம் என்று கருதிய தேவர்கள் செருக்கடங்கப் பிரமம் ஓர் இயக்கவுருக்கொண்டுவந்ததென்றும், அவ்வியக்கனால் இடப் பட்ட ஒரு சிறு துரும்பை எரிக்கமுயன்று அக்கினிதேவனும், அசைக்க முயன்று வாயுதேவனும் இயலாதொழிய, இந்திரன் சென்று இவ்வியக்கன் யாராக இருக்கலாமென்று திகைப்புற்றிருக்கும் நிலை யில் இயக்கன் மறைந்துவிட்டான் என்றும், அவ்வமயம் விண்ணில் இமவான் புதல்வியாகிய உமைதோன்றி 'இவ்வியக்கன் பிரமம்" என்று தெளிவித்தாளென்றும் கூறப்பட்டுள்ளன. இதுபோன்ற குறிப்புக்களே வேதப்பொ ளென்றதனாற் பெறப்படும். அப்பொருள் ஆமாறு பாடி" என்றது. பரமசிவன் அப்பொருளாகியவிதத் தைப் பாராட்டியென்றபடி. கேநோ பநிடதக்குறிப்பில் வெளிப்படையாகச் சிவபெருமான் பரம்பொருளா வான் என்பது கூறப்பட்டிலது. இவ்வியக்கன் பிரமம் என்று உணர்த் திய சத்தி சிவசத்தியா தலின், அச் சத்திக்குரிய சிவபெருமானே பிரமம் ஆவான் என்பது போதரும். இத்தெளிபொருளையே அப்பொளாமாறு என்பதனாற் புலப்பட வைத்தாரென்பது. இறைவிளக்கத் திற்கும் பெருமை புலப்படற்கும் உரிய இடங்களாகிய சிற்றம்பலத்தையும் மறைப் பொருளையும் பாடிய பின் மெய்யன்பர் பொருட்டுத் திருமேனி கொண்டருளும் நிலையைப் பாடத்தொடங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அன்பர் பொருட்டுக் கொள்ளும் திருமேனி முதலில் ஒளிவடிவம் என்பது பெரியோர் கண்டது. "சோதியாய்த் தோன்று முருவமே" என்னும் திருவாக்கும் ஈண்டு நினைக்கத்தக்கது. ஒருகோடி கதிரவர் ஒருங்குதோன்றிய தொப்பப் பேரொளிப் பிழம்பாகத் திகழ் பவன் என்ப. இவ்வுண்மை கருதியே "சோதிதிறம்பாடி" என்றனர். திறம் வழிபடும் உயிர்களின் பக்குவத்திற்கேற்பக் கொள்ளும் திரு மேனியின் தார் மாலை கண்ணியென்னும் வகையெல்லாம் இறைவற் குக் கொன்றைமலர் ஆதலின் "சூழ்கொன்றைத் தார் பாடி" என்றனர். மேலும், புறத்தே ஐந்து இதழும் நடுவண் ஓங்காரவடிவ மான அகவிதழும் உடைமையால் பிரணவத்தை யுட்பொதிந்த திருவைந் தெழுத்தைப் புலப்படுத்து விளங்குதலின் கொன்றைமலர் இறை உவந்ததாயிற்றென்க. யாவர்க்கும் எவைக்கும் முதற் கடவுளாதல் பற்றி 'ஆதி திறம் யாடி" என்றார்.

1. "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே" என்பது தமிழ்மறை. யாவரும் எவையும் ஒடுங்குதற்கு நிலைக்களனாதல்யற்றி "அந்தம் ஆமாறுபாடி" என்றனர். ஆகவே எல்லாம் தோன்றுதற்கும் ஒடுங்குதற் கும் காரணனாதல்கூறப்பட்டபடியாம். முதல் ஈறு கூறவே இடைப் பட்ட காத்தற்றொழிலும் அவன்பாலதாதல் பெறப்படுமென்பது.

2. தோற்றுவித் தளித்துப் பின்னுந்
துடைத்தருள் தொழில்கள் மூன்றும்
போற்றவே யுடையன் ஈசன்"

என்னும் சிவநெறிப்பனுவலானும் தெளிக.

இறைவனுடைய அருட்செயல்கள் ஐந்தும் சிவசத்தியால் நிகழ்வன. அவற்றுள் மறைத் தலைச் செய்யும் நிலையில் அச்சத்தியைத் திரோதாயிஎன்று கூறுப. அஃது உயிர்களுக்கு மலபரிபாகத்தை யுண்டாக்கிப்பாசநீக்கத்தில் அருட்சத்தியாக நின்று உபகரிப்பதாகும் தாயமக்கள் பாற் குற்றங்கண்டவிடத்து மறக்கருணை காட்டிச் சினந்து அக்குற்ற மொழிந்தவிடத்துக் குணங்கண்டு அறக்கருணைகாட்டி இன்புறுத்து

1. அப்பா தேவாரம் 6-19.1. 2. சிவஞானசித்தி சூ.1-செ-33தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபோலவென்பது. இக்கருத்தை உட்கொண்டே "பேதித்து நல்லை வளர்த்தொத்த பெய்வளை" என்றார். பேதித்தல் கன்மதுகர்ச்சியில் ஈடுப்மொறு வேறுபடுத்தல். இது மறைத்தலாகும். பின் அக் கன்மக்கழிவில் வளர்த்தெடுத்தல் அருளலாகும். இவ்வுண் மையைச் சிவப்பிர காசம் இரண்டாஞ் சூத்திரம் இரண்டாம் செய்யுட்கு மதுரைச் சிவம் பிரகாசர் எழுதிய விளக்கவுரையாறும் உணர்க பெய்வளை ஆகுபெ யராய் உமையம்மையை புணர்த்தும் பெய்வளை யெனக்கைகளை குறித்தது. அஞ்சற்கவென அபயமுத்திரை காட்டி அட்கொள்ளும் இயல்பு நோக்கி யென்க. ஆகவே இறைவனு டைய படைத்தல் முதலிய அருட் செயல்கள் ஐந்தும் புலப்படுக் கப்பட்டபடியாம். தாயின் திருவடிப்புகழ்ச்சி தந்தையின் திருவுள் ளத்தை உவப்பிக்கும் என்னும் - கொண்டு "பெய்வளை தன் பாகத்திறம் பாடி" என்றனர் என்பது.

இதன்கண் - பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத்திறம் பாடி" என்றதனால் சத்தியை வியந்தது வெளிப்பட்டு இன்புறுதல் அறிக.

ஓரொருகால் எம்பெருமான் ஏன்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்

பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்(15)

(க-ரை) :- முன்னைத்திருப்பாட்டில் மெய்யன்புடையார் விளையாட்டுப் போன்ற செயல்களும் இறைவன் பெருமைக்குணங்களுக்குமாறுபட நிகழ்தலாகா வென்னுங் குறிக்கோளைப் புலப்படுத்தருளியஅடிகள், இத்திருப்பாட்டில் அவ்விறையருட் குணங்களில் ஈடுபட்டு அனு பவிக்குங்கால் நிகழும் மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தருளுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப-ரை) :- வார் உருவம் பூன் முலையீர்- கச்சணிந்த அழகிய அணிகலன புனைந்த பாக்க நகில்களையுடையீர். (சிவாநுபவ நிலையினனாகிய இப்பெண் ஒருமால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான் சீர் ஒருகால் வாய் ஓவாள்-ஓவ்வார மயத்தில் எம்பெருமானேயெனறு பல முறை கூறி நம் தலைவனாகிய சிவபெருமானுடைய புகழ் மொழிகளை ஒருபொழுதும் வாய் ஓயாமல் சித்தம் களிகூர-உள்ளம் கணிப்புமிக, கண்நீர் ஒரு கால் ஓவா நெடும் தாரை பனிப்ப கண்கள் நீர் ஒருகாலும் வற் றாத நெடிய தாரையாகப் பொழிய, பார் ஒருகால் வந்தனையாள் நிலத்தில் ஒரே முறையான வணக்கத்தை மேற்கொள்ளுவாள், விண் ணோரைத் தான் பணியாள் - மற்றைத் தேவரைக் குறித்து வணம் கமாட்டான், பேர் அரையற்கு ஒருவர் பித்து ஆமாறும் இங்கனே கடவுட்பேரரசனாகிய சிவபெருமான் பொருட்டு ஒருவர் மாலுடையராதலும் இல்வாறுகொல், இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் ஒருவர் ஆர் -இம் முறையில் இவளை ஆட்கொள்ளவல்ல திறமை யுடையார் ஒருவர் யாரோ அவருடைய, தாள் வாயார நாம் பாடி- திருவடிகள் வாய்நிறைய நாம் பாடிக்கொண்டு. ஏர் உருவம் பூம்புனல் பாய்ந்து ஆடு அழகிய தோற்றமுடைய மலர்கள் நிறைத்த நீரில் விழுந்து காவோமாக என்பது.

(வி-ரை):- இதுவும் அது. நீராடப் போந்த கன்னியருள் ஒருத்தி, உலகியலை மறந்து மனமொழிவெய்கள் இறைவன் பால் ஈடுபட்டுத் தன்வயமிழந்துநிற்கும் தயன் பினளாகிய மற்செருத்தியின் இயல்பை ஏனைப்பெண்கள் உணரும்வண்ணம் காட்டுமுகமாகக் கூறியது. வாருவப் பூண்முலையீர் என்று கன்னியருள் ஆண்டிற் பெரிய பெண்களை விளித்தது. அப்பருவத்தில் உலகியலின்பநுகர்ச்சியினும் இறையன்பில் சிறந்தது என்றும் உட்கோளையுணர்த்துகென்க சிவாநுபவநிலையில் ஈடுபட்ட இப்பெண் ஒவ்வோர்மயத்தில் இறைவன் திருநாமத்தைக் கூறத்தொடங்கினால் எம் இறைவன் எம் இறைவன் என்று பலமுறை வாய் ஓயாமல் பேசுவாள் எனவும், ஒழிவில்லாத அப்பேச்சில் இறைவனைப்பற்றிய புகழ் மொழிகள் பல அடுக்கடுக்காக வெளிப்படும் எனவும் கூறகின்றவள் இறைவனைச்சுட்டுங்கால் தன் கூற்றாக அநுவதிக்குங்கால் எம பெருமான் எனவும் முடியே பொதுவும் சிறப்புமாகக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மினும் அவள்பத்திமை மிகச்சிறந்ததென்பதைப் புலப்படுத்தற் கென்க. சீரொருகால் என்புழி ஒருகாலென்பது காலத்தின் மேற்று உம்மையை விரித்துரைக்க. பின் நீரொருகால் என்புழியும் ஈதொக்கும். இறைவன் சித்தத்துள் தித்திக்கும் தேனாதலின் சிவானந்த மாகிய அத் தேனுகர்ச் சியிலீடுபட்டு இன்புறுதலின், "சித்தங்களிகூர" என்றார். கூர்தல் மிகுதல் கூர என்னும் எச்சம் காரணப் பொருட்டு. களிகூர் தலின் காரியமாகக் கண்கள் இடையறாது நீர்பொழிந்தன வென்பார், "நீர் ஒருகாலோவா நெடுந்தாரை கண்பனிப்ப" என்றார். ஓவாமையும் நெடுமையும் முறையே இடையீடின்மையும் மிகுதி யையும் உணர்த்தி நின்றன.

கண்களினின்று நீர் தாரையாக ஒழுகப் பெற்றநிலையில் எழுந்து சிவபெருமானே நம் பரமபதியென்னும் ஒரேமுறையை மேற்கொண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்குவாள் என்பார் "பாரொரு கால் ஒரேவந்தனையாள்" என்றார். வந்தனை வணக்கம். ஒருகால் முறை ஒரே நியமம். இதனால் சிவபெருமானை யன்றி வேறுதேவ ரைக் குறித்து வணங்கமாட்டாள் என்பது பெறப்படினும், மேலும் அவள் உறுதியான நிலையைவற்புறுத்து தற்கு "விண்ணோ ரைத் தான்பணியாள்" என எதிர்மறை முகத்தானுங் கூறப்பட்டது. மற்றைத் தேவரை விண்ணோர் என்றது.

இந்திரன் முதலிய தேவர்கள் நல்வினைப்பயனாக விண்ணு லகவாழ்க்கை பெற்ற வரேயன்றி வினை யினீங்கி விளங்கிய அறிவின் முனைவனாகக் கருதத்தக்கவரல்லரென் பது குறித்து. ஈண்டு வாயோவாள் என்ற தனால் மொழியும் சித்தங் களிகூர என்ற தனால் மனமும், வந்தனை யாள் என்றதனால் மெய்யும் ஆகிய முக்கரணங்களும் இறைவன்பால் ஈடுபட்டமை புலப்படுக் கப்பட்டபடியாம். ஈடுபடுதல் இல்வழி நிகழும் சொற்களும் செயல்க ளும் பயனிலவாய் முடியுமாதலின், சித்தங்களிகூர' என்பது முன்னும் பின்னும் ஏதுவாக இயையுமாறு இடைக்கட் கூறப்பட்டதென்க. வாயோவாள், களிகூர, வந்தனையாள் என்னும் மூன்றுமே முறையே வாக்குமெய்களைக் குறிப்பனவாக, இடைப்பட்ட சித்தங்களிகூர என்பதளை யடுத்துக் கண்பனிப்ப என்று கூறியது, உள்ளக் குழைவு புலனாயவாறு உணர்த்தற்கென்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 "நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்"
என்று சேக்கிழார் கூறியதும் இங்கே நினைக்கத்தக்கது.

பேரரையன் என்றது படைப்போன் முதலிய தலைவர்க்கெல்லாம் தலைவனாக விளங்கும் கடவுட் பேரரசனாகிய சிவபெருமானை. பித்து, அஃதுடையார் மேனின்றது. மிகப் பெரிய கடவுட் பேரரசன்மாட்டு ஒரு சிறுமி மால்கோடல் பெரிதும் வியக்கத்தக்க தென்பார். பேர ரையற் கிங்கனே பித்தொருவரா மாறும்" என்றனர். ஒருவர் பித்து ஆமாறும் இங்கனே என இயைக்க. இங்ஙனேயென்பது இத்தன்மை கொல் என வியப்புக்குறிப்புணர நின்றது. உயிர் எத்துணைத் தகுதியுடையதாயினும், இறைவன் அருளில்வழித் தலையன்பில் தலைப்படல் கூடாதாகலின், இங்ஙனம் முதிர்ந்த பத்திமை யுடையளாம்வண் ணம் இவளை ஆட்கொள்ளவல்ல சிறந்த சதுரப்பாடுடையன் சிவபெ ருமான் ஒருவனேயாதல் வேண்டும் என்பார், 'ஆரொருவ ரிவவண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்" என்றார். இங்ஙனம் தலையன் பராம் வண்ணம் நம்மையும் ஆட் கொண்டருளுமாறு அப்பெருமான் திருவடி களை வாயாரப்பாடி நீராடுவோமாக வெள்பாள். "தாள் வாயார நாம்பாடி... புனல் பாய்ந்தாடு' என்று கூறினாளென்பது. பத்திமை யிற் சிறந்த இந்நங்கை வாக்கு மனம் மெய் மூன்றனாலும் ஈடுபட் டான் இங்ஙனம் ஒருங்கு நிகழ்தல் நமக்கு அரிதாயினும் மொழிப்பணி யையேனும் முந்துறச் செய்வோமாக என்பது கருத்து. இவள் இறை வன் திருவடி முதலிய வற்றின் உறுப்பழகை அகக்கண்ணாற் கண்டு கண் ணீரிலாடினாள். அத்தகுதி நமக்கு இன்றெனினும் அவ்வுறுப்புக்களை உவமை முக மாகக்காட்டும் அழகிய தோற்றமுடைய மலர்களைப் புறக் கண்ணற் கண்டு நாம் தண்ணீரிலேனும் ஆடுவோமாக வென்பார் "பே ருவப் பூம்புனல் பாய்ந்தாடு" என்றாள் என்பது.

இதன்கண் "ஆரொருவரிவ் வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்" என இறைவன் திருவடிப் பெருமை கூறப்படுதலின், சத்தியை வியந்தது பெறப்பட்டவாறு அறிக.

1. பெரியபுரா. திருநாவுக்கரசுசுவாமிகள் புரா - செ-140



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
பின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடி மேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலேருலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி பவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய் (16)

(க-ரை):- முன்னைத்திருப்பாட்டில்இறையருளில் ஈடுபட்டு அநுபவிக்குங் கால் நிகழும் மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தருளிய அடிகள். இதிருப்பாட்டில் அவ்வநுபவப்பயனாக இறைவன் சத்திமூலமாக மெய்யன்பர்க்கும் சுரக்கும் அருட்பெருக்கை வருணித்து அருளிச்செய்கின்றார்.

(ப-ரை):- மழை - முகிலே, கடலைமுன்னிச் சுருக்கி எழுந்து உடையால் என்னத் திகழ்ந்து - நீகடலைச் சார்ந்து அது குறைய நீரை முகந்து விண்ணில் எழுந்து எம்மையுடையவளாகிய உமையம்மைவைப்போல நிலநிறம்பெற்று விளங்கி, எம்மை ஆளுடை யாள் இட்டு இடையில் மின்னிப்பொலிந்து - எங்களை ஆட்கொண்டருளிய அவ்வம்மையின் சிறிய இடையைப் போல மின்னு தலைச்செய்து விளக்கமுற்று, எமபிராட்டி திரு அடிமேல் பொன் அம் சிலம்பின் சிலம்பி எங்கள் தலைவியின் திருவடிமேல் அணிந்த பொன்னாவா பெ அழகிய சிலம்பைப் என்'னச் சிலை குலவி - அவ்வம்மையின் அழகிய புருவம்போல வில் விளங்கச் செய்து. நம் தம்மை ஆளுடையாள் தன்னில் பிரிவு இல்லா எம் கோமான் தம்மை அடிமையாகவு யவளாகிய பெருமாட்டிய நின்றும் பிரிதவில்லாத எம்பெருமானுடைய அன்பர் க்கும். சிறியேமாகிய நமக்கும். அவள் முன் முன்னி சுரக்கும் இன் அருளே என்னப்பொழியாய் - அவ்வம்மை முற்படத் திருவுளங்கொண்டுசுரந்தருளும் இனிமைமிக்க அருட்பெருக்கைபோலப் பொழிவாயாக என்பது

(வி.ரை)-இஃதுஇப்பாவை நோன்பினால் விரும்பப்படும் பொதுவும் சிறப்புமா கிய பயன்களுள், நாடு செழிக்க மழை பெய்தலாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப் பயனை வேண்டிக் கன்னிப்பெணிகள் கூறியதாக அருளிச் செய்யப்பட்டது. வெம்பாதாக வியனிலவரைப்பென"( இப்பெரு நிலம் மழையால் வெம்மை நீங்கப் பெற்றுக் குளிர்வதாக) என்று 11ம் பரிபாடலிற் கூறியதும் இவ்வுண்மையைக் குறிக்கும். முன்னுதல், அடைதல் சுருக்குதல் - நீரை முகந்து கடலைக் குறைத்தல்.

1. "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்"

என்புழி, தடிந்து என்பதற்குக் குறைத்து எனப் பொருள் கொண்டு "ஈண்டுக் குறைத்தலென்றது முகத்தலை: அது "கடல்குறை படுத்த நீர் கல்குறைபடவெறிந்து" என்பதனானும் அறிக" என்று பரிமேலழகர் எழுதியவரையும் ஈண்டுக் கருதற்பாலது. நீருண்டமேகம் நீலநிறம் பெற்றுத் தோன்றுமாதலின், அஃது அம்மையின் திருவருவ விளங்கியதென்பார் 'உடையாளென்னத் திகழ்ந்து' என்றார். 2. 'நாமும் அரனுடைமை' என்றபடி எல்லாப்பொருள்களையும் உடைமையாகக் கொண்டு உடையானாக விளங்கும் இறைவனின் வேறுபாடின்மைபற்றி இறைவிஉடையாள் என்றும் சொற்கள் முறையே இறைவனேயும் சத்தியையும் குறிப்பனவாம்.

"உடையா ளுன்றன் நடுவிருக்கும்
உடையாள நடுவுள் நீயிருத்தி "

என்று பிறிதோரிடத்து அடிகள் கூறியிருத்தலும் உணர்க.முகில் நீருண்டு விளங்குநிலைக்குச் சத்தியின் அருள்சூற் கொண்ட நிலை உவமையாயிற்று. கருக்கொண்ட முகில் மின்னலிட்டு ஒலித்தல் இயல்பு அவற்றிற்கு முறையே அம்மையின் சிறிய இடையையும் அவள் திருவடிச்சிலம்பையும் உவமையாக்கி " எம்மையாளுடையாள் இட்டிடையின் மின்னி எனவும் "எம்பிராட்டி திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி எனவும் கூறுவராயினர். ஈண்டுஉவமமாகக் கொள்ளப்பட்ட உலகன் னையைச்சுட்டுங்கால் "உடையான்" எனவும் "எம்மையாளடையாள்"

1. திருக்குறள்-1
2. சிவஞானபோதம் சூ--10-அதி-2
3. திருவாச - கோயில் மூத்த திருப்பதிகம் - 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், 'எம்பிராட்டி" எனவும் முறையில் கூறிய உட்கோள் என்னையெனின், கூறுதும், உயிர்த்தொகுதிகளின் நிலையாப் பற்றிச் சிவ நெறிப்பனுவல் கூறுங்கால், அவைகள் காரணவத்தை காரியாளத்தை யெனப் படுத்து விரித்து விளக்கப்பட்டன. அவற்றுள் காரவை கேவலம் -கலம் சுத்தம் என மூவகைப்படும். அநாதிநித்தியம் உயிர் எல்லாம் ஒடுங்குங்காலத்து மாயாகாரனத்திலே பொடுங்க, படைப்புக் காலமளவும் ஆணவமலத்தாலே மறைப்புண்டு. ஒன்றும் அறியாமற்கிடக்கும் நிலை கேவலமாகும். படைப்பத்தொடங்க ஒடுங்குங்காலம்வரை உடல் கரணம் இடம் நகர்வுகளைப் பெற்றும் பிறந்திறந்துழலும் நிலை சகலமாகும். இங்ஙனம் கேவல சகலப்பட்டும் பிறந்திறந்து திரியும் நிலையில் திருவருளாலே ஆலாலமனபாகம் வா இருவினையொப்பும், சத்தி நிபாதமும் குருவருளும், ஞானசாதாரம், மும்மலநீக்கமும், சிற்றறிவொழிவும் பெற்று ஞானப்பெருக்கத்தால், இறைவன் திருவருளைக் கூடிப் பேரின்புறும் நிலை சுத்தமாகும். இவ் வண்மையை,

1. "கேவலஞ் சகலஞ் சுத்த மென்று மூன் றவதிதை யான்மா
மேவுவன் கேவ லந்தன் னுண்மைமெய் பொதிய ளெல்லாம்
காவலன் கொடுத்த போது சகலரும் மலங்க ளெல்லாம
ஓவின போது சுத்த முடையனும் பவந்து டைத்தோ"

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் உணரலாம். இந்நிலைகள் ளெல்லாம் உயிர் நலங்கருதிய இறையருட்சத்தியால் நிகழ்வனவாம் இவ்வுண்மையை அறுபவமுடைய ஞானதேசிகராகிய நாயுமான அடிகள் கூறிய பின்வரும் செய்யுளாலும் உணர்க.

'காரிட்ட ஆணவக் கருவறை லறிவற்ற
கண்ணிலாக் குழவி யைப்போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியில் விட் டல்லாங்
காப்பிட் டதற்கி சைந்த
பேரிட்டு மெய்யெனப் பேசுபாழ்ம் பொய்யுடல்
பெலக்கவினை யமுத மூட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்ட மைத்திட்.

சிவஞானசித்தி - சூ, 4 – அதி 3 – செ 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேரிட்ட தன்கருதி மொழிதப்பில் நமனைவிட்
படருற வுறுக்கி யிடர் தீர்த்
திரவுபக வில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகண்னை வடிவான வெந்தையே
சித்தாத்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே"

இதன்கண், "காரிட்ட" என்பது முதல் கட்டுண்டிருந்தவெமை" என்பதுவரை கேவலநிலையாகவும் "வெளியில் விட்டு' என்பது முதல் நமைவிட்டு இடருற வுறுக்கி" என்பதுவரை சகலநிலையாகவும் "இடர்தீர்த்து" என்பது முதல் சீரிட்ட ' என்பதுவரை சுத்தநிலை யாகவும் உய்த்துணர்ந்துகொள்ளத்தக்கன. "உலகன்னை வடிவான எந்தை" என்பது இவ்வெல்லாம் சிவசத்தியால் நிகழ்வன வென்ப தைக் குறிப்பிற் புலப்படுப்பதாம்.

இம்முறையிற் கேவல நிலையிற் கிடக்கும் உயிர்த்தொகுதி களை யுடைமையாகக்கொண்ட நிலையில் அன்னை. " உடையாள்' எனவும், பின் சகலநிலையில் பிறப்பில் உழலும் நமக்குத் தனு கரண முதலிய வற்றைத் தந்து சிறிது அறிவுவிளங்கச்செய்து ஆட்கொள்ளு தற்குத் தகுதியளித்தலின் அந்நிலைநோக்கி "எம்மையாளுடையாள்" எனவும். பின் சுத்த நிலையில் பஞ்சமலங்களும் நீங்கிச் சிவத்தோடு கூடி இன்பு றுதற்கு உதவி புரியும் இயல்புநோக்கித் தலைவியாயி னாள் என்பார் "எம்பிராட்டி' எனவும் கூறப்பட்டாள் என்க. சகலநிலை கருதி எம்மையாளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து" என்றதும் சுத்தநிலைகருதி 'எம்பிராட்டி திருவடி" என்றதும் குறிக்கொள்ளத்தக்கன.

கருக்கொண்ட மேகம் மேலேழுந்து மின்னிக் குமுறி வில்லிடல் இயல்பாதலின் "திருப்புருவம் என்னச் சிலைகுலவி" என்றார். திரு வென்னும் அடையால் புருவம் பிராட்டியினுடையது என்று கொள் ளல்வேண்டும். இது முத்தி நிலையிற் சேர்க்கும் நயன திக்கையைக் குறிப் பதாகும். அதன் மேல் மழைபொழிதற்கு அம்மையின் அருட்பொழிவை உவமம் ஆக்கிக்கூறினர். "நம் தம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளுடையாள் தன்னிற் பிரிவில்லா எங்கோமான்" என்றது இறைசெய லெல்லாம் சத்தியை யின்றியமையாமை குறிப்பிடற்கு என் க. "சத்தியுஞ் சிவமுமாய தன்மை' என்னும் 1 சிவஞானசித்திச் செய்யுளில் "அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம் என்று கூறியதும்ஈண்டுக் கருதத்தக்கது. "எங்கோமான் அன்பர்" என்றது. இறையருட்கு ஆளாகிமலபரிபாகம் இரு வினை யொப்பு முதலியெனபெற்றுச் சீவன்முத்த ராய்த் திகழும் பேரன்பரை. ''நமக்கும்'' என்றது அத்துணையன் பில்லாத எளியேமாகிய நம்மனோர்க் கும் என்றபடி. அன்பர்க்கும் நமக்கும் என்புழி உம்மைகள் எண்ணுப்பொருளன.

2 "சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளும், உறைவான்" என்புழிப்போல முறையே உயர்வுசிறப்பு இழிவுசிறப்பு உம்மைகளாகவும் கொள்ளலாம். முன் முன்னி என இயையும் இருதிறத்தார்க்கும் முற்படத் திருவுளங்கொண்டு என்பது பொருள். மெய்யன்பராகிய அடியாரோடு அத்துணை அன்பில்லாத நம்மையும் ஒப்பகருதி யென்றபடி. சுரத்தல் மேன்மேலும் பெருகுதல் தன் கருணை அள்ளக்குறையாமை. அம்மையின் அருட்பெருக்குப் பாச வெப்பத்தையொழித்துத் தண்ணென்று இனிமைபயந்து நிற்றலின் இன்னருள்" என்னப்பட்டது. 'இன்னருளே என்னப் பொழியாய்'' என்புழி ஏகாரம் தேற்றப்பொருட்டு பயன்விளைதல் நோக்கிப் பொழிய வேண்டுமென்பது. 3 "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்ற படி, உலகநலங்குறித்துப் பொழியும் மழைக்கு உயிர் நலங்குறித்துச் சுரக்கும் அம்மையின் திருவருள் ஒப்பாயிற்றென்பது. பாவை நோன் பில் பொதுவும் சிறப்புமா கவுள்ள பயனிரண்டனுள் பொதுப்பயனாக மழைவளத்தை வேண்டியது மிகவுஞ் சிறந்தது. 4 "நீரின்றமையா துலகு' 5.மழையின்றி மாநிலத்தார்க்கில்லை' என்பன பொருளுரை. இதன்கண் உலகத்திற்கு இன்றியமையாதது வேண்டப் படும் மழைக்கு உவமையாகச் சிவசத்தியின் அருட்பெருக்கைக் கூறியிருத்தலின் "சத்தியைவியந்தது" வெளிப்படையிற் புலனாயவாற் றிக.

சூ-1. அதி - 3 -செ-69. 2. திருக்கோவையார் - செ — 20
3. தொல்காப்பியம் - உவம இயல், சூ - 3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திருக்குறள் - வான் - 10. 5. நான்மணிக்கடிகை - செ — 48

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள் பால்
எங்கு மிலாததோ ரின்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் மில்லங்க டோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் (17)

(க-ரை) :- முன்னைத் திருப்பாட்டில் இறைவன் சத்தி மூலமாக மெய்யன்பர்க்குச் சுரக்கும் அருட்பெருக்கைப் புலப்படுத் தருளிய அடிகள், இத்திருப்பாட்டில் அவ்வருளமுதத்தால் விளையும் இன்பத் தின் அருமையைப் பாராட்டி அருளிச் செய்கின்றார்.

(ப-ரை) :- கொங்கு உண் கருமை குழலி மணந்தங்கிய கரிய கூந்தலையுடைய பெண்ணே, செங்கணவன்பால் திசை முகன் பால் தேவர்கள் பால் திருமாலிடத்தும் பிரமனிடத்தும் இந்திரன் முதலிய தேவர்களிடத்தும், எங்கும் இல்லாதது ஓர் இன்பம் நம்பா லதாக மற்றெவ்விடத்துள்ளார்பாலும் இல்லாததாகிய ஒப்பற்ற பேரின்பம் எளியேமாகிய நம்மிடத்ததாக, நம் தம்மைக் கோதாட்டி நம்மை வினைமாசு களைந்து, இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுத் தருளி இந்நிலவுலகத்தில் நம் வீடுகள் தோறும் எழுந்தருளி வந்து, செங்க மலம் பொன்பாதம் தந்தருளும் சேவகனை செந்தாமரை மலர்போன்ற அழகிய திருவடிகளை எளிமையில் தந்தருளும் வீரனை, அம் கண் அரசை அழகிய அருணோக்கமுடைய இறைவனை, அடி யோங்கட்கு அருமை அமுதை அடிமைகளாகிய நமக்குக் கிடைத் நம்மு தற்கரிய அமுதமாக உள்ளவனை, தங்கள் பெருமானைப் பாடி டைய கணவனைப் புகழ்ந்துபாடி. நலம் திகழ நம்மனோர்க்கும் தன்மை சிறக்க, பங்கயப் பூம் புனல் பாய்ந்து ஆடு - தாமரைமலர் முத வியவற் ருல் பொலிந்து விளங்கும் நீரிற் குதித்து ஆடுவோமாக என்பது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி. ரை) - இது நீராடுங்கால் ஒருத்தியை நோக்கிக் கன்னியர் பலருங் கூறியதாக அருளிச்செய்யப்பட்டது. இப்பகுதியில் மகளிரை முன்னிலைப்படுத்திய பிற இடங்களிலெல்லாம்
வாட்டடங் கண்மாதே"(1) "நேரிழையாய்" (2) "முத்தன்ன வென் ணகையாய்" (3) "ஒண்ணித் திலநகையாய்" (4)" தேன்வாய்ப்படி (5)- வாருருவப்பூண்முலையீர்' (6) என்று அவர் தம் முன்னழகு சுட்டப்பட்டன. அவ்வாறாகவும் ஈண்டு -கொங்குண்கருங்குழலி" எனப்பின்னழகைச் சுட்டிக்கூறியது, விளிக்கப்பட்டவள் இறைவனு டைய அருட்பெருக்கையும் பேருபகாரத்தையும் விளை யாட்டு நிலையில் கணிப்பதுபோல்திரும்பிநின்றாளாக, அந்நிலையில் அவள் கூந்தலழகைப் புகழ்வதுபோலச் சுட்டிக்கூறி வற்புறுத்தியபடியாம். திருமால், நான் முகன், இந்திரன் முதலிய மற்றெவ்விடத்துள்ளார் பாலும் அமையாத ஒப்பற்ற சிவானந்தமெள் பார் "செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்குமி லாதது ஓர் இன்பம்' என்றார். திருமால் முதலிய தேவர்கள் சிவ புண்ணியமிகுதியால் அதிகார நிலையங்களைப் பெற்று ஒரோவமயம் சிவபெருமான் பக்கல் அணுகும் பேறுபெற்ற வராயினும், அதிகாரச்செருக்கால் உயிர்முனைப்புடன் தத்தம் செயல்களில் தலைப்படும் இயல்புடையராதலின் இறைவனது பேரானந்தப் பெருஞ்செல்வத்தை அநுபவிக்கும் பெறலரும்பேறு பெற்றிலரென்ப. இவ்வுண்மையை,

1 "இந்திரனு மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி

என்று அடிகள் பிறிதோரிடத்துக் கூறியிருத்தலானும் அறிக. இங்ங ணம் இறைவன் தன் அணிமையில் இருக்கும் திருமால் முதலியோ ரைக் கடந்து மெய்யன்பரை ஆட்கொள்ளும் நிமித்தம் நிலவுலகத்துக்கு எழுந்தருளிவருதலால் திருமாலும் நான்முகனும் விண்ணுலகைவிட்டு நிலவுலகிற் பிறக்கும் பேறு பெற்றிலமேயென்று ஏக்கமுற்று இவ்வுல கிற்பிறக்கப் பெரிதும் விருப்புற்றனர் என்று அடிகன் அருளியிருத் லும் 2. ஈண்டுக் கருதத்தக்கது.

திருமால் ஓரமயம் தன் கண்ணிடந்து அருச்சித்தும் அதன் பயனாக இறைவன் பாற் பெற்றது சக்கரப்படையேயன்றிச் சிவானந்தப்பே நன்று என்பது குறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திருவா - திருவம்மானை - 3. 2. திருப்பள்ளியெழுச்சி - 10.

செங்கணவன் என்றும் பிரமன் நான்குமுகங்களாதும் மறைபாடி வழுத்தியும் பெற்றது அப்புரம் அழிப்புழி இறையவற்குச் சாரதியாம் அந்தப் பேயன்றி வேறு இன்றென்பது தோன்றத் "திசைமுகன் என்றும், இந்திரன் முதலியோர் ஒளியுருவம் பெற்றும் பேரொளிப் விழப்பாகிய இறைவனை வேண்டிப் பெற்றது நரைதிரை போக்கவல்ல அமுதவுண்டியானாம் சிற்றின்பமேயன்றிப் பிறிதின் றென்பது புலப்ப தேவர்கள் ' என்றும் கட்டப்பட்டனரென்க. எங்கும் என் ஆகுபெயர், வின்னுலகத்தன்றிப் பிறவிடங்களிலுள்ள முனிவர் முதலியோரிடத் தும் என்றபடி -ஓர் இன்பம்" என்றது. இம் எடுப்பு வில்லாத நித்திய இன்பத்தை. சிறந்த தவமுதலியன செய்து தகுதி வாகத்தவராலும் பெறுதற்கரிய இன்பம். அத்தளைத்தகுதி ஒருசிறிது வில்லாத ஏழைப் பெண்மக்களாகிய நம்மிடத்து நிலவயென்பார் நம் பாலதாக" என்றனரென்க. கோதாட்டுதல்- குற்றங்களை தல், இறைவனது பேரானந்தம் தம்பால் தங்குதற்குத் தடையாகவுள்ள வினைமாசுபோக்கியென்பது கருத்து. நல்லின்பமாகிய அமுது பெய்து வைத்தற்குக் கொள்கலம் தூய்மை செய்தபடியாம், இங்கு இந்நிலவுகத்தில், "நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி என்றதனால் திரு வால் முதலிய தேவர்களெல்லாம் இறைவன் எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தே சென்று அவன் திருக்கோயிற்கண்ணே வழிபட முயன்று செவ்வீபார்த்திருப்ப, இறை வன் அன்னார்காட்சிக்கு அரியனாய் இந்தி லவுலகத்தேபோந்து மெய்யன்பர் உறையும் சிறிய குடில்கள் தோறும் வலியஎழுந்தருளி அவர்க்கு எளிமையிற் காட்சியளிக்கும் இயல்பினன் எனனும்உண்மை புலனாயவாறுஅறிக.

1. முத்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரிபயாவர்மற்றறிவார்
பநதணை விரவியும் நீயும் நின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே"

என்று அடிகள் பிறிதோரிடத்துக் கூறியிருந்ததும் ஈண்டு நோக்கத்தக்கது.

ஒரு பேரரசன் தன் தம்நகரைவிட்டுப் பிரிதோரிடத்துக்கு வர நேர்ந்தால் வந்து தங்குமமிகச்சிறிதாயினும் அவ்விடத்தில் அலங்கார மாளிகையமைத்தல் உலகியல்பு. மேலும்

1. திருப்பள்ளியெழுச்சி – செ - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வரசன் தன் மனைவியோடு வந்து தங்குவதானால் இன்னும் சிறப்பாக இடம் அமைக்கவேண்டுமென்பது கூறவேண்டா. அங்ஙனமாகவும் இங்கே இறைவன் எழுந்தருளிய இடம் குடில் எனவும், அது வும் பழமையானதெனவும், ஆண்டு எழுந்தருளுங்கால் உலகன்னை யாகிய தேவியாரோடு எழுந்தருளினான் எனவும் கூறிய அருமை நினைந்து இன்புறத் தக்கது. நம் இல்லங்களுக்கு எழுந்தருளிய அளவி லன்றி அப்பொருமான் தன் பொன் போன்ற திருவடிகளையும் தந்தரு ளினான் என்று கருணைமிகுதியைப் பாராட்டின ரென்பது. கோதாட் டித் திருவடியளித்தல், வினைமாசொழித்துச் சிவஞானம் அருளிய குறிப்பைப் புலப்படுக்கும். சேவகன் - வீரன் ஈண்டுக் கொடை வென்றியான் மேம்பட்டவன் என்பது. திருமால் முதலியோர்க்கும் கிடைக்யாத இன்பம் ஏழைகளாகிய மக்களிடமாக அவர்தம் இல்லங்களுக்கு வலியவந்து சிவஞானம் வழங்கிய பெருங்கொடையாளன் என்பது கருத்து. நம்பாலதாகக் கோதாட்டி எழுந்தருளித் தந்தருளும் சேவகன் என முடிக்க. இதனால் பேரின்ப விளைவிற்குக் காரண மாகச் சிவஞானம் அருளினன் என்பது புலனாம். கண்ணுக்கு அழகு கண்ணோட்டமாதலின் அம்கண் - அருணோக்கம் என்று கூறப்பட்டது. கொடைவீரனாகிய அரசனாதலின் அவன் பால் அருட்குணம் உண்டாயிற்றென்பதும், அக்குணம் உண்மையானே அரிய அமுதமாக நின்றுபயன்விளைத்தனன் என்பதும், அப் பயனை நமக்குச் சிறப்பு முறை யில் வழங்கியமையால் நம் உண்மைத்தலைவனாயினன் என்பதும் உணர்ந்து "அங்க ணரசை அடியோங்கட் காரமுதை நங்கள் பெருமானை"என்றனரென்க. அத்தகைய பெருமானைப் புகழ்ந்து பாடுதலானே நம்மனோர்க்கு எல்லா நலங்களும் வெளிப்படையில் உண்டாம் பார் 'பாடி நலந்திகழ" என்றார். நலம் விளங்கும் வண்ணம் தாமரை மலர்களாற் பொலிவு பெற்ற நிர் நிலையில் மகிழ்ச்சி மீக்கூர்ந்து குதித்து நீராடுவோமாக என்றனர் என்பது.

இதன்கண் "செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகன்" என்றதனால் திருவடி யாற் பெறப்படும் சத்தியை வியந்தது புலனாயவாறறிக.

முதல் திருப்பாட்டின் இறுதியில் விளக்கம் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். (18)

(க - ரை) - முன்னைத்திருப்பாட்டில் இறைவன் திருவருளால் விளை யும் இன்பத்தின் அருமையைப் பாராட்டியருளிய அடிகள், இத்திருப் பாட்டில் அவ்வின்பப் பேற்றிற்குரிய உயிரின் பக்குவ நிலைக்கு ஏற்ற வாறு வெளிப்பட்டு நின்று இறைவன் அருளும் முறையைப் புலப்படுத் தருளுகின்றார்.

(ப-ரை) :- அண்ணாமலையான் அடிக்கமலம் இறைஞ் திருவண்ணா மலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய திரு வடித் தாமரை மலர்களைச் சார்ந்து வணங்கும், விண்ணோர் முடியின் மணித் தொகை வீறு அற்றாற்போல் - தேவர்கள் முடியணிக்கண் உள்ள பல வகை மணித்தொகைகளும் பொலிவிழந்து ஒளி மழுங்கி யொழிந் தமைபோல, கார் கரப்ப கண் ஆர் இரவி கதிர் வந்து இருள் நீங்க எங்கணும் பரவிய சதிரவன் ஒளி வெளிப்பட்டமையால், தார கைகள் தண் ஆர் ஒளி மழுங்கி அகல விண் மீன்கள் தம் மெல்லிய ஒளி பொலிவிழந்து மழுங்கி மறைய, (இந்நிலையில்) பெண் ஆசி ஆண் ஆய் அலி ஆய் பிறங்கு ஒளிசேர் விண் ஆகி மண் ஆகி-பெண் ணாகி யும் ஆணாகியும் அலியாகியும் ஒளிவிளங்கும் ஆகாயமாகியும் நிலமாகியும், இத்தனையும் வேறு ஆகி - இத்துணைப் பொருள்களி னின் றும் வேறு பொருளாகியும், கண் ஆர் அமுதமும் ஆய் ஞானான பவத்திற்கு அமுதமயமாகியும், நின்றான் கழல்பாடி - நிலைபெற் நிற்கும் சிவபெருமானுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடி பெண்ணே - இப்பூம்புனல் பாய்ந்து ஆடு - பொலிவு பெற்ற இந் நீர் நிலையிற் குதித்து ஆடுவோமாக என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை):- இது நீராடுங்கால் ஒருத்தியை நோக்கிக் கூறுமுகமாகக கதிரவன் தோன்றிய குறிப்பைப் புலப்படுத்துக்கூறகின்றது. திருவண்ணாமலை ஒரு காலத்து ஒளிவடிவினதாக ஓங்கி நின்றதென்ப. இதனை,

1. கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய அண்ணாமலை'

என்பர் திருஞானசம்பந்தர் இங்ஙனம் பேரொளிப்பிழம்பாகவுள்ள மலையுரு வில் விளங்கிய இறைவனுடைய திருவடிகளைச் சார்ந்து வணங்கும் தேவர்களின் தலையிலணிந்த முடிகளில் பதிக்கப்பட்டுள்ள பலவகை இரத்தினங்களெல் லாம். அத் திருவடிப் பேரொளி முன், தமக்குப் பொலிவு தரும் சிற்றொளிகளை யிழந்தொழிந்தது போலவென்பது உவமை. அழலுருவாய அண்ணலின் திருவடிகளை 2. சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன" என்று கூறும் தமிழ்மறை. அணுகிவணங்குதல்முடிமணிகளின் ஒளி அறவே மழுங்கி யொழிதற்கு ஏதுவாம் என்பார். சென்றிறைஞ்சும்' என்றார். வீறு - பொலிவு. களத்து வீறுபெறத் தோன்றி என்புழி அப்பொருட்டாதல் அறிக. கன்னியர் நீராடுங்காலம் இருள்புலர் காலையாதலின், கார் கரப்ப' என்றார். கார் ஆகுபெயர். கரப்ப என்னும் எச்சம் காரியப் பொருட்டு. விண் மண் முதலிய எங்கணும் பரவிய கதிரவன் ஒளி யென்பார், கண்ணர் இரவிகதிர் என்றார். இரவிகதிர் என்றது குழவிகை என்பது போல மிகாதாயிற்று. வந்து என்னும் எச்சம் காரணப்பொருள் குறித்து நின்றது. கதிரவன் ஒளி கிறிது வெளிப் பட்ட துணையானே விண்மீன் கள் ஒழிமழுங்கி யொழிதல் கண்கூடு. தண்மை ஈண்டு மென்மைமேனின்றது" என்பார் பரிமேலளகர். தாம் அசை வல்லொழியாகிய கதிரொளிமுன் மெல் லொளியாகிய விண்மீன் ஒளி மழுங்குதல் இயல்பே. வீற்றுதலாகிய உவமவினையைப் பொருளினும், மழுங்கி அகல என்னும் பொருள் வினைகளை உவமையினும் இயைத் துக்கொள்க. இந்நிகழ்ச்சி கன்னி யர் நீராடத்தொடங்கி நெடுநேரமாயிற் றென்பதையும், ஞாயிறு கதிர்ப்பரப்பியெழும் இருள்புலர்காலம் தொடங்கிற்று .

1. தேவாரம் 1-10.9. 2. திருநாவுக் - 4-92-17. 3. திருமுருகாற்றிப் - 283. 4. திருக்குறள் - 1239.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும், விரைவில் நீராடுதல் முடித்துக் கொள்ள வேண்டுமென். பதையும், குறிப்பிற்புலப்படுத்தவாற்றிக. எண்டுக்கன்னிப் பெண்கள் நெடுநேரம் இறைவன் திருப்புகழைப் பாடி நீராடினராக, அந்நிலையில் கதிரவன் ஒளி தோன்றியதும், இருள் நீங்கப்பெற்று, விண்மீன்கள் ஒளிமழுங்கி அக்கதிரொளியில் இயைந்து மறைந்தனவென்னும் இவ் கருணையைனயால், இறையருட்பெற்றிற்குரிய கடவுட்பத்தியைப் பலகாலம் மேற் கொண்ட உயிர்களுக்குச் சிவஞானம் தோன்றியதும், அவ்வுயிர்கள் பாச நீங்கப்பெற்று. உயிரறிவு மடங்கி இறையருள் நிறைவில் இரண்டறக் கலந்த இன்புறுவனவாம் என்னும் சைவசித்தாந்த உண்மை குறிப்பிற் புலர்தலும் உணர்க..

இனி இலறவன் உலகெலாமாகி வேறுயுடனுமாய் நின்று உயிர் களுக்கு அருளுமுறையைப் புலப்படுத்துகின்றார். உலகம் இயங்கியத் பொருட்பகுதி, நிலையியற்பொருட்பகுதியென்னும் இருதிறத்ததாம் இங்கு “பெண்ணாகி யாணா யலியாய் என்பது இயங்கியற் பொருட் கூற்றுக்கும் விண்ணாகி மண்ணாகி” என்பது நிலையியற் பொருட் கூற்றுக்கும் எடுத்துக்காட்டாகும். ஏனையவற்றை உபலக்கணத்தாற் கொண்டு இவ்விரு திறத்துள் அடக்கிக்கொள்ளல் வேண்டும். இயங்கியற்பொருள் பெண் அலி என்னும் முக்கூற்றுள் அடங்கும். உயர் திணை, அஃறினை இரண்டற்கும் ஈதொக்கும். ஆண் பெண் என்பதே முறையாயினும், ஈண்டுப் புகழ்ந்து பாடுவார் கன்னியராத லின், அவா நிலைக்குத் தாய்மை வன்பே முற்படுமென்பது குறித்து, “பெண்ணாகி யாணாம்” என்று கூறப்பட்டது. 1 “அன்னையும் அத் தனுமாவாய்” என்பது தமிழ் மறை, இறைவன் சத்தியாய்ச் சிவமாய் வெளிப்பட்டருளியது பற்றிப் பெண் ஐகியாணாய்” எனவும், பிரம்பொருளாகப் பாவிக்கப்படுதலின் “அலி யாய்” எனவும் கூறுவராயினர். அலி, ஆணாகவும் பெண்ணாகவும் இல்லாமல் ஆண்மையும் பெண்மையும் திரிந்தவுருவாகும். அது பொருள் வகையால் உயர்திணையாயினும் சொல்வகையால் அஃறிணைப் பாற்படும். வடமொழியில் பிரமம் என்னும் சொல்லும் அவ்வறேநபுஞ்சகலிங்கமாதல் ஈண்டுக் கருதத்தக்கது. இனி நிலையியற்பொருளுக்குளடுத்துக்காட்டாக விண்ணு மண்ணகி” என்றார். பூதங்களுள் ஒருகுண

1. திருநாவுக்கரசர்தேவாரம் -4-112-3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடைய விண்ணையும் ஐந்து குணங்களுடைய மண்ணையும் கூறவே,இடைப்பட்ட ஏனைய பூதங்களும் அவற்றின் கலவையாகிய மரஞ் செடி முதலியனவும் கொள்ளப்படும். ஞாயிறு திங்கள் விண்மீன் முதலிய ஒளிமண்டிலங்களுக்கெல்லாம் இடனாதல்பற்றி, "பிறங்கொளி சேர்விண்" என்னப்பட்டது. மணி பொன் கல் மர முதலிய பொருள்களைக் கொண்டு இறைவன் திருவுருவமைத்து வழி படுவார்க்கு, அத்திருவுருவங்களின் முகமாகவும் இறைவன் வெளிப் பட்டு அருளுதலின், அவற்றிற்கு மூலமாகிய பூதங்களாகவும் கூறினர்.

இங்ஙனங் கூறியது உடலின் உயிர்போலக் கலப்பினால் உலகெலா மாகி யென்பது புலனாதற்கு எனவும், இத்தனையும் வேறாகி என்றது.கண்ணின் அருக்கன் போலப் பொருட்டன்மையால் வேருதல் புலப்படுதற்கு எனவும், கண்ணார முதமுமாய் என்றது உயிர்க்கு உயிராதற்நன்மையால், கண்ணொ ளியின் ஆன்மபோதம்போல உடனாதல் புலப்படுதற்கெனவும் கொள்ளல் வேண்டும். இஃது இறைவனுக்குத் தடத்தலக்கணமெனப்படும் பொது வியல்பாகும். கண:- அறிவு. ஆர்தல் -அநுபவித்தல். அமுதம:- நுகர்பொருள். உயிர்கள் வினைப்பயன்களை அநுபவிக்குங்கால் அவற்றிற்கு முன்னிலை யாகிய நுகர் பொருள்களில் அவ்வுயிர்களோடு இறைவன் பிரிப்பின்றிச் சேறலே உடனாதலாகும். இப்பொருனைக் குறிப்பிற் புலப்படுத்தற்கே "கண்ணரமுதமுமாய் நின் றான்" என்றார். இங்ஙனம் உலகெலாமாகி வேறா யுடனுமாய் நின்று உயிர்களுக்கு உபகரித்துவரும் சிவபெரு மான் திருவடிகளைப் புகழ்ந்து பாடி யென்பார். '

'நின்றான் கழல்பாடி" யென்றார். இஃது ஒருத்தியை விளித்துக் கூறப்பட்டதாயினும் கதிரவன் தோன்றுதற்கு முன் நீராடு தலை முடித்துக்கொள்ள வேண்டிய நாம் கதிரொளி வெளிப் படத் தொடங்கிவிட்டபடியால் இனிக் காலந்தாழ்த்தல் ஆகாது விரைந்து நீராடுதலைச் செய்து கொள்வோமாக என்று வற்புறுத்தலின், எல்லோரை யுஞ் சுட்டிக் கூறியதாகக் கொள்ளல் வேண்டும். இதன்கண் நின்றான் கழல்பாடி" என்றமையால், 'சத்தியைவியந்தது" புலப்படுக்கப்பட்ட படியாம். இறைவன் திருவடி சத்தியைக் குறிக்கும் என்பதை முதல் திருப்பாட்டின் உரையிறுதியிற் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் (19)

(க-ரை):- முன்னைத்திருப்பாட்டில் இறைவன் உயிரின் பக்குவ நிலைக்கு ஏற்றவாறு வெளிப்பட்டருளும் முறையைப் புலப்படுத்தருளிய அடிகள், இத்திருப்பாட்டில் அவ்வாறு வெளிப்பட்டு இன்புறுத்தும் இறைவனுக்கு உயிர்கள் தாம் செய்யக்கடவ அன்புப்பணிகள் நிறைவேறுதற் பொருட்டும் அவ்விறைவன் துணை இன்றியமையாதது என்பதை அருளிச்செய்கின்றார். உம் -

(ப-ரை) :- எங்கள் பெருமான் எங்கள் பெருமானே, உம் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று உன் கையிற் சேர்ப்பிக்கப்பெறும் இப்பெண் உனக்கே அடைக்கலப் பொருளாவாள் என்று அங்கு அப்பழஞ்சொல் திருமணக்காலத்தில் பண்டைக் காலமுதல் வழங்கி வரும் சொல்லை, புதுக்கும் எம் அச்சத்தால் - புதுப்பிக்குமுகமாக எழுந்த எம் அச்சங்காரணமாக, உனக்கு ஒன்று உரைப்போம் கேள் - உனக்கு ஒரு விண்ணப்பம் செய்வோம் கேட்டருள்வாயாக, எம் கொங்கை நின் அன்பரல்லாதார் தோள் சேரற்க - எங்களுடைய கொள்கைகள் நின் அன்பர் அல்லாதார் தோள்களைத் தழுவாதொழிக, எம கண் கங்குல் பகல் மற்று ஒன்றும் காணற்க எம்முடைய கண்கள் இரவும் பகலும் நின்னையன்றிப் பொருளையும் காணாதொழிக, இங்கு இப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல் இவ்வுலகத்தில் இவ்வாறே எங்களுக்கு எங்கள் தலைவனாகிய நீ அருள் செய்வாயாயின், ஞாயிறு எழில் எமக்கு என் - திரவன் கீழ்த்திசையிலன்றி வேறு எத்திசையில் தோன்றினாலும் எமக்கு வரக்கடவதென்னை (யாதும் இன்று) என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை):- உன் கை எதுகைநோக்கி உங்கை யென்ருயிற்று இப்பழமொழி திருமணகாலத்தில் மணமகளை மணமகன்பால் ஓம்படு தற்பொருட்டு பெற்றேர் கூறுங்கற்றகப் பண்டுவழங்கியது என்ப மணமகன் கைப்பிடித்தஞான்றே அவனுக்கு அப்பெண் உரியவனாகவும் அணைப் பெற்றேர் தம் ஆர்வத்தால் சிறப்பு முறையிலும் பாதுகாக்கும் ஆம் கடமை நின்பாலதே' என வற்பறுத்துக் கூறுமுகமாக எழுந்ததா கும் இப் பழமொழி. என்னை சிறப்பு எனின், ஒருவன் தனக்கு உரிமைப்பொருள், தன்பால் வைக்கப்பட்ட அடைக்கலப்பொருள் என்னும் இரண்டனுள், உரிமைப் பொருளி னும் பாதுகாக்கத்தக்க பெருமை அடைகாலப் பொருட்கு உண் மையே. இவ்வாறு கருதுதல் உயர்ந்தோ ர்கொள்கை. கவுந்தியென்னும் தவச்செல்வியால் அடைக்கலமாக ஒப்ப விக்கப்பட்ட கண்ணகி யென்னுங் கற்பரசியை இழந்த மாதரியென் பாள் அதுபொழுது தன்னுயிர் நீத்தனன் என்ப. "அடைக்கலமிழந்து உயிரிழந்த இடைக் குலமகள" (காதை - 29) என்பது சிலப்பதிகாரம் அங்கு என்றது கற்பொழுக்கமாகிய திருமண நிகழ்ச்சியைக் குறிக் கும். வதுவைச் சடங்கு நிகழ்த்தி, கொள்ளுதற்குரிய முறைமையினை யுடைய மண மகன், கொடுத்தற்குரிய முறைமையினை யுடைய இருமுதுகுரவர் முதலாயினோர் கொடுப்ப மணமகளை ஏற்றுக் கொள்வதே உலகிய லிற் பண்டுதொட்டு வழங்கி வரும் திருமணமாகும். இதனை, "கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"

என்னும் தொல்காப்பிய விதியாலும், "இவளை இன்னவாறு பாது காப் பாயெனவும், இவற்கு இன்னவாறே நீ குற்றவேல் செய்தொழு கெனவும் கற்பிக்கப்படுதலில் ... கற்பென்றார்" என அதற்கு நச்சி னார்க் கினியார் எழுதிய விளக்கவுரையாலும் உணரலாம். பருவமடைந்த மக ளிரை உரியகாலத்தே மணஞ்செய்து கொடுத்தல் தங்கள் கடமையெனப் பெற்றோர்கள் கருதுவது இயல்பு. அம்முறையில் எம்மைப் பெற்றோரும்

எம்மை மணம் செய்து கொடுக்குங்கால் அப்பழஞ்சொல் அவர்களாற் கூறப்படுமேயென்பார் 'புதுக்கும்" எனவும், அந்நிலையில் எங்களுக்கு கணவராக வர இருக்கின்றவர்கள் குடிப்பிறப்பு உருவம் பருவம் அறிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு ஆண்மை அன்பு முதலியவற்றால் ஒத்து உலகத்தார் மதிக்கும் தகதிகள் பலவுடையராயினும் எங்கள் பெருமானாகிய நினக்கு அன் பராம் சிறப்புடைத் தகுதியில்லாதவராயின் எங்கள் வாழ்க்கை பய னுடையதாகாதே யென்ற அச்சமே எங்கள் உள்ளத்திற் குடிகொண் இள்ளதென்பார் "எம் அச்சத்தால்" எனவும், இவ்வச்சங்காரணமாக நின் திருமுன் யாங்கள் கூறும் ஒரு செய்திக்குத் திருச்செவி சாய்த்த ருளல் வேண்டுமென்பார் அச்சத்தால் உனக்கொன்றுரைப் போங் கேள் எனவும் கூறினர் என்க.

இவர்கள் கூறிய செய்திகள் பலவாகும். அவ்வாறாகவும் "ஒன்று உரைப்போம" என்றது. இறைவன் எளிதிற் செவியேற்றற்கென்க. மிகவும் தகுதிவாய்ந்த பெரியோனிடத்து எளியவன் ஒருவன் தன் குறைபற்றிப் பலசொல்ல முற்படுங்கால் காலச்செலவும், தன் அரிய செயற்கு இடையறவும் கருதிப் பல சொற்கேட்டலில் அப்பெரியோன் புனக்கணிக்கக் கூடுமென்று அஞ்சிக் கூறுபவன், 'ஒருவார்த்தை தெரி வித்துக் கொள்வேன்: இடந்தரல் வேண்டும்' என்று நயம்படவுரைத் துப் பின் விரைவிற் பலவற்றையுங் கூறுதலை உலகியலிற் காண்கின் ருமே். அம்முறையை மேற்கொண்டே "ஒன்றுரைப்போம்" என்றனர் என்பது. விண்ணப்பம் செய்துகொள்ளுங் கன்னியர் பலராதலின் "எம் கொங்கை" என்றும், ஒவ்வொருத்திக்கும் தனித்தனியே நல்ல கணவன் வேண்டுதலின் "நின் அன்பர்" எனவும் பன்மையாகக் கூறி னர் என்க. கன்னியர் இப்பாவை நோன்பின் பயனாக விரும்பும் கண வர் சிவனிடத்து அன்புடையராக இருப்பின், அவரோடுகூடி இல்லறம் நடாத்துங்கால் இருதிறத்தாரும் சிவத்தொண்டில் ஈடுபட்டு இன்புறலாமென்னும் குறிக்கோளுடையராய் நின்னன்பரல்லார்தோள் சேரற்க" என வேண்டுவாராயினர். குறிக்கோள் அதுவென்பது அடு த்து தம் கைகளும் கண்களும் செயற்பாலவற்றைக் குறிப்பிடுமுகம் கவும் உணரத்தக்கது. "அவர்தோள் சேர்க" எனற்பாலதனை வார் தோள் சேரற்க என எதிர்மறை முகத்தாற் கூறிய அன்பசின் இன்றிய மையாமையை வலியுறுத்தற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருவனவற்றிற்கும் ஈதொக்கும் 'உள்ளேன் பிறதெய்வம் உன்னை யல்லாது" என்று அடிகள் பிறிதோரிடத்துக் கூறிய திருவாக்கும் ஈண்டு நினைக்கத்தக்கது.

எம் கைகள் உனக்கல்லாமல் வேறுயார்க் கும் எப்பணியும் செய்வாதொழிக என்பதனோடு மேல் ஒன்பதாம் திருப்பாட்டில் நின்னடியார் சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்" என்பது முரணாகாதோவெனின், ஆகாது என்னை? அப்பெண்கள் சிவனடியாரைச் சிவனெனக் காணும் கருத்தினராத லின் என்க. மேலும், கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை யாகலா னும், சிவனடியார் கணவராயின் கட்டளை யிடுவது சிவத்தொண்டா கவே முடியு மாகலானும்"அவர் சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்" என்று ஆண்டுக்கூறியது மிகப் பொருத்தமுடை யதே. ஒன்பதாந்தி ருப்பாட்டிற் கூறியதையே ஈண்டும் கூறியது மிகையாகாதோ எனின்,ஆகாது என்க? இஃது இம்மை மறுமைகளைக் குறிக்கொண்டு கூறியது. இல்து இம்மை மறுமை வீடு என்னும் மும்மைதலங்களையும் குறிக்கொண்டு கூறியது ஆதலின் என்க.

இரவும் பகலும் நின் திருவுருவத்தையே எம் வேண்டும் என்றதனால் கனவிலும் நனவிலும் நின் திருவுருவக் காட் சியே முன்னிற்கவேண்டுமென வேண்டினாரென்பது. இறைவன் திருவடியைக் கனவிற்காண்டலும் சிறந்தபேறாகுமென்பதைத் திருவா சகத்தில் தோய்ந்தவுள்ளமுடைய இராமலிங்க அடிகள்,

"பண்ணேறு மொழியடியார் பரவி வாழ்த்தும்
பாதமலர் அழகினை யிப் பரவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றோ கனவி லேனுங்
காட் டென்றற் காட்டுகிலாய் கருணை யீதோ" என்று அது

பெறாமைமுக மாகப் பரிந்து கூறிய அன்புரையால் அறிய வாம். ஈண்டுக் கண்ணைக் குறிப் பிட்டது ஏனைப் பொறிநுகர் புலன்களும் சிவாகாரமாகவே திகழ வேண்டுமென்பது குறித்து. 2. "ஐந்து பேரறி வங் கண்களே கொள்ள" என்னும் அருண்மொழித்தேவர் அருளிய கருத்து இங்கே நினைக்கத் தக்கது. "எம்கொங்கை நின்னன்பரல்லார்"

திருவருட்பா - 5-சிவசாட்சி செ-12 பெரியபுராண - தடுத்தாட் செ-106



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள்சேரா " என்றதனால் இம்மைப் பயனும், ''எம் கை உனக்கல்லா தெப்பணியும் சய்யற்க" என்றதனால் மறுமைப்பயனும் சங்குல் பகல் எங்கண் மற்றென்றும் காணற்க" என்றதனால் வீட்டின்பமும் வேண் டிரென்பது குறிப்பிற் புலப்படுமாறுறிக,

ஆண்டவனே! இவ்வுலகத் தில் இங்ஙனம் நின்பால் அன்புடையடி யவரைக் கணவராகப்பெற்று இல்லறத்தியைந்து நினக்குத் தொண்டு செய்து நின் தரிசனப்பேறெய் திவாழும் வண்ணம் அருள் புரிவையா வின் இப்பொழுது கீழ்த்திசை யில் தோன்றிய கதிரவன் வேறு எத்திசையில் தோன்றினும் எமக்கு வரக்கடவ தீங்கு யாதுமின்று என்பார், "இங்கிப் பரிசே யெமக் கெங்கோன் நல்குதியேல், எங்கெழி லென் ஞாயிறு எமக்கு" என்றனர். 1. " என் கடன் பணிசெய்து கிடப் பதே, தன்கடன் அடியேனையுந் தாங்குதல்" என்றபடி தொண்டு செய் தல் முதலிய செயல்களெல்லாம் உயிர்களின் கடமையாகவும் பயன ளித்தல் இறைவன் கடமையாகவும் கூறியிருப்ப, ஈண்டு அச்செயல்க ளுக்கும் இறைவனைத் துணைவேண்டுதல் பொருந்துமோவெ னின், வினைக்கு ஈடாகப் பயனளிக்கும் இறைவன் பக்குவமுள்ள உயிர்க ளுக்கு நல்வினைசெய்வவும் கருணை புரிந்து பின் பயனும் அளிப்பன் என்பது சைவசித்தாந்த உண்மையாதலின் பொருந்துமென்க. இவ் வுண்மையை ஆங்கவனருளாற் பத்திநன் குண்டாம் பத்தியால் அவனருள் உண்டாம்' என்னும் வாயுசங்கிதையானும்,

2. " என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான" என்னும் நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கானும் உணர்க் இதற்கு முன்னுள்ள திருப்பாட்டில் கதிரவன் தோன்றிவிட்டான். விரைவில் நீராடுதல் முடிக்கவேண்டுமென்னுங் குறிப்புத் தோன்றக் கூறிய பெண்கள், பின்னர் இறைவன் நமக்கு இவ்வாறு அருளுவானாயின் கீழபால் தோன்றிய இக்கதிரவன் யாண்டுத் தோன்றினாலும் நமக்கா வதேன் என்றனர் என்பது. இனி இத்திருப்பாட்டிற்போந்த "உங்கையிற் பிள்ளை உனக்கே வடைக்கலம் என்னும் பழமொழி ஒரு தாய் தன் குழந்தையைக்

1. திருநாவுக்கரசர் தேவாரம் 5

2. பதினோராந் திருமுறை, விநாயகர் திருவிரட் - செ - 1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலேந்தியிருக்குங்கால் பிறரொருவர் கூற்றாக எழுந்ததென்பாரும், பெற்றோர் தம்குழந்தையைப் பாதுகாக்கு நிமித்தம் மற்றோர் பால் கையடைப்படுத்து நிலையிற் கூறியதாக எழுந்ததென்பாரும் உளர்.

இதன்கண், இறையன்பில் ஈடுபட்ட கன்னியர் தமக்குக் கணவராந்தன்மையுடையார் இன்ன தகுதியினராதல் வேண்டுமெனத் தம் தாயரிடம் முறையிட்டுக் கொள்ளுதல் போன்று, தாயினுமினிய பெருமானைத் தாய்மை நிலையில் வைத்து "எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க" என்பது முதலாகவுள்ள தம் குறிக்கோளை விண்ணப்பித்துக் கொண்டமையின் சத்தியைவியந்தது குறிப்பிற் புல னாயவாறு அறிக.

போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான் முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழி நீ ராடேலோ ரெம்பாவாய். (20)

(க-ரை) - முன்னைத் திருப்பாட்டில், பயன் அளித்தற்கேயன்றி அதற்கு ஏதுவாக உயிர்கள் செய்யும் அன்புப்பணிகள் நிறைவேறுதற் கும் இறையருள் இன்றியமையாதது என்னும் உண்மையைப் புலப் படுத்தருளிய அடிகள், இத்திருப்பாட்டில் உயிர்களைக்கொண்டு தனக் குத் தொண்டுசெய்வித்துப் பயனளிக்குங் கடமையை இறைவன் மேற் கொண்டது, அவ்வுயிர்களுக்கு உடலைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் ஐந்தொழிற்குறிப்பின்பாற்பட்டு அவற்றிற்கு இனமா மென்பதை அருளிச்செய்கின்றார்.

(ப-ரை):- எங்கோன் எங்கள் தலைவனே, போற்றி ஆதி யாம் நின்பாதமலர் அருளுக எம்மைப் பாதுகாத்து எப்பொட்கும் முதலாகிய நின் திருவடி மலர்களை அருள்வாயாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி அந்தம் ஆம் நின் செம்மை தளிர்கள் அருளுக எம்மைப் பாதுகாத்து எப்பொருட்டும் முடிவாயே நின் செவ்விய திருவடிகளை அருள்வாயாக. எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன் பாதம் போர் - எல்லா உயிர்களுக்கும் தோன்றதற்கு ஏதுவாகிய பொன் போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க, எல்லா உயிர்க்கும் போகம் எல்லா உயிர்களுக்கும் நுகர்தற்குரிய காப் பாகும் அழகிய திருவடிகள் எம்மைக் காத்தருள்க, எல்லா உயிர்க்கும் ஈறுஆம் இணைகடிகள் போற்றி - எல்லாவுயிர்களுக்கும் ஒடுக்கத்திற்கு ஏதுவாகிய இரண்டு திருவடிகளும் எம்மைக் காத்தருள்க. மால்நான் முகனும் காணத புண்டரிகம் போற்றி திருமாலும் நான்முகனும் காண இயலாத திருவடிகள் எம்மைக் காத்தருள்க. யாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன் மலர்கள் போற்றி நாம் எல்லாம் உய்யும் வண்ணம் அடிமைகொண்டு இன்பம் அருளும் பொன் போன்ற திரு வடிகள் எம்மைக் காத்தருள்க, யாம் ஆடும் மார்கழி நீர் போற்றி நாம் ஆடுகின்ற இம் மார்கழி நீர் எம்மைக் காத்தருள்க என்பது,

(வி -ரை) - இத் திருப்பாட்டு நீராடல் நிறைவேறியதும் அதன் பயனாகப் பெண்களெல்லோரும் ஒருங்கே சேர்த்து தம்மைப் பாதுகாக்கும்படி ஐந்தொழிற்கும் தலைவனாகிய சிவபெருமானையும், அவனைப் புகழ்ந்து பாடியாடுதற்கு வாயிலாகிய மார்கழிநீரையும் வேண்டிக் கோடலாக அருளிச்செய்யப்பட்டதாகும். இத்திருப்பாட்டில் சிவபெரு மானுக்கே உரிய அருட்செயல்கள் ஐந்தும் கூறிப் புகழப்பட்டிருந்த லின், அதற்கேற்ப இதற்கு முன்னுள்ள திருப்பாட்டில் உள்ள எங் கோன் என்பதையே கண்டும் விளியாகக் கொள்ளலாயிற்று. இதன் எண் போற்றி என்னும் சொற்கள் எட்டு வந்துள்ளன. அவற்றுள் முதவிரண்டும் எச்சங்களாகவும், ஏனய ஆறும் இகரவீற்ற வியங்கோளா கவும் கொணடு பொருள் கூறப்பட்டன. எச்சங்களுக்கு அருளுக என்பன முடிவாகும். எப்பொருட்கும் இறைவனுடைய திருவடியே முதலும் , ஈறுமாகு மென்ப.1-ஆதியும் அந்தமுமான ஐயாறன் அடித் தலமே" என்பது தமிழ்மறை, திருவடிக்கு முதன்மைகூறுங்கால் மலரெனவும், ஈறுகூறும் கால் செந்தளிர்கள் எனவும் கூறியது . - ஓங்கியுளதாம்.

1.திருநாவுக்கரசர் தேவாரம் 179

2.சிவஞானபோதம் -சூ-1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சைவவுண்மை புலப்படற்கென்க. தளிரினின்றே மலர் தோன்றும் உண்மை கருதத்தக்கது. இறைவன் திருவடிகள் 1" சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன், முந்திப்பொழிவன முத்தி கொடுப்பன" என்றபடி உயிர்களுக்குப் போகம் வீடுகளை யருளும் இயல்பின வென்பது. ஈண்டுச் செந்தேன் என்றது போகத்தைக் குறிக்கும். முந்திப் பொழிவன என்றதனால் முத்தியளித்தல் முடிவில் என்பது பெறப்படும். பாதுகாத் தல் முறையே இம்மை மறுமைகளில் போகநுகர்ச்சிக்கும், பின் வீட்டின் பத்திற்கும் ஏதுவாகிய பொருள், அறம், ஞானங்களுக்குத் தடைகள் நேராமைப் பொருட்டாம். ஆதியாம் நிலையிற் போகமும், அந்தமாம் நிலையில் வீடும் வேண்டப்படுவனவாம்.

முதலிற் கூறிய ஆதியந்தம் நான் முகன் முதலிய தேவர்களைப் படைத்துக் காத்து அழித்தலையும், பின்வரும் அடிகளிற் குறிப்பிடும் முத்தொழில்கள் அத்தேவரை அதிட்டித்து நின்று மற்றை உலகுயிர்களைப்பற்றிச் செய்தலையும் புலப்படுப்பன. இவ்வுண்மையை முந்திய முதல் நடு விறுதியுமானாய்" என்று அடிகள் பிறிதோரிடத் துக் கூறியமையானும் உணர்க. இங்கே "முந்திய" என்னும் அடை யால் அம் முதல் நடு இறுதி பெரும் படைப்புமுதலியவற்றைக் குறிக்குமென்பதும், பிந்திய படைப்பு முதலியனவும் உள்ளன வென்பதும் பெறப்படுமாறறிக. பிந்திய படைப்பு முதலியவற்றை இடைப்பட்ட முத்தொழில்கள் என்ப அவற்றை அயன் முதலியோர் இறைவன் ஆணைபெற்று அவன் முன்னிலை யிற் செய்வர் என்பது. இதனை 3 மூவண்ணல் தன் சந்நிதி முத்தொழில் செய்யவாளா, மேவண்ணல்' என்பதனாலும் அறிக.

இறைவன் திருவடி சத்தியைக் குறிக்கும் என்பது முதல் திருப்பாட்டு உரையிறுதியில் விளக்கப்பட்டுள்ளது. தீயின் சத்தியொன்றே சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபட்டால் கடுஞ்சத்தி அடுஞ்சத்தியெனப் பலதிறப்படுமாறுபோல, சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டால் பரை முதலியவாய்ப் பல்வேறுவகைப்படுமென்ப. அவற்றுள், படைப்பு முதலிய தொழில்களைச் செய்வன செனனிமுதலிய சத்திகளெனச் சிவாகமங்கள் கூறும். அவ்வுண்மை குறித்தே படைப்பு

1. திருநாவுக்கரசர்தேவாரம் 4- 19-1.
2. திருவாசகம் - திருப்பள்ளியெழுச்சி - செ.8.
3. பரஞ்சோதி - திருவிளை - கடவுள்வாழ்த்து - செ-6.23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய அருட் செயல்கள் ஐந்திற்கும் வினைமுதல் தன்மை இறைவன் திருவடிமேல் ஏற்றி ஈண்டுக் கூறப்பட்டது. எல்லாவுயிர்களும் தோன்றுதற்கு ஏதுவாகிய திருவடிகள் என்றது. படைப்புத் தொழிற்கு வினைமுதலா தலைக் குறிக்கும். போகம் வினைப்பயன்களை நுகர் தல். அஃது ஈண்டுக் காத்தற்றொழிலைக்குறிக்கும் ஆதலின் போகம் ஆம் என்றது. காத்தற்குவினேமுதலாகிய என்றபடி, ஈறு - அழித்தல் ஒடுக்கம். ஆம் என்பதற்கு முன்னுரைத்தாங்குரைக்க. இத்துணையும் ஆக்கல் அளித்தல் அழித்தலாகிய முத்தொழில்களும் கூறப்பட்டன. இனி மறைத்தல் அருளல் கூறப்படும். அவ்விரண்டினுள், மறைத்தலா வது உயிர்கள் தம் வினை முடியும்வரை உண்மையை யறியாமல் பயனுகர்ச்சியில் ஈடுபட்டு மயக்கச்செய்தலா தலின், அம்மயக்கம் திருமால் பிரமன் முதலியோர்க்கும் உண்டு என்பதைப் புலப்படுத் தற்கே அவர்பாலேற்றி"போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரி கம்' என்றார். அரு ளல்- கட்டொழித்து வீடுபெறச்செய்தல், அப்பேற் றுக்குத் தம்மை ஆட்கொண்ட கருணையே காரணமாகம் குறிப்பிட் டுப் போற்றியாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்" என்ற னர். இவ்வருட்செயல்கள் ஐந்தும், இறைவன் உயிர்கண்மேல் வைத்த கருணையால் நிகழ்வனவாம்.

இவற்றுள், அருளல் ஒழித்து ஒழிந்த செயல்களெல்லாம் பிறப் பிறப்புக்களிற் படுத்துத் துயருறு த்துவன வாகலின், அவற்றைச் செய் வது அருளாமாறு யாங்கனம் எனின், அதற்கு விடையாகச் சிவஞாவ சித்தியார் என்னும் நூலில், ஒடுக்கமா வது பிறப்பிறப்புக்களிற் சுழன்று வருந்தும் உயிர்களுக்கு இளைப் பாற்ற லும், தோற்றமாவது உயிர்களின் கன்மங்கழியுமுகத்தால் மல பரிபாகம் வரச்செய்தலும், காப்பாவது கன்மங் கழியும்படி நுகர்வித்த லும், மறைப்பாவது இரு வினையொட்டி வருவித்து வலங்களை முதிர் வித்தலும், அருளாவது கட்டொழித்து இன்புறுத்தலும் ஆதலின், ஆராயுங்கால் இவ்வைந்து தொழிலும் அருட்செயலே என்னும் பொருள் தோன்ற,

*1.* " அழிப்பிளைப் பாற்ற லாக்கம் அவ்வவர் கன்மமெல் லாம்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பில
தெழித் திடல் மலங்க ளெல்லா மறைப் பருள் செய்தி
தானும்பழிப்பொழி பத்தம் வீடு பார்த்திடி வருளே யெல்லாம்"என்று

கூறப்பட்டிருத்தல் அறிக

*1. சூ 1 அதி – 2 – செ - 37*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 "எக்கிர மத்தினாலும் இறைசெயலருளே யென்றும்" என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது. சிவப்பிரகாசம் என்னும் நூலில் 'ஏற்றவிவை யரனருளின்' என்னும் பதினெட்டாஞ் செய்யுள் உரையில்சிவபெருமானே, பஞ்ச கிருத்தியஞ் செய்பவன் என்பதற்குப் பிரமாண மாக மதுரைச் சிவப்பிரகாசர் இத்திருப்பாட்டை யெடுத்துக் காட்டியிருத்தலும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

இவ்வளவில் பெண்கள் எல்லோரும் பாவைநோன்பு குறித்து நீராடியதன் பயனாகத் தம்மைக் காத்தருளும் வண்ணம் இறைவனை வேண்டி, முடிவில் இறைவன் திருவருட்பேற்றுக்குச் சாதனமாக மேற் கொண்ட அம் மார்கழி நீராடலைக் குறித்தும் காப்பு வேண்டுவராய் "போற்றியாம் மார்கழி நீராடலோ ரெம்பாவாய்" என்று முடித்தனரென்பது.

இதன்கண் இறைவன் திருவடியைப் பலமுறை புகழ்ந்து காப்புவேண்டி யிருத்தலின் சக்தியை வியந்தது பெறப்பட்டவாறறிக. திருவாதவூரடிகள் அருளிச்செய்த திருவாசகத் திருமறைக்கண் உள்ள திருவெம்பாவைக்குப் பாண்டிவள நாட்டில் பூங்குன்ற நாட்டுத் தலைநகராகிய மகிபாலன்பட்டி மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர் சைவசித்தாந்த வித்தகர் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் இயற்றிய கதிர்மணிவிளக்கம் என்னும் பேருரை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

*1. சிவஞானசித்தி - சூ 2 - செ-15.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

**"நெஞ்சமதில் நிறுத்துகின்றோம்..."**

எங்கள் அன்புத் தெய்வம் அமரர் கந்தையா பரமஞானம் அவர்கள் காலமான செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எம் துயரில் பங்கு கொண்டோருக்கும், மலர்வளையம் வைத்தோர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர்களுக்கும், அன்னாரின் அந்தியேட்டி சபீண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், கிரியைகளை சிறப்புறச் செய்த ஆச்சாரியப் பெருந்தகைகளுக்கும் அச்சிட்டு உதவிய சிவகஜன் பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வரணி இயற்றாலை,
வரணி.



- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.



-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Printed By : Sivakajan press - Kodikamam 0212050303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org